சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - 5

# பெண்பாற் புலவர்கள்



கழக வெளியீடு: ௬௯அ

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை - V

# பெண்பாற் புலவர்கள்

ஆசிரியர்:
புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1953.
Reprint: Nov., 1956.

Sangath Thamizhp Pulavar Varisai - Book V

PENNBAR PULAVARGALL

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

# பதிப்புரை

புலத்துறை முற்றிய நலத்துறையில் நம் செந்தமிழ் நாடு, பண்டை நாளில் முதற்கண் நின்றது; அற்றை நாளில் கற்புக்கடம்பூண்ட பொற்புடை மகளிரும், பொருந்திய கல்வி திருந்திய மகளிருமாக இலங்கி, நாட்டைப் பொன்னாடாக்கிப் புகழுற்றனர்.

அக்கால மகளிர், பெண்மை யென்னும் உடலுக்கு உண்மை உயிராகத் திகழ்ந்திருந்தனர். அவர்தம், அன்பு அறம் மறம் தாய்மை காதல் முதலிய பண்புகளுக்குச் சங்கநூல்கள் சான்று தருகின்றன. அச் சங்கநூல்களிலும் இப் பெண்ணியலார் தந்த அரிய கருத்துக்கள் நிறைந்த பாமணிகள் மிளிர்கின்றன. அவைகளை ஆக்கிப் புகழுடல் பெற்று இன்றும் நம்மிடையே நிலவும் பண்டைத் தமிழ்ப்புலமைப் பெண்மணியார் **இருபத்தறுவர்** வரலாறே இந்நூல்.

இதனை நன்முறையில் அவர்கள்தம் பாவே துணையாகக் கொண்டு நுணுகிச்சென்றாய்ந்து, உண்மையையே திரட்டிக் கொணர்ந்து வரலாறாக—உண்மை நூலாக—**புலவர் திரு. கா. கோவிந்தனவர்கள்**, தெளித்துத் தந்துள்ளார்கள்.

இந்நூலை உயரிய முறையில் பதித்து நம் தமிழக மாந்தர்க்குக் கூட்டுண்டு மகிழ, **சங்கத் தமிழ்ப்புலவர் வரிசையில்** ஐந்தாவதாக வெளியிட்டுள்ளோம். தமிழ் கூறு நல்லுலகமக்கள் இதனை ஏற்றுப் போற்றிக் கற்றுப் பயன் பல பெறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்க |
|---|---|---|
| க. | அஞ்சி அத்தைமகள் நாகையார் | 1 |
| உ. | அள்ளூர் நன்முல்லையார் | 4 |
| ங. | ஆதி மந்தியார் | 9 |
| ச. | ஊண்பித்தை | 14 |
| ரு. | ஒக்கூர்மாசாத்தியார் | 16 |
| சா. | கச்சிப் பேட்டு நன்னாகையார் | 21 |
| எ. | கழார்க்கீரன்எயிற்றியார் | 23 |
| அ. | காக்கைபாடினியார் நச்செள்ளையார் | 25 |
| கூ. | காமக்கணிப் பசலையார் | 36 |
| க0. | காவற் பெண்டு | 39 |
| கக, | குமுழிஞாழலார் நப்பசலையார் | 42 |
| கஉ. | குறமகள் இளவெயினி | 44 |
| கங. | குறமகள் குறிஎயினி | 47 |
| கச. | தாயங்கண்ணியார் | 49 |
| கரு. | பாரி மகளிர் | 51 |
| கசா. | பூங்கணுத்திரையார் | 63 |
| கஎ. | பெருங்கோப் பெண்டு | 66 |
| கஅ. | பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார் | 69 |
| ககூ. | பேய்மகள் இளவெயினி | 74 |
| உ0. | பொன்முடியார் | 76 |
| உக. | போந்தைப் பசலையார் | 82 |
| உஉ. | மாற்பித்தியார் | 85 |
| உங. | மாறோக்கத்து நப்பசலையார் | 88 |
| உச. | வெண்ணிக் குயத்தியார் | 99 |
| உரு. | வெள்ளிவீதியார் | 101 |
| உசா. | வெறிபாடிய காமக்கண்ணியார் | 109 |

# பெண்பாற் புலவர்கள்

## க. அஞ்சி அத்தைமகள் நாகையார்

நாகையார் என்பது இவர் இயற்பெயர்; அஞ்சி அத்தைமகள் என்பது அவர் உறவைக்குறிப்பது; உறவைக் குறிக்கும் தொடர்கள் புலவர் பெயர்களுக்குமுன் வழங் கப்படுவது அக்கால வழக்கமாம்: பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை யார், அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்ற பெயர்களையும் நோக்குக. அத்தொடரால், அஞ்சி யென்பானொருவனுடைய அத்தையின் மகள் நாகையார் என்பது பெறப்படும். தகடூரைத் தலைநகராகக்கொண்டு நாடாண்ட ஓர் அரசன் பெயர் அதியமான் நெடுமான் அஞ்சி என்பது; நாகையார், இவ்வதியமான் நெடுமானஞ் சியின் கடிய குதிரையையும், நெடிய தேரையும், பாணர் பலர் அவன் புகழ்பாடிப் பரவுவதையும், தன் பாட்டில் பாராட்டியுள்ளார். இவர் பெயரையும், பாட்டின் பொரு ளையும் ஒருங்கே வைத்து நோக்கினால், இவர் அவ்வஞ்சியின் அத்தை மகளே என்று உறுதிகொள்ளலாம். ஆகவே, அரசர்குடியிற் பிறந்த பெண்பாற் புலவர்களுள் இவரும் ஒருவர் என்பதும் உறுதிசெய்யலாம். இவர் பாடிய பாட் டாக நமக்குக் கிடைத்திருப்பது அகநானூற்றில் காணப் படும் செய்யுள் ஒன்றே.

அண்மையில் மணம்செய்து கொண்டவள் ஒருத்தி, கணவன் வீடுசென்று வாழ்ந்து வருகிறாள்; அவள் உயிர்த் தோழி ஒருத்தி, அவள் அங்கே வாழும் வாழ்க்கையைக்

காணவேண்டும் என்று விரும்பினார். அவள், அவனைப் பெற்றுவாழத் துணைபுரிந்தவள் இத்தோழியே; அவள் அவனை அறியாமுன், அவன் உயர்குடிப் பிறப்பையும், அன்புகொண்டு நட்புச் செய்தவர்களை என்றும் பிரிந்தறியாப் பெருந்தன்மையையும், பிறர்க்குக் கேடுதரும் தீச்சொல்லை என்றும் கூறியறியா அவன் நாவின் சிறப்பையும், எவ்வுயிரும் தன் உயிரெனக்கொள்ளும் அவன் அன்புடைமையினையும் அறிந்துவந்து அவளுக்குக் கூறி, அவனை மணந்துகொள்ள இசைய வைத்தவள் இத் தோழியே.

தானும் அவளும் தனியேயிருந்த நேரம்பார்த்து அவளைநோக்கி, "உன் கணவர் உன்னிடத்தில் எவ்வாறு பழகுகிறார்?" என்று கேட்டாள் தோழி. அதற்கு அவள், "தோழி! நம்முடைய ஊரில் திருவிழா நடைபெறுங் காலத்தில் கூத்து நிகழ்வதை நீ பார்த்திருப்பாய் அல்லவா? அப்போது, விறலி முன்னே ஆட, அவள்பின்னே முழா ஏந்திய கூத்தன் நிற்பதைக் கண்டிருப்பாய்; அதை நினைவூட்டும் காட்சிகள் பல இங்கே உள்ளன; அவற்றுள் ஒன்றை யானும் கண்டேன்; அழகிய அருவியின் அருகே மயிலொன்று ஆடிக்கொண்டிருந்தது; முழவுபோன்ற பெரிய பலாப்பழத்தைத் தன் வயிற்றில் தழுவிக்கொண்டே, அம் மயிலின்பின் நின்று அதன் ஆடலைக்கண்டு மகிழும் ஆண் குரங்கொன்று அக் காட்சியைக் காணுமாறு தன் இனக் குரங்குகளையும் கூவி அழைத்தது; இதையேன் உனக்குக் கூறுகிறேன்? எங்கள் நாட்டில் உள்ள விலங்குகள் இவ்வாறு மகிழ்ந்து வாழ்கின்றன என்றால், என் கணவர் இயல்பைச் சொல்லவேண்டுவதே இல்லை என்பதற்காகவே. நாள்தோறும் இனத்தாரையும் விருந்தினரையும் அழைத்து உடனிருந்து உண்டும், என்னோடு அன்பு காட்டியும் வாழ்கிறார்; நம் அஞ்சியின் புகழ்பாடும் பாணன், புதிது புதிதாக இயற்றிப்பாடும் பண்ணைக் காட்டினும் அவர் இனியர்; என் திருமணத்தன்று அவர் நமக்கு எவ்வளவு இனியராகவும் நல்லவராகவும் தோன்றினரோ, அதைக்காட்டினும் பன்மடங்கு இனியர்; நல்லவர்; அவ

னைப்பற்றி முன்பு நீ கூறியன எல்லாம் உண்மையே என்பதையும் உணர்ந்தேன்; அத்தகையானை நான் மணம் செய்துகொள்ளத் துணைபுரிந்தவள் நீயன்றோ? நீ வாழ்க பல்லாண்டு!" என்று கூறி மகிழ்ந்து வாழ்த்தினாள்.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இவ்வளவு சிறந்த கருத்துக்கள் பலவற்றையும் அழகாக அமைத்துப் பாடியுள்ளார்; குடம்போலும் பெரிய பலாப்பழத்தினைத் தழுவிக்கொண்டே ஆடும் மயிலின் பின்நிற்கும் குரங்கு, ஆடும் விறலியின்பின் முழவிசைத்து நிற்பானை ஒக்கும் என உவமை காட்டிக் கண்ணிற்கும், உயர்குடிப் பிறப்பும், பிரிந்தறியாப் பெருநட்பும், கொடுமை கூறாமையும், ஆருயிர் மாட்டு அன்பும் உடையான் ஆண்மகனவன் எனக் கூறிக் கருத்திற்கும், விருந்தளிக்கும் கவின் மிகுந்துளது அப் பாட்டு.

"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்னது ஆகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிரும் குன்ற நாடன்,
குடிநன் குடையன்; கூடுநர்ப் பிரியலன்;
கெடுநா மொழியலன்; அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை; காணில் காதலம் தோழி!
கடும்பரிப் புரவி, நெடுந்தேர் அஞ்சி,
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்,
வதுவை நாளினும் இனியனால் எமக்கே." (அகம்: ௩௫௨)

## உ. அள்ளூர் நன்முல்லையார்

"'எனக்கே உரிய என்தாய் நாடிது' என எண்ணு தான் உள்ளம் இழிந்த உள்ளமாம்; அத்தகைய இழிந்த உள்ளம் உடையாரும் உளரோ உலகில்?" என்று கேட்கின்றார் ஆங்கிலப் புலவர் ஒருவர்.

"Breaths there the man, with soul so dead,
Who never to himself hath said,
This is my own my native land?"

புலவர்கள், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்ற பரந்த பேருள்ளம் உடையவரே எனினும், எந்நாடும் தம் நாடாய் எவ்வூரும் தம்மூராய்க்கொண்டு வாழ்பவரே எனினும், தாம் பிறந்தநாடு நற்றவ வானினும் நனி சிறந்ததுவே என்ற எண்ணம் அவர்க்கும் தோன்றாமல் இராது. அள்ளூர் நன்முல்லையார் அத்தகைய நாட்டுப்பற்றும், ஊர்ப் பற்றும் கொண்ட உயர்உள்ளம் உடைய புலவராவர்; தம் பெயரோடு, தாம் பிறந்த ஊர்ப் பெயராகிய அள்ளூர் என்பதையும் சேர்த்து "அள்ளூர் நன்முல்லையார்" என்று வழங்கி, தம் புகழோடு தம் ஊர்ப்புகழையும் வளர்த்துள்ளார் அவர்; அம்மட்டோடு அவரை நிற்கவிடவில்லை அவர் ஊர்ப்பற்று; தாம் பிறந்த அவ்வூரைத் தாம்பாடிய பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியும் உள்ளார்.

அகத்துறைப் பாடல்களில் வரும் தலைவியின் அழகு நலத்தை அக்காலத்துத் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய நகரங்களின் அழகு நலத்திற்கு ஒப்பிடுதல் புலவர்கள் வழக்கமாம். அவ்வாறு ஒப்பிட்டுக் கூறும் புலவர்கள் மேற்குக் கடற்கரையைச் சார்ந்த தொண்டி என்ற துறைமுகப் பட்டினத்தையே பெரும்பாலும் ஒப்பிட்டுக் கூறுவர்: "தொண்டியன்ன என் நலம்" "தொண்டியன்ன எம் ஒண்டொடி" "தொண்டியன்ன இவள் நலன்" என வருதல் காண்க. ஆனல், நம் நன்முல்லையார், தாம் பாராட்டிய தம் தலைவியின் நலத்திற்கு அத் தொண்டிநகரை ஒப்புமை

கூறுது, தாம் பிறந்து வாழ்ந்த தம் அள்ளூரையே ஒப்புக் கூறுகின்றார்; தம் ஊர் நினைவு வந்தவுடனே, அவ்வூரின் சிறப்பெல்லாம் அவர் மனக்கண்முன் வந்து நிற்கலாயின; அவ்வூரெங்கும் மலைபோல் குவிந்துகிடக்கும் செந்நெற் குவியல்களை நினைந்து நினைந்து மகிழ்ந்தார்; ஊர்ப்பற்று ஊரோடு நின்றுவிடவில்லை; அவர்க்கு ஊராளும் அரசனை யும் நினைப்பூட்டிற்று. பகைவரின் யானைப்படையையும் கொன்றழிக்கும் தம் அரசன் வாட்படை; அவ்வாட்படைக் குத் தலைவனாகிய தம் அரசன் கொற்றம் ஆகிய அவ்வள வையும் எண்ணி எண்ணி இறும்பூதெய்தினார் அவர்; "இவ்வளவு சிறப்பும் உடையது எங்கள் ஊர்" என்று பாராட்டினார்:

"செறுநர்,
களிறுடை அருஞ்சமம் ததைய நூறும்,
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர்" (அகம்: ௪௬)

என்று பாடினார்.

அவர் பாடிய இப் பாட்டினால், அவர் பாண்டி நாட் டினர் என்பதும், அவர் ஊராகிய அள்ளூர் நீர்வளமும் நிலவளமும் மிக்க மருதவயல்கள் சூழ்ந்தது என்பதும் அறியப்படும்.

அள்ளூர் நன்முல்லையார் பத்திற்கு மேற்பட்ட பாடல் களைப் பாடியுள்ளார்; எனினும், அவற்றுள் ஒன்றும், அவர் வாழ்க்கை வரலாற்றை அறியத் துணைபுரிவன அல்ல; அவை, அவர் வாழ்க்கையை அறிய வழி காட்டவில்லை எனினும், அவர்தம் புலமையின் சிறப்பைப் புலப்படுத்த அவை சிறிதும் தவறவில்லை. அள்ளூர் நன்முல்லையார், நல்லிசைப் புலமை வாய்ந்த நற்பெருங் கவிஞர்; கண்ணில் காணும் காட்சிகளைக் கருத்தோடு இழைத்துக் கவி பாடும் இயல்பினர்; அவர் பாடல்களில் பொதிந்துகிடக்கும் உவமைகள் சிலவே, அவர் புலமைச்சிறப்பைப் புலப்

படுத்தப் போதியனவாம்; அவற்றுள் இரண்டைமட்டும் ஈண்டுத் தருகிறேன் :

அள்ளூர் நன்முல்லையார் வாழ்ந்த பாண்டிநாடு, செல்வத்திற் சிறந்த நாடு; அந்நாட்டில் வாழும் மக்கள் அழகிய அணிபல அணிவதில் ஆர்வமிக்கவர்; அவர் ஆர்வத்தை நிறைவேற்றித்தரும் வகையில் அழகிய அணிகளை ஆக்கித்தரும் ஆற்றல்மிக்க பொற்கொல்லர் பலர் பாண்டிநாட்டில் பெருகி வாழ்ந்துவந்தனர்; ஆதலின், அப் பொற்கொல்லரையும், அவர்கள் தொழிலாற்றும் முறைகளையும் அறிந்திருந்தனர் நம் முல்லையார்: அவர்களுள் ஒரு பொற்கொல்லன், பொற்காசுமாலை ஒன்று செய்துகொண்டிருக்கிறான்; பொற்காசுகள் பவழவடிவில் அமைந்துள்ளன; அவற்றினூடே துளையும் செய்யப்பட்டுளது; அவற்றைக் கோப்பதற்கான பொற்கம்பியையும் இழைத்து வைத்துக்கொண்டுள்ளான்; பொற்காசை இடதுகைப் பெருவிரல் ஆள்காட்டிவிரல் இரண்டின் நுனியில் பற்றிக் கொண்டான்; வலது கையில் பொற்கம்பியைப் பற்றி, அதன் கூரிய நுனியை இடதுகையில் பற்றியுள்ள அப் பொற்காசின் இடையே அமைந்த துளையூடே செலுத்திக் கோத்துக் கொண்டிருக்கிறான்; இக் காட்சியைக் கண்டு கண்டு மகிழ்ந்துள்ளார் நம் முல்லையார்; தடித்த பெருவிரல் கீழே இருக்க, ஆள்காட்டி விரல் சிறிது நீண்டு வளைந்து பெருவிரலின் நுனியைச் சேர, அவ்விரண்டிற்கும் இடையே பொற்காசு அமைந்திருக்கும் காட்சி, அவர் கண்ணையும் கருத்தையும்விட்டு அகலவில்லை; அதைக் கண்டு மகிழ்ந்த அவர், அவ்வூரை யடுத்த சோலையுள் நுழைந்து செல்கின்றார்; அங்கே ஒரு வேப்பமரம், நன்கு பழுத்து விளங்குகிறது; பழுத்த பழங்களைப் பறவைகள் பலவும் கூடிக் கவர்ந்து செல்கின்றன; அப் பறவைகளுள் ஒரு கிளி, தன் வளைந்த வாய்க்கிடையே நன்கு கனிந்த அப் பழங்களுள் ஒன்றைக் கவ்விப் பற்றிக்கொண்டுளது; அடி அலகு தடித்து, மேல் அலகு வளைந்து விளங்கும் கிளியின் வாயில், பொன்னிறம்போற் பழுத்து விளங்கும் வேப்

பங்கனி ; இக் காட்சியையும் காணுகின்றார் முல்லையார் ; ஊரில்கண்ட பொற்காசு ஏந்திய பொற்கொல்லன் கையின் காட்சிக்கும், இக் காட்சிக்கும் உள்ள ஒற்றுமையை உணர் கிறார் ; அவர் உள்ளம் அவ் வொப்புமையில் ஊறிவிடு கிறது ; கிளிவாய் வேம்பிற்குப் பொற்கொல்லன் கைப் பொற்காசை ஒப்புமை கூறியும் உள்ளார் ;

“ கிள்ளை,
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்,
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகாசு எய்க்கும்.” (குறுந் : சு௭)

காணும் காட்சிகளை எவ்வளவு கருத்தூன்றிக் கவ னித்துள்ளார் என்பதை உணருங்கள் !

தரையோடு தரையாகப் படர்ந்திருக்கும் செடி வகை களில் நெருஞ்சியும் ஒன்று ; சிறுமழை பெய்தவுடனே தளிர்த்துப் பூக்கத் தொடங்கிவிடும் ; பூக்கள் மிகவும் சிறியதாய், மஞ்சள் நிறமுடையதாய் நெருங்கப் பூத்திருக் கும் ; அக்காட்சி கண்டோர் மனதை மகிழ்விக்கும் ; இவ் வழகிய காட்சி சின்னாள் வரையிலுந்தான் ; பின்னர், அப் பூக்கள் காயாக மாறத்தொடங்கும் ; அக் காய்கள் முற்றின் முள்ளாக மாறும் ; அந்நிலையில், அது, தன்னை மிதிப்பார் கால்களையேயன்றித் தன் அண்மையில் வருவார் கால்களையும் தைத்துத் துன்புறுத்தும். நெருஞ்சியின் இவ்வியல்பை நன்கு உணர்ந்தவர் நம் நன்முல்லையார் ; தொடக்கத்தில், கண்ணிற்கு விருந்தளித்துக் கடைசியில் காலிற்குக் கடுந்துயர் அளிக்கும் நெருஞ்சியின் இக்கொடுஞ் செயலை உலகத்தார்க்கு உணர்த்த எண்ணினர்.

ஒரு தலைவி, ஒரு தலைவனை மணந்து வாழ்ந்துவந்தாள் ; தொடக்கத்தில் அவன் அவளிடத்தில் அன்பு மிகக்கொண்டு வாழ்ந்துவந்தான் ; அதனல் அவள் மிகவும் மகிழ்ந்து வாழ்ந்தாள் ; இவ்வின்ப வாழ்க்கை சிலநாள் நடைபெற் றது ; அவன், அவள்பால் கொண்டிருந்த அன்பு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று ; அவளை மறந்து

மறைந்து வாழவும் முற்பட்டான்; அதனால் அவ்வில்லற வாழ்க்கை அவளுக்குத் துயர்தரத் தொடங்கிவிட்டது; முன்னர் அன்புகொண்டு இன்பம் அளித்த அவனே, பின்னர் அவளை மறந்து துன்பம் செய்யவும் தொடங்கினான்; தலைவனின் இக் கொடுஞ்செயலைத் தமிழர்க்கு எடுத்துக் காட்டி இடித்துரைக்க விரும்பிய நம் நன்முல்லையார், அவன் செயலை நெருஞ்சிப்பூவின் செயலோடு ஒப்பிட்டுக் கூறிக் கண்டிப்பாராயினார் :

"சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாஅங்கு,
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோமென் னெஞ்சே." (குறுந்: உ0உ)

எவ்வளவு அழகிய உவமை !

பொருள் பொதிந்த பாடல்களைப் புனைவதோடு, அப் பாக்கள்வழியே அரிய அறிவுரைகள் பலவற்றையும் அள்ளிக் கொடுத்துள்ளார் அள்ளூர் நன்முல்லையார்; தம்மோடு தொடர்புடையார், தமக்குத் துன்பம் செய்தார் எனினும், அவர்தம் அச் செயலைப் பலர் அறியத் தூற்றித்திரிதல் பண்புடையோர் செயல் அன்று; தகுதியுடையோர் அதைச் செய்யார் என்று ஓரிடத்தே கூறுகிறார்.

தம்மீது அன்பும் ஆர்வமும்கொண்டு மதியாதார் பின் சென்று மண்டியிட்டு வாழ்வதினும் மாண்டு மறைதல் மாண்புடையதாம்.

"நன்னலம் தொலைய, நலம்மிகச் சாஅய்,
இன்னுயிர் கழியினும் உரையல்" (குறுக்: கூ)

என்று மற்றோரிடத்தே பெருமையைப் பேணுகிறார். இத்தகைய அழகிய அவர் பாடல்களை, அகநானூற்றினும், புறநானூற்றினும், குறுந்தொகையினும் கண்டு களிப்புறுக.

# ௩. ஆதிமந்தியார்

காவிரியாற்றின் இரு கரைகளிலும் வாழ்ந்த சோழ நாட்டு மக்கள், அவ்யாற்றில் புதுவெள்ளம் வரும்பொழுது புனல்விழாக் கொண்டாடி மகிழ்வர், விழா நடைபெறு மன்று ஆற்றலும் ஆண்மையும் மிக்க இளைஞர் பலர் அவ் யாற்றுநீரில் குதித்து எதிர்த்து நீந்தி ஆண்மைதோன்ற ஆடி மகிழ்வர். அவர்கள் அவ்வாறு ஆடி மகிழ்வதை அந் நாட்டு அரசன்முதல் அவ்வூர் மக்கள் அனைவரும், ஆற்றின் கரைக்கண் அமைந்த அரண்மிக்க அழகிய இடங்களி லிருந்து கண்டு மகிழ்வர்; இவ்வாறு புனல்விழா நடை பெறும் இடங்களிலொன்று கழார்ப்பெருந்துறை. அது கடற்கரைக்கு அண்மையிலுள்ளது; காவிரிப்பூம்பட்டி னத்திற்கு நான்கு அல்லது ஐந்துகல் தூரத்தில் இருப்பது. காவிரியாறு அவ்வூரருகே கிழக்கு நோக்கி ஓடும். அது, ஆற்று வெள்ளம் கரைகளை மோதி அழிக்கும் ஆற்றலோடு பாயும் இடம். ஆற்றுப்புனல் மோதி மோதி அழிப்பினும், அழிவுறாமல் வானுற வளர்ந்த மருதமரங்கள் நிறைந்தது அத்துறை. அங்கே நடைபெறும் புனல்விழாவினை, அர சர்களும் வந்து காணுவர். அவ்வளவு சிறப்புடையது! விழா நடைபெறும்பொழுது முழவொலியும் வேறு பிற ஆரவாரங்களும் அங்கே நீங்காமல் ஒலிக்கும். இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் அப்புனல் விழா.

இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் அப்புனல் விழா வில் ஓராண்டு விழாவின்போது, அப்பொழுது சோழ நாட்டை ஆண்டிருந்த கரியாற் பெருவளத்தான் தன் சுற்றம் சூழ்ந்துவர, விழாக்காணக் கழார்ப் பெருந்துறைக்கு வந்திருந்தான். அரசனோடு வந்து ஆற்றில்வரும் புதுப் புனலையும் அதில் குதித்து ஆடித் திளைக்கும் அந்நாட்டு இளைஞர்களையும் கண்டு நின்றோருள் அத்தி என்பானும் ஒருவன். அத்தி, அரசன் மைத்துனன்; மன்னன் கரிகால் வளவன் மகள் ஆதிமந்தியாரின் ஆருயிர்க் கணவன்; வஞ்சியைத் தலைநகராகக்கொண்ட சேரநாட்டுத் தலைவன்;

ஏறுபோல் நடையுடையான்; நிமிர்ந்து திரண்ட தோளு டையான்; அடர்ந்து சுருண்டு கருத்த மயிருடையான்; கலீர் கலீர் என்ற ஒலியும், காண்டற்கினிய அழகும் வாய்ந்த கழல்புனை காலுடையான்; கரிய கச்சினை அரை யிலே கட்டிப் பசும்பொன்னாலாகிய ஒலிக்கும் பாண்டில் மணிகளை அக் கச்சின் மீது அழகுபெற அணிந்தவன்; வகைவகையான மலர்கொண்டு வனப்புமிக அமைந்த மாலை யினை மார்பிலே அணிந்தவன்; ஆற்றல் மிக்கோன்; ஆற்றுப் புனலில் குதித்து ஆற்றல்தோன்ற ஆடிப் பழகியோன்; அதனால் ஆட்டன் அத்தி (ஆடுதலில் வல்ல அத்தி) என்ற சிறப்புப் பெயரும் பெற்றோன்.

ஆடிப் பழகிய அவனால் அமைதியாய் அமர்ந்து அவ் வாடலைக்காண இயலவில்லை; ஆடை அணி அணிந்து ஆற்றில் குதித்தான்; விழாக்காண வந்திருந்தோர் அனைவரும் கண்டுமகிழ அருமையும் அழகும் தோன்ற ஆடிக்கொண் டிருந்தான். அத்தி, அந்நிய நாடாகிய சேரநாட்டான்; காவிரியாற்றில் அதற்குமுன் ஆடிப் பழகியறியான். ஆத லின், அவனால் அவ்வாற்றுப் பெருக்கின் ஆற்றலை அறிந்து கொள்ள முடியவில்லை, அதனால் ஆற்றுப்புனலில் ஆட வல்ல அவனை, அக் காவிரிப்புனல் அழுத்தி இழுத்துக் கொண்டு போய்விட்டது. ஆற்றில் ஆடிக்கொண்டிருந்த அவனை அங்கே காணாத மக்கள் அவலமுற்று அவனைத் தேடுவதில் ஆர்வங் காட்டலாயினர். ஆற்று வெள்ளத்தின் விரைவு அவனை வெகு தொலைவு கொண்டுபோய் விட்டபடி யால், அவர்கள் அவனை அத்துறைக்கண் தேடியும் காண மாட்டாமல் கண்ணீர்விட்டுக் கலங்கி நின்றனர்.

தந்தை கரிகாலன் அருகே யமர்ந்து தம் காதற் கொழுநன் அத்தியின் ஆடல்கண்டு அகமகிழ்ந்திருந்த ஆதி மந்தியார்க்கு அவன் மறைவு, ஆற்றொணாத் துயர் அளித் தது. ஆற்றுப்புனலின் ஆற்றலை எதிர்க்கும் ஆற்றல் அற்றுப்போனவிடத்து அப்புனல் வழியே தாமும் சென்று கரையேறவே அறிவுடையோர் முயற்சிப்பர். ஆடும்

தொழிலில்வல்ல அத்தி அதை அறிந்திருப்பன் என்று எண்ணினார் ஆதிமந்தியார். ஆகவே ஆற்றின் இருகரையிலும் இருக்கும் நாடுகளிலும், ஊர்களிலும் சென்று அவனைத் தேடுவாராயினர். அவ்வூர்களிலும் நடைபெறுகிறது இப் புனல்விழா; ஆடவரும் மகளிரும், மற்போர் விளையாட்டும், துணங்கைக் கூத்தும் ஆடி மகிழ்கின்றனர். அவர்களை அணுகி, “உங்களைப்போல் ஆடல் தொழில் வல்லான் என் கணவன். அவன் பெயர் அத்தி. உங்களைப் போல் ஆடி மகிழும் இளமைப்பருவம் உடையேன் யானும். என் உடலும், உயிரும் மெலிந்து வருந்தப் புனலாட்டு விழாவிலே மறைந்துபோயினன் அவன். உங்களில் யாரேனும் அவனைக் கண்டீரோ? என்று கேட்டுக் கேட்டு ஆதிமந்தியார் மனம் அலுத்துப்போனார். அவன் ஆடிய இடத்தினின்றும், பலநாடு பல ஊர்வரை தேடியும் அவனைக் காணமாட்டாமையால், ஆதிமந்தியார் அறிவு திரிந்தது. மதி மருண்டது; அத்தியின் ஊரும் பேரும் உருவும் கூறி, “அவனைக் கண்டீரோ?” என எதிர் வருவார் யாரையும் கேட்டு ஏங்குவாராயினர். அவர் முயற்சி வீண் போகவில்லை. இறுதியில் கடற்கரை யருகே, ஆற்றுப் புனலால் அல்லலுற்று மாழ்க இருந்த அவனை, மருதி என்னும் நல்லாள் ஒருத்தி கண்டு, கடலுள் புகுந்து, கடிது முயன்று கரைசேர்த்துக் காத்து ஆதிமந்தியார்பால் ஒப்படைத்தார். ஆனால், அந்தோ! அம் முயற்சியில் அம் மருதியார் கடலலைகளால் இழுப்புண்டு ஈறிலாப் புகழ் பெற்றார்.

ஆதிமந்தியாரின் புலமைச் சிறப்பைப் புலப்படுத்தும் அழகிய பாடல் ஒன்று குறுந்தொகைக்கண் உளது. இனத்தாலும், குணத்தாலும் ஒத்த ஒரு தலைவனும் ஒரு தலைவியும் காதல்கொண்டு, களவொழுக்கம் மேற்கொண்டு ஒழுகினர். அக் களவொழுக்கத்தை, அவர் இருவர் ஒழிய அயலார் யாரும் அறியார். தலைமகள் உயிர்த்தோழியும் உணர்ந்திலள். அவர்கள்தம் இவ் அன்புவாழ்க்கைக்கு இடையூறு ஒன்றுவரக் காத்திருந்தது. மணப்பருவம்

எய்தினள் தலைவி ; ஆகவே, தாயும் தந்தையும் அவளுக்கு மணஞ் செய்துவைக்கத் துணிந்தனர். அவளை மணம்பேச யாரோ சில சான்றோர்களும் வந்திருந்தனர் ; அஃதறிந்தாள் தலைவி ; விரும்பி மேற்கொள்ளும் தலைவன் ஒருவன்பால் தன் உள்ளம் சென்றுளது என்பதைத் தன் தாயும் தந்தையும் அறியார் ஆதலின், அவர், வந்த சான்றோர்க்கு ஒப்புதல் அளிப்பினும் அளிப்பர் என அஞ்சினாள். தன் களவொழுக்கைப் பிறர் அறியாவண்ணம் இதுவரை மறைத்து வந்ததேபோல் இனியும் மறைத்து வைப்பின் ஏதமாம் என எண்ணினாள். தன் அன்பிற்குரிய தோழியை அழைத்தாள். "தோழீ! என் வளை கழலுமாறு கைமெலியத் துயர் செய்தான் ஒருவன் உளன். அவனோர் தலைசிறந்த ஆண்மகன் ; குரிசில்; பீடும் பெருமையும் உடையோன் ; மாண்புறு குணம் பல நிறைந்து நம்மை மணத்தற்குரிய தகுதியிற் சிறந்தோன் ; ஆடுகளம் சென்று ஆடி மகிழும் இயல்புடையான் ; ஆகவே, யானும், அவ்வாடுகளஞ்சென்று ஆடி மகிழும் விருப்பமுடையேனாய், வீரர்கள் பலர் கூடி ஆடும் மற்போர் விழாக்களத்தும், மகளிர் கூடி ஆடும் துணங்கைக்கூத்தின் கண்ணும் தேடித்தேடிப் பார்த்தேன். எங்கும் அவனைக் காணேன். இதற்கு யான் என்செய்வேன் ?" என்று கூறிக் கலங்கினாள்.

தோழி அறிவே உருவானவள் ; தலைவி, தலைவனை "மாண்தக்கோன்", "பீடுகெழுகுரிசில்" எனப் புகழ்வதாலும், அவனை மற்போர் விழாவிலும் துணங்கைக் கூத்தின்கண்ணும் தேடினேன் எனக் கூறுவதாலும், அவன் தன் வளை நெகிழ்த்தான் என அறிவிப்பதாலும், தலைவி, தக்கான் ஒருவன்பால் அன்புகொண்டுள்ளாள் என்பதையும், அத் தலைவன் ஆண்மையிற் சிறந்த வீரன் என்பதையும், துணங்கைக்கூத்தின்கண் அவன் கை கொடுக்க அவனோடு ஆடி அன்பு கொண்டுள்ளாள் தலைவி என்பதையும் அறிந்தாள் ; இந் நிலையில், அவள் பெற்றோர், அவளை அயலார்க்கு மணம்செய்து கொடுக்க முடிவு செய்வாராயின் அவள் வாழாள் ; இறந்துபோவாள். ஆதலின்,

அவ் விருவர் தம் நட்புறவைத் தாய் தந்தையர்க்கு அறிவித்து, அயலார்க்கு மணஞ்செய்து கொடுப்பதைத் தடுத்து அத் தலைவனுக்கே மணம் நேருமாறு துணைபுரிதலே தன் தலையாய கடனும் என்று முடிவு செய்தாள்.

இவ்வாறு, தானும் தலைவனும் பெற்று மகிழும் களவொழுக்கத்தைத் தன் தோழிக்கு அறிவிக்கும், அறத்தொடு நிற்றலாகிய துறையமைத்துப் பாடிய ஆதிமந்தியாரின் அழகிய பாடல் இது :

"மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டும் காணேன் மாண்தக் கோனை ;
யானுமோர் ஆடுகள மகளே ; என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே." (குறுந் : 31)

ஆதிமந்தியார் வரலாற்றைப் பாணரும், வெள்ளிவீதியாரும் பாராட்டியதோடு, ஆதிமந்தியாரின் அருமைத் தந்தை கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ அரசன் எனவும், அவர் கணவனை ஆட்டனத்தி, வஞ்சிமா நகரைத் தலைநகராகக்கொண்ட சேர நாட்டான் எனவும், கற்புக்கடம்பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகி பாராட்டிய கற்புடை மகளிர் எழுவரில் ஆதிமந்தியாரும் ஒருவர் எனவும் இளங்கோவடிகளும் பாராட்டியுள்ளார். அஃது இதோ :

"மன்னன் கரிகால் வளவன் மகள், வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
'கன்னவில் தோளாயோ !' என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்." (சிலப், 21: 11-15)

ஆதிமந்தியார் பிறந்து மொழிபயின்ற பட்டினம், பூம்புகார்ப் பட்டினமே என்று கூறுவர் பட்டினத்துப் பிள்ளையார்.

## ௬. ஊண்பித்தை

இவர் பெயர் ஊண்பித்தியார் எனவும் வழங்கப்பெறும். புறநானூற்றில் மாற்பித்தியார் என்ற பெயருடைய பெண் பாற்புலவர் ஒருவர் உளர். இவர் பெயரும் பித்தியார் என வருவதைக்கண்டு, இருவரையும் ஒருவராகவே கருதுவர் சிலர்; அது தவறு. இருவரும் வேறு வேறுவர் என்பதை அறிவிப்பதற்காகவே, ஒருவர் பெயர்முன் ஊண் என்பதை யும், மற்றொருவர் பெயர்முன் மால் என்பதையும் சேர்த்து, ஊண்பித்தியார், மாற்பித்தியார் என வழங்கியுள்ளார்கள்; மேலும் இவர்பெயர் ஊண்பித்தி என்றே பெரும்பாலான ஏடுகளில் காணப்படுகிறது; இவர் வரலாறுபற்றிய எதையும் தெரிந்துகொள்ள வழியில்லை.

இல்லறம் இனிது ஆற்றவேண்டும்; அதற்கு நிறையப் பொருள் வேண்டும் என்ற எண்ணமுடையவனாய் வெளி நாடு சென்ற கணவன், 'வருவேன்' என்று கூறிச் சென்ற காலத்தில் வந்திலன்; அதனால் வருந்திய அவன் மனைவி, "அவர் என்னை நினைந்திலர்; மறந்துவிட்டார்" என்று வருந்தினாள். ஆனால், அவன் இயல்பை நன்கு உணர்ந்த வள் அவள் தோழி. அவன் அவளை மறவான் என்பதை உணர்ந்தவள். சென்ற தொழில்நினைவால், அவன் ஒரு வேளை மறப்பினும், சென்றவழியில் அவன் கண்ட காட்சி அவனை மறக்கவிடாது; மாறாக, தலைவியை என்றும் நினைப் பூட்டி, வீடுநோக்கி விரைந்து வருதல்வேண்டும் என்பதை அறிவுறுத்தும் தன்மையுடையது. வழியில் ஓர் ஆண்மான், மரல் என்ற செடியை வயிறார மேய்ந்துவிட்டு, அருகே யுள்ள யாமரத்தின் நிழலையடைந்து கவலையின்றி உறங்கு வதைக் கண்டுகொண்டே சென்றுள்ளான். அக் காட்சி அவன் உள்ளத்தை உறுத்தாதிராது; தான் விரும்பிய உணவை வேண்டிய அளவு உண்டதும், அங்கேயேயிருந்து உழலாது, நிழலிடம் தேடிப் படுப்பதைப்போல், நாமும் வேண்டிய பொருளை ஈட்டிக்கொண்டு விரைவில் வீடுவந்து சேர்தல்வேண்டும் என்ற எண்ணத்தை அவனுக்கு உணர்த்

தியே யிருக்கும். ஆகவே அவன் விரைவில் வருவான் என்னும் உறுதியுடையவள் தோழி. ஆனால், அவன் கூறிச் சென்ற காலமெல்லாம் கடந்தும் அவன் வரவில்லை; அத னால், தலைவி அவன் தன்னை மறந்துவிட்டான் என்றே உறுதியாக எண்ணுகிறாள். அந் நிலையில், அவளிடத்தில் சென்று, "அவன் மறவான்" என்று வெளிப்படையாகக் கூற அஞ்சுகிறாள் தோழி; என்றாலும், அவள் அதைக் கூறக் கடமைப்பட்டவள் ஆகவே, தலைவியின் கருத்தை யும் ஏற்றுக்கொள்வாள் போல், "அவர் நம்மைப்பற்றி நினைக்கவே மறந்துவிட்டாரோ?" என்ற ஐயத்தை எழுப் பிப் பின்னர், அதை மறுப்பாள்போல், "அல்லது, வந்த வேலையை விரைவில் முடித்துக்கொண்டு மீள்வதற்குரிய வாய்ப்பு கிடைக்கவில்லையோ?" என்று ஐயப்படுவாள் போல்கூறி, "அவன் வராமைக்குக் காரணம் அதுவே; அவன் மறதி அன்று" என்று துணிந்து கூறித் தலைமக ளைத் தேற்றினாள்.

இக் கருத்தடங்கிய பாடலைப்பாடி, "அறிவே உருவான வள் தோழி" என்ற அகத்திணைக் கொள்கைக்கு அரண் செய்தார் ஊண்பித்தை:

"உள்ளார் கொல்லோ? தோழி! உள்ளியும்
வாய்ப்புணர்வு இன்மையின், வாரார் கொல்லோ?
மரல்புகா அருந்திய மாவெருத்து இரலை
உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்
மாயிரும் சோலை மலையிறந் தோரே." (குறுந் : உஉஉ)

# ரு. ஒக்கூர் மாசாத்தியார்

இவர் இயற்பெயர் சாத்தியார்; இது சாத்தனார் என்பதன் பெண்பாற் பெயராகும். சாத்தன் என்பது, ஐயனார் என்ற கடவுட்பெயர். சாத்தன், சாத்தி என்ற இப் பெயர்கள், இலக்கண மேற்கோட் பெயர்களாகப் பயில ஆளப்படுகின்றன; சாத்தன் என்ற பெயர்கொண்ட புலவர்களும் பலர் உள்ளனர்; இதனால், அக் காலமக்கள் இப் பெயர்களைப் பெருவழக்காக மேற்கொண்டிருந்தனர் என்பது புலனாகும். இவர் பெயர்க்கு முன்வரும் *ஒக்கூர், புலவர் பிறந்த ஊர் போலும்; ஆனால், அது யாண்டுளது என்பது அறியக்கூடவில்லை; இவர் பிறந்த ஒக்கூரிலேயே, இவர் பெயர்கொண்ட ஆண்பாற் புலவரும் ஒருவர் இருந்தனர்; ஒக்கூர் மாசாத்தனார். இவ் விருவரும் உறவுடையவராகவும் இருத்தல் கூடும். ஆனால், அவர் உறவு, எத்தகைய உறவு என்பதையோ, அவர் உறவுடையவர் என்பது உண்மைதான் என்பதையோ உறுதிசெய்யும் சான்று ஒன்றுமில்லை.

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய பாடல்களில் நமக்குக் கிடைத்தவை எட்டு. அவற்றுள் ஒன்று புறத்துறை தழுவிய பாடல்; ஏனைய ஏழும் அகத்துறைக் கருத்துக்கள் கொண்டவை. அவர் பாடிய பாக்கள் எல்லாவற்றுள்ளும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் சிறப்பளித்துத் தனக்கும் புகழ் அளித்த பெரும்பாட்டு, புறநானூற்றில் காணப்படும் பாட்டே.

தமிழ்நாட்டுச் சிற்றூர்த் தெருவொன்றில் நடந்த நிகழ்ச்சியிது; நாடு காவலுக்கான போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலம்; காலைநேரம்; ஊர் நடுவே அமைந்திருக்கும் மன்றத்தே உள்ள போர்ப்பறை ஒலிக்கத் தொடங்கிவிட்டது; அதைக் கேட்டாள் ஒரு கிழவி; நாடு காவலுக்கு நம் தொண்டும் இருக்கவேண்டுமே; நம் குடியி

---

* ஒக்கூர் என்னும் ஊர் பாண்டிநாட்டில் சிவகங்கைக்கு வடபால் ஆறுகல் தொலைவில் ஒன்று இருக்கின்றது. அதுவே போலும்!

விருந்தும் ஓர் ஆள் செல்லவேண்டுமே என்று எண்ணினாள்; எண்ணியவள் ஏக்கம் மேற்கொண்டாள்; காரணம், போருக்குச் செல்லத்தக்க பேராண்மை மிக்க ஆண்மகன் ஒருவனும் அவள் வீட்டில் இல்லை; அவள் ஆண்துணை அற்றவள் அன்று; உடன்பிறந்த ஆண்மக்களையோ, மணந்த கணவனையோ பெறாதவள் அன்று; அத்தகைய உறவினரைப் பெற்றே இருந்தாள்; ஆனால், சிலநாட்களுக்கு முன் நடைபெற்ற போரில் கலந்துகொண்டு, பகைவர் யானைப்படையைப் பாழ்செய்துவிட்டுக் களத்திலேயே மாண்டு மறைந்துபோனான் அவள் அண்ணன்; முன்னாள் நடைபெற்ற போரில், பகைவர் யானைவரிசைகளை எதிர்த்துப் போரிட்டு இறந்துபோனான் அவள் கணவன்; இருந்த ஆண்மக்கள் இருவரும் இவ்வாறு இறந்துவிட்டனர்; அவர்கள் இறந்துவிட்டனரே என்று அவள் கவலை கொள்ளவில்லை; இன்று நடைபெறப்போகும் போருக்குத் தானும் ஒரு வீரனை அனுப்பமுடியவில்லையே, என்றே கலங்கினாள்; கலங்கி நின்றவள், சிறிது நேரத்துக்கெல்லாம் எதையோ எண்ணிக்கொண்டவள்போல் தெருக்கோடிக்கு விரைந்தோடினாள். அவள் மகன் அங்கே மயிரை விரித்துக் கொண்டு மண்ணில் புரண்டு ஆடிக்கொண்டிருந்தான். ஒரே மகன்; ஆடும் பருவம் கடவாத இளைஞன்; அவன் கையைப் பிடித்து அழைத்து வந்தாள்; வீட்டினுட் கொண்டுசென்று நீராட்டினாள்; பெட்டியில் மடித்துவைத்திருந்த தூய வெள்ளிய ஆடையை எடுத்து விரித்து உடுத்தினாள்; பறட்டைத்தலையில் எண்ணெய் தடவி வாரி முடித்தாள்; அவள் முன்னோர் ஆண்ட வேலைக் கையிலே கொடுத்தாள்; தெருவிற்கு அழைத்துவந்து, "அதோ, அங்கேதான் நடைபெறுகிறது போர்; போ அங்கே விரைந்து" என்று வழி காட்டி அனுப்பி, அவன் செல்லும் திசைநோக்கி நின்றாள். அவள் வரலாற்றினையும், அன்று அவள் நடந்துகொண்ட செய்கைகளையும் கண்டனர் அத்தெருவார். அவருள்ளம் திடுக்குற்றது. "என்னே இவள் துணிவு! இவள் செயல், அம்ம! அம்ம!! கொடிது! கொடிது!! மறக்குடி மகள் என்பது இவளுக்கே தகும்" என்று வியந்து பாராட்டினர்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டில் எங்கோ ஒரு பகுதியிலிருந்த சிற்றூர்த் தெருவொன்றில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியைத் தமிழர்கள் தமிழகம் உள்ள வரையிலும் மறவாதிருக்கச்செய்த மாண்பு மாசாத்தியார்க்கே உரித்து.

" கெடுக சிந்தை கடிதிவள் துணிவே ;
மூதில் மகளிர் ஆதல் தகுமே ;
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே ;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே ;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
'செருமுகம் நோக்கிச் செல்க'என விடுமே."

(புறம் : உஎகூ)

வீரச்சுவையை விளங்கப் பாடிய மாசாத்தியார், இன்பச்சுவை சொட்டும் அகப்பாடல் சிலவும் பாடியுள்ளார் : பொருள் கருதிப் பிரிந்துசென்ற கணவன் நினைவாகவே இருக்கிறாள் ஒருத்தி ; ஒருநாள் மாலைக்காலத்தே, அவளும் அவள் தோழியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்நேரத்தில், எங்கிருந்தோ வந்த மணியோசையைக் கேட்டாள் தலைவி. மணியோசை, காலையில் சென்று காட்டில் மேய்ந்து மாலையில் வீடுதிரும்பும் ஆனிரைகளின் கழுத்தில் கட்டிய மணிகளினின்றும் வந்திருக்கும் ; அல்லது, காவலர் புடைசூழத் திரும்பிவரும் கணவன் ஏறிவரும் தேரில்கட்டிய மணிகளினின்றும் வந்திருக்கும். ஆகவே, அவளால் ஓசையைக்கண்டு துணிய முடியவில்லை. மணியோசை கேட்கிறது என்றால், அது மிகச் சேய்மையிலிருந்து வந்திருத்தல் இயலாது ; அண்மையிலிருந்தே வந்திருத்தல் வேண்டும் ; சிறிதுநேரம் கழித்தால் உண்மை விளங்கிவிடும் ; ஆனால், அதுவரை காத்திருக்கவிடவில்லை

அவள் உள்ளம் ; உடனே அறிந்துகொள்ளத் துடித்தாள் ; ஆகவே, அண்மையில் கிடந்த உயர்ந்த கல்மீது ஏறி நின்று பார்த்து அறிந்துகொள்ளலாம் வா எனத் தோழியை அழைக்கிறாள். தலைவியின் உள்ளத்துடிப்பை யுணர்த்தும் ஒரு செய்யுள் :

" முல்லை யூர்ந்த கல்லுய ரேறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி !
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை யினத்துப்
புல்ஆர் நல்ஆன் பூண்மணி கொல்லோ !
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணல் காட்டாறு வரூஉம்
தேர்மணி கொல் ? ஆண்டு இயம்பிய உளவே."

(குறுந் . உ எரு)

தலைவியின் ஆர்வ உள்ளத்தைக்காட்டிய மாசாத்தியார், தலைவனின் விரைவுள்ளத்தையும் அவன் உள்ளம் அறிந்து ஓட்டும் தேர்ப்பாகனையும் நமக்கு அறிவிக்கும் முறை சாலச்சிறந்தது. வந்த வேலை முடிந்ததும், வீடு அடைவதில் பெருவிருப்புடையன் தலைவன் என்பதை அறிவான் பாகன் ; ஆகவே, தேரை விரைந்து ஓட்டிவந்து தலைமகளின் வீட்டு வாயிலில் நிறுத்தி, "இறங்குக" என்று தலைமகனை நோக்கிக் கூறினன். அதுகேட்ட தலைவன் வியப்புற்றுக் கூறுகிறான் : "பாக ! தேர் ஏறியதுதான் எனக்குத் தெரியும் ; தேர் ஓடியதாகவே எனக்குத் தோன்றவில்லை ; இதோ, தலைவியின் வீட்டின்முன் நிறுத்தி விட்டு "இறங்குக" என்ற நின் சொல் கேட்டு வியப்புற்றேன் ; வாயுவேகம், மனோவேகம் என்பார்களே, அப்படியல்லவோ வந்திருக்கிறது தேர் ! ஒருவேளை காற்றையே குதிரையாக மாற்றிப் பூட்டிக்கொண்டனையோ ? அல்லது. உன் மனத்தையே குதிரையாகமாற்றிப் பூட்டி ஓட்டினையோ? எவ்வாறு இவ்வளவு விரைவில் வந்தது தேர் ?" என்று பாராட்டிக்கொண்டே, தோளோடு தழுவி அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்று விருந்தளித்து மகிழ்ந்தான்.

"பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது, வந்தவாறு
நனியறிந் தன்றோ இலனே;.........
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
"இழிமின்" என்றநின் மொழிமருண் டிசினே;
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ?
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ?
உரைமதி; வாழியோ! வலவ." (அகம்: ௩அ௪)

மழை பெய்துவிட்ட நிலத்தில் தேர்உருளை ஓடிய வழியே, நீர் விரைந்து ஓடுவது ஊர்ந்துசெல்லும் பாம்பு விரைந்து பாய்வதுபோலும் என உவமை காட்டுவதும்,

"தண்ணில மருங்கில் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லும் நெடுந்தகை தேர்." (அகம்: ௩௨௪)

மாலை வந்துற்றலும், வேலியைக் கடந்துவரும் காட்டுப்பூனையால், தன் பார்ப்புகளுக்கு ஏதம் உண்டாதலும் கூடும் என அஞ்சிய கோழி, அவற்றை ஏமம் சேர்ந்த இடத்திற்குக் கூட்டிச்செல்லுமாறு, கவலையோடு பலகால் கூவி அழைக்கும் எனக் கூறிச் சிற்றுயிர் மாட்டும் உளவாம் நற்றாய் அன்பினைப் புலப்படுத்துவதும் போற்றற் குரியவாம்.

## ௬. கச்சிப்பேட்டு* நன்னாகையார்

நாகையார் என்பதே இவர் இயற்பெயர்; இது நல்லவர் எனச் சிறப்பிக்கவரும் நல் என்ற அடையைப் பெற்று நன்னாகையார் என்று ஆயிற்று. இவர் பெயர் சில இடங்களில் **நன்னாகையார்** எனவும், சில இடங்களில் **கச்சிப்பேட்டு நன்னாகையார்** எனவும் வருகிறது; தொண்டைநாட்டில் சிறப்புற்றோங்கிய காஞ்சிமாநகரை அடுத்துக் கச்சிப்பேடு என்றோர் ஊர் உளது. ஒரு நகரத்தின் புறத்தே அதைச் சார்ந்து இக்காலத்துச் சந்தைபோல் நாள்தோறும் நிகழும் வணிக நிலையத்தைக் குறிக்க வழங்கிய பேட்டு என்ற பெயர் இன்று பேட்டை எனத்திரிந்து வழங்குகிறது. கச்சிப்பேடு, புலவர் பலர் வாழ்வால் பெருமையுற்றது. இளந்தச்சனார், பெருந்தச்சனார், காஞ்சிக்கொற்றனார் முதலிய புலவர்களைப் பெற்றெடுத்த பெருமையும் அதற்குண்டு.

நாகையார் பாடிய பாடல்கள் எட்டு; அவை அனைத்தும் குறுந்தொகை என்ற ஒரு நூலிலேயே தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் பாடல் முழுதும், கணவன் பொருள் குறித்துப் பிரிந்தான் என்பது கண்டு மனைவி ஆற்றாமை; அவள் ஆற்றாமைகண்டு தோழி ஆற்றுதல் என்ற பொருள் வயிற்பிரிவே பொருளாக அமைந்துள்ளன. இவர் மேற்கொள்ளும் உவமைகள் மிகச் சிறந்தனவாதலேயன்றி, அரியகருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிப்பனவாகவும் உள்ளன.

கணவன் பிரிவால் மனைவிக்கு உண்டான வருத்தம் சிறிதும் குறைதலின்றிப் பெருகிற்று என்பதற்குக் கொல்லன் உலையில் காற்றடிக்கும் துருத்தியின்தோல் சிறிதும் ஓய்வின்றித் தொழிலாற்றப்படுவதை உவமை கூறியுள்ளார். ஊருக்கு ஒரு உலை என்று இருந்தால், அத்துருத்திக்கு ஓய்வு சிறிது கிடைப்பினும் கிடைக்கும்; துருத்தியின்தோல் ஆட்டப்பெறாமல் அமைதி கொள்ளுதலும் கூடும். ஆகவே, அத்தோல் சிறிது அமைதியுறுவதே

(பாடம்) * கச்சிப்பெட்டு.

போல், மனைவியின் துயர் சிறிது குறைதலும் கூடும் என்ற பொருள்படத் தலைவியின் துயர் குறைந்து தோன்றும். ஆகவே, ஓய்வின்றித் தொழிலாற்றும் கருத்தி என்று அறிவிக்க விரும்புகிறார். ஓர் ஊருக்கு ஒரு உலையாயின் தொழில் குறைந்திருக்கும்; பல ஊர்களுக்கும் சேர்ந்து ஒரு உலையானால், அதற்குச் சிறிதும் ஓய்வே இராது. ஆகவே, தலைவியின் துயர்க்கு எழூர்க்குமாக ஓர் ஊரில் அமைந்த ஓர் உலையினை உவமை கூறினார்.

> எழூர்ப் பொதுவினைக்கு ஒரூர் யாத்த
> உலைவாங்கு மிதிதோல் போலத்
> தலைவரம் பறியாது வருந்தும் என்னெஞ்சே.
>
> (குறுந்: கஎஉ.)

இதனால், தலைவியின் துயர் மிகுதி உணர்த்தப்படுதலோடு, பண்டைத் தமிழகத்தின் வாழ்க்கை அமைப்பு முறைகளில் ஒன்றும் விளங்குகிறது. ஊர்தோறும் ஒரு உலை வைத்தால், போதியதொழில் கிடைக்காது கொல்லன் வாழ்க்கை நிரம்பாது போகும். அதனால் பல ஊர்களுக்கும் நடுவிடமாக அமையும் ஓர் ஊரில் அவன் உலை வைத்துக்கொள்ள, அவ்வூரைச் சூழ உள்ள மக்கள் அனைவரும் அவ்வொருவனிடத்திலேயே, தம் தொழிலுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வாராயினர். இதனால் வேண்டிய தொழிலைப் பெற்று அவனும் வளமாக வாழ்வான்; இது பழந் தமிழர் கண்ட பண்டைக்காலச் சிற்றூர் அமைப்பு முறையாம்.

## எ. கழார்க் கீரனெயிற்றியார்

கழார் என்பது, காவிரி கடலோடு கலக்குமிடத்தில் இருக்கும் ஒரு சிற்றூர்; காவிரிப்பூம்பட்டினத்திற்கு நான்கு அல்லது ஐந்துகல் தூரத்தில் இருப்பது; அவ்வூருக்கு அருகே, காவிரியில் அமைந்த படித்துறை, பலரும் படிந்து ஆடும் பெருமை வாய்ந்தது; சோழராட்சிக்கு அடங்கிய மத்தி என்போனுக்கு உரியது. அவ்வூரில் கீரன் என்பார் ஒருவர் இருந்தனர். கீரன் என்ற பெயர், ஒரு வகைப் பார்ப்பாருக்கு உரிய குலப்பெயர் என்றும், சங்கை வாள்கொண்டு அறுத்துக் கைவளை முதலியன செய்தல் அக் குலத் தொழிலாம் என்றும் கூறுவர்; பொற்கொல்லர், இரும்புக் கொல்லர், மரத்தச்சர் ஆகியோராகிய கம்மியரையே கீரர் என்ற சொல் குறிக்கும் என்று கொள்வோரும் உளர் அஃது எவ்வாறாயினும், அக்குடி, நக்கீரர் போன்ற நல்லிசைப்புலமை சான்ற நல்லாசிரியர் பலர் பிறந்த பெருமையுடையது என்பதில் ஐயமில்லை. அத்தகைய பெருமைமிக்க குடியிலே பிறந்தவர் கீரர். ஆகவே, வழிவழியாகத் தமிழ் வளர்த்த மரபோடு தொடர்புடையவர் நம் எயிற்றியார் என்பது அவருக்குப் பெருமை யளிப்பதே. எயினி என்பதைப்போலவே, எயிற்றி என்பதும் குறிஞ்சிநிலப் பெண்மக்கள் பெயராம்; ஆகவே, இவர் குறவர் குடியிலே பிறந்தவர் என்பது உறுதி; குறவர் குடியிலே பிறந்த இவர், கீரன் என்ற வேறு குடியிற் பிறந்தவரை மணந்து, மணவினைக்குத் தடை செய்யும் வகையில் குடிப்பிரிவினையைக் கொள்ளவில்லை தமிழர் என்ற கொள்கைக்குச் சான்றாயினார் என்று கொள்ளுதல் நன்று.

எயிற்றியார் கழார்த்துறையில் வாழ்ந்தவர் ஆகவே, அவ்வூர், அவ்வூரார், அவ்வூரையடுத்து வாழும் பிற உயிர் இவற்றின் இயல்புகளை நன்குணர்ந்துள்ளார்; ஒரு பாட்டில், அவ்வூர் மக்கள் நாள்தோறும் தாம் உண்ணும் முன்னர்க் காக்கைக்குச் சோறுபோடும் இயல்பினர் என்பதையும், அதை நாள்தோறும் உண்டு பழகிய காக்கைகள், காற்றும் மழையும் கலந்தடிக்கும் காலத்திலும் அச் சோற்

றிற்காக வழக்கமாய் உட்காரும் மரக்கிளையில் இருந்து காத்திருப்பதையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார் (நற் : உஅச.)

இவர் பாடல்கள் எல்லாம் குளிர்காலக் கொடுமையை விளக்குவனவாகவே உள்ளன. வாடைக் காற்று வீசும் பனிக்காலக் கொடுமையை விளக்கிக் கூறும் இவர் பாடல் களைப் படிப்பவர் ஒவ்வொருவரும், அவ்வாடையின் கொடு மையால் தாமும் தாக்குறுவதுபோன்ற உணர்ச்சியினைப் பெறுவர்; அவ்வளவு நுண்மையாக, அப்பனிகால இயல்பை விரித்துரைத்துள்ளார்; தண்ணீரில் வாழும் தாமரையை யும் கருக்கும் பனி, மலையும் நடுங்கும் குளிர் என ஓர் இடத்தில் கூறியுள்ளார்.

"முளரி கரியும் முன்பனிப் பானாள்
குன்றுநெகிழ்ப் பன்ன குளிர்" (அகம் : கசுந.)

நகர்க்காவலர் நள்ளிரவிலும் உறங்குவதொழிந்து, நாழிகை எண்ணுவாராய் விழித்திருப்பதே போல், தலைவ னைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியும் துயில் ஒழிந்து துயர் உற்றாள் எனப்பாடி நகர்க்காவலர் தம் நல்லியல்பினை யும் வெளுக்கும் தொழில்வல்ல வண்ணாத்தி கஞ்சியில் தோய்த்து ஒருமுறை தப்பிவிட்டுத் தண்ணீரிற் போட்ட வெள்ளாடை சிறிதே முறுக்கு நெகிழ்ந்து தோன்றுவது போல் பச்சிலைகட்கிடையே வெண்ணிறப் பகன்றை மலரும் எனப்பாடி வண்ணார் தம் வெளுக்கும் தொழில் வன்மை யினையும் வாயாரப் பாடியுள்ளார்:

"நள்ளென் யாமத்து ஐயெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும் என்கண்
துஞ்சா வாழி தோழி! காவலர்
கணக்காய் வகையின் வருந்திஎன்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே." (குறுந் : உசுக.)

"நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ."
(குறுந் : நநO.)

## அ. காக்கைபாடினியார் நச்செள்ளையார்

பெரும்பாலான தமிழ்மக்களால் நன்கு அறியப்பட்டு அவர்கள் உள்ளத்தில் என்றும் நீங்காது குடிகொண்டிருக்கும் நல்லிசைப் புலமை மெல்லியலார் ஒரு சிலருள், காக்கைபாடினியார் நச்செள்ளையாரும் ஒருவராவர். பண்டைத் தமிழர்களின் மறக்குடி மாண்பைப் படம் பிடித்துக் காட்டும் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே, அவருக்கு அத்தகைய பெரும்புகழை அளிக்கின்றது.

தமிழ்நாட்டுச் சிற்றூர் ஒன்றில் ஒரு வீட்டின் வெளியே கிழவியொருத்தி நின்றுகொண்டிருக்கிறாள்; தளர்ந்த நரம்புகள்; வற்றிய உடல்; நரம்புகளெல்லாம் மேலே எழுந்து நன்கு தோன்றுகின்றன; இடையோ மிகவும் சிறுத்துக் காணப்படுகிறது; அவளுக்கு அவ்வளவு முதிர்ந்த ஆண்டு; அங்கே யாரையோ வெகு ஆவலோடு எதிர்நோக்கி நிற்கிறாள். சிறிது நேரத்திற்கெல்லாம், வீரர் பலர் வெற்றிமுழக்கத்தோடு வீடு திரும்புவதைக் கண்டாள்; அவர்கள் ஒவ்வொருவரையும் உற்று நோக்கிக் கொண்டே வந்தாள்; அவள் தேடும் ஆள் அவர்களோடு வருவதைக் காணவில்லை; அவள் அச்சமும் ஆவலும் மிகுதிப்பட்டன; அவ் வீரருள் ஒருவனை அழைத்தாள்; "அப்பா! காலையில் உங்களோடு களம்நோக்கி வந்தானே என் மகன்; அவன் எங்கே? எனக்கிருப்பவன் அவன் ஒரு மகன்; மேலும் ஆண்டில் உங்களைக் காட்டிலும் இளைஞன்; அவன் உங்களோடு வரக் காணேமே ஏன்? களத்தில் அவனைக் கண்டாயா?" என்றெல்லாம் கேட்டாள். "பாட்டி! அவனா? பகைவர் படையைக் கண்டவுடனே அஞ்சி ஓடிவிட்டான்" என்று கூறி அவ் வீரன் அப்பாற் சென்றான்.

அவ் வீரன் கூறியதை அவள் நம்பவில்லை; நம்ப மறுத்தது அவள் உள்ளம்; மேலும் பல வீரரை வினவினாள்; அவர்களும் அவ்வாறே கூறினார்கள். "என் மகனா தோற்றோடிப் போனான்; உண்மையாயிருக்குமா? என்

மகன் தோற்றோடிப் போயிருப்பானோ? என் குடியிற் பிறந்த எவருமே அவ்வாறு செய்யாரே! என் மகன் மட்டும் எப்படித் தோற்றோடியிருப்பான்; பலர் கூறுகின்றார்களே 'தோற்றோடிப் போனான்' என்று; அது பொய்யாகவா யிருக்கும்? அவ்வளவு பேருமா பொய் கூறுவர்? என் குடியின் இயல்பிற்கு மாறாக, 'அவன் தோற்றோடினான்' என்பது உண்மையாக இருக்குமானால், அது அவன் பழியாக இராது; அவனை வளர்த்த என் பழியே; அவனை நான் வளர்த்த முறையே தவறுடையதாகும்; அவனுக்குப் பாலூட்டி வளர்த்த நானே தவறுடையேன்; பிறந்த குடிக்குப் பழிதேடித் தந்த மகனைப் பெற்று வளர்த்த என் உடலையே சிதைக்கவேண்டும்" என்று முடிவுசெய்தாள்; கையிலும் வாளை எடுத்துக்கொண்டாள்.

இந்நிலையில், "நின் பால் குடித்து வளர்ந்த நின் மகன் தவறு செய்யான்; நின் பால் குடித்து வளர்ந்த நின் மகன் தவறு செய்யான்" என்று யாரோ கூறுவதுபோல் தோன்றிற்று. பலர் கூறியதையும் ஏற்க மறுத்தாள்; போர்க் களம் புகுந்து பார்க்கவேண்டும் என்று எண்ணினாள்; கையில் கொண்ட கத்தியுடன் களத்திற்குச் சென்றாள்; அங்கே இருபடை வீரர்களும் இறந்து வீழ்ந்து கிடந்தனர்; அப் பிணங்கள் ஒவ்வொன்றையும் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்தாள்; கடைசியில், பல பிணங்களுக்கு அடியில், உருத் தெரியாமல் ஒரு பிணம் சிதைந்து கிடப்பது கண்டாள்; உற்று நோக்கினாள்; அப் பிணம் தன் மகன் பிணமே யென்பதை அறிந்தாள்; அறிந்தாளோ இல்லையோ, அவள் உள்ளம் அளவிலா இன்பம் அடைந்தது; இன்பக் கண்ணீர் சொரிந்தாள்; அவனைப் பெற்றெடுத்த அன்று பெற்ற இன்பத்தைக் காட்டிலும் பேரின்பம் பெற்றாள்; இன்பத்தால் ஆடினாள்; பாடினாள்; அக மகிழ்ந்தாள்.

வயது முதிர்ந்தவள்; மகப்பேறு பெறும் பருவத்தைக் கடந்தவள்; ஒரு மகன் அல்லது வேறு மக்களைப் பெறாதவள். "தன் மகன் போரில் பிழைத்து வந்து

விட்டான்; தள்ளாத வயதில் தனக்குத் துணையாய் இருப்பான்" என்று மகிழ்வதற்கு மாறாக, "பிழைத்தோடி வந்து விட்டானே! பிறந்த குடிக்குப் பழிகொண்டு வந்துவிட்டானே!" என்று பதைபதைப்பதும், அவன் அக் களத்தே இறந்தான் என்பதை யறிந்து அகம் மகிழ்வதும் ஆகிய, அக்காலத் தமிழ்மகளிரின் வீர உணர்ச்சியை விளங்க உரைத்துள்ளார் காக்கைபாடினியார் நச்செள்ளையார்.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
'மண்டமர்க்கு உடைந்தனை னாயின், உண்டவென்
முலையறுத் திடுவென் யான்'எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே.' (புறம்: உஎஅ)

இப் பாட்டைப் பாடித் தமிழர் உள்ளத்தில் அழியா இடம் பெற்ற இவ் வம்மையாரின் இயற்பெயர் செள்ளை என்பதாம்; செள்ளை என்ற இப்பெயர், பண்டைக் காலத்தில், தமிழ்ப் பெண்களுக்கு இட்டு வழங்கப்பட்டிருந்தது; சேரர் மரபில் வந்த மகள் ஒருத்தி அந்துவஞ்செள்ளை என அழைக்கப்படுகிறாள்; செள்ளை என்ற இயற்பெயர்கொண்ட இவ் வம்மையார், புலமையாலும், பிறவற்றினாலும் பெருமையும் சிறப்பும் பெற்றிருந்தனர்; ஆகவே, அவர் பெயர்க்கு முன்னே, பெருமையும் சிறப்பும் குறிக்கும் 'ந' என்ற சிறப்பு அடையினையும், பின்னே, 'ஆர்' என்ற உயர்வு குறிக்கும் பன்மை விகுதியையும் கொடுத்து நச்செள்ளையார் என அழைக்கப் பெற்றார். நச்செள்ளையார் என்ற அவர் பெயரைக் காக்கைபாடினியார் என்ற தொடர் மேலும் சிறப்பித்து நிற்கிறது. அச் சிறப்புத் தொடர், அவர் பாடிய பாட்டு ஒன்றைக் கண்டு, அப் பாட்டில் அவர் கூறியுள்ள கருத்தின் சிறப்பை உணர்ந்து பாராட்டிய பிற்

கால அறிஞர்கள், அவ் வம்மையாருக்கு அளித்த பாராட்டுப் பெயராகும்.

தமிழ்மகன் ஒருவனும், தமிழ்மகள் ஒருத்தியும் தனிக் குடித்தனம் செய்கிருர்கள்; அவ் விருவர் பெற்ருேரும் பெருஞ் செல்வர்களே; என்ருலும் தான் முயன்று ஈட்டிய பொருளைக்கொண்டே தன் வாழ்க்கையை நடத்துதல் வேண்டும் என்ற தனிப் பேருள்ளம் உடையவன் தமிழ் மகன்; அவன் மனைவியும் அதுவே அறநெறி என்று உணர்ந்தவள். ஆகவே, அவன் அவளை வீட்டில் விட்டுப் பொருள்தேட வெளிநாடு சென்றுவிட்டான்; செல்வது அறம் என்று கருதி அவனைச் செல்லவிட்டாள் என்ருலும், பிரியாத அவன் பிரிந்து சென்றதால் பெரிதும் வருந்துவா ளாயிஞள்; நாள் செல்லச்செல்ல வருத்தம் மிகுந்து கொண்டே வந்தது; வருத்தம் மிகமிக, அவள் உடலின் வனப்பும் வளமும் குன்றத் தொடங்கின. சென்றவன் எவ்வளவு தொலைவு சென்றுள்ளான்? சென்ற நாட்டின் தன்மை யாது? சென்ற இடத்தில் அவன் நலம் எவ்வாறுளது? எப்போது அவன் வருவான்? என்பனவற்றை அறிந்து கொள்ள முடியாத காலம் அது. அதனுல், அவன் காலம் தாழ்த்தத் தாழ்த்த அவளுக்குக் கவலை மிகுந்து கொண்டே வந்தது. அவள் உடல்நலம் முற்றும் கெட்டு விட்டது. இந்நிலையில், ஒருநாள் காலை ஒரு காக்கை அவள் வீட்டுக் கூரையில் வந்து உட்கார்ந்தது. வந்த காக்கை வாயைத் திறந்து “கா, கா” எனக் கரைந்தது; காக்கை கரைந்தது கேட்டாள் அவள்; துள்ளிக் குதித்தது அவள் உள்ளம்; துன்பம் குறைந்தது; இன்பம் மிகுந்தது; உடலும் பண்டேபோல் வனப்பும் வளமும் பெற்றது; காரணம், காக்கை கரைந்தால் காதலர் மீள்வர்; விருந்தினர் வருவர் என்பதை உறுதியாக நம்பினர் அக்காலத் தமிழர்கள். வெளிநாடு சென்ருேர் வருகையை அறிவிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு அஃது ஒன்றே. ஆகவே, காக்கை கரைந்தது: வேற்றூர் சென்ற அவர் விரைந்து வருவார் என்று நம்பிஞள்; உவகை கொண்டாள்.

அவள் எண்ணியவாறே, அவனும் அன்றுமாலையே வந்துசேர்ந்தான்; மனைவியைக் கண்டான்; தன் பிரிவு தாழாது தளர்ந்திருப்பாள் என்று எண்ணினான்; ஆனால், அவள் தன் பிரிவுகுறித்துக் கவலைகொண்டதாகவோ, அதனால் உடல்நலம் குன்றியதாகவோ அவள் உடல்நிலை உணர்த்தவில்லை; அதனால், அவள் தன் பிரிவுகுறித்துக் கவலை கொள்ளவில்லை என்று எண்ணவில்லை அவன்; மாறாக, அவள் கவலைகொள்ளாது இருந்திராள்; கவலையுற்றுக் கலங்கியே யிருப்பாள்; அவள் கவலையைப் போக்கி ஆற்றியிருப்பாள் அவள் தோழி என்றே எண்ணினான்; தோழியைக் கண்டு அவள் செயலுக்கு நன்றி தெரிவித்தான்; ஆனால், அந் நன்றியை ஏற்றுக்கொள்ள மறுத்தாள் அவள். "தலைவ! நீ பிரிந்தமை கண்டு ஆற்றாது அழுத அவளுக்கு நான் எவ்வளவோ ஆறுதல் உரை கூறினேன் என்பது உண்மையே; ஆனால், அவள் அதைப் பொருட்படுத்தவில்லை; கவலைமிக்குக் கவினழிந்து வாடிக்கொண்டேதான் இருந்தாள்; ஆனால், காலையில் காக்கை ஒன்று கரைந்தது; பிறகுதான் அவள் கவலை யொழிந்து கவினுற்றாள்; ஆகவே உண்மையில் நன்றி செலுத்துவதாய் இருந்தால், அக் காக்கைக்குத்தான் நன்றி செலுத்தவேண்டும்; நள்ளி என்ற வள்ளலுக்கு உரிய காட்டிலே வாழும் இடையர்களின் பசுக்களிடத்தே பெற்ற நெய்யோடு தொண்டிநகரில் விளைந்த வெண்ணெல் அரிசியாலான சோற்றைக் கலந்து ஏழுகலத்தில் வைத்துக் கொடுப்பினும், அக் காக்கை நினக்குச் செய்த உதவிக்கு அது ஈடாகாது" என்று கூறினாள்.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது ;என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே."

(குறுந் : உ௧0.)

இவ்வாறு காக்கை கரைதலினுல் கிடைத்த சிறப்பைப் பாராட்டிப் பாடியதிஞலேயே காக்கை பாடினியார் என்ற சிறப்புப் பெயர் அவருக்குக் கிடைத்தது. காக்கை பாடினியார் என்ற இப் பெயர் பிற புலவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது; இலக்கண ஆசிரியர்கள் வரிசையில் பெருங்காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார் என்ற இருவர் இடம் பெற்றுள்ளனர்.

நச்செள்ளையாரால் பாராட்டப்பெற்ற அரசன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பவன்; சேரர் குடியில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பேரரசன் ஒருவன் இருந்தான்; அவனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை; மற்ருெருத்தி, வேளாவிக்கோமான் பதுமன் என்பவன் மகள்; வேளிர்குடியிலே வந்த இப் பதுமன் மகளுக்கும், நெடுஞ்சேரலாதனுக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவர்; ஒருவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்; மற்ருெருவன், நச்செள்ளையாரால் பாராட்டப்பெற்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் அவன் நாட்டிற்கு அண்மையில் தண்டாரணியம் என்ருெர் பெருங்காடு இருந்தது. அக்காட்டில் வாழ்ந்திருந்த காட்டு மனிதர்கள், இவன் நாட்டினுள் புகுந்து, அங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டுள் மறைந்து விட்டனர்; உடனே, சேரலாதன் பெரும்படையுடன் அக் காட்டினுள் புகுந்து, அக் காட்டு மனிதரை வென்று, அவ்வாட்டுமந்தைகளை மீட்டுவந்து, தொண்டி நகருள் கொண்டு நிறுத்தினுன்; இவ்வருஞ்பெருஞ் செயலினுலேயே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனச் சிறப்பிக்கவும் பட்டான்.

இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பத்துப் பாடல்களால் பாராட்டினுர் நம் நச்செள்ளையார்; அப் பாடல்கள், பதிற்றுப்பத்தினுள் ஆரும்பத்து என்ற தலைப்பின்கீழ் வரி

சைப் படுத்தப் பெற்றுள்ளன. அப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சேரலாதன், நச்செள்ளையார்க்குப் பரிசிலாக நூறாயிரம் *காணமும் கொடுத்து, 'அணிகலன் ஆக்கி அணிந்து கொள்க' என்று ஒன்பது† காப் பொன்னும் கொடுத்தான். அஃதோடு அமைதி கொள்ளாது தன் அரச அவையில், தன் அரியணைக்கு அண்மையிலேயே அவர்க்கு இடமும் அளித்துச் சிறப்புச் செய்தான்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் வரலாறாக நாம் அறியக் கூடியன எல்லாம் இவ்வளவே; அவர் ஒரு பெண் பாற் புலவர்; புலவர்களும் போற்றும் புலமை வாய்ந்தவர்; கண்டீரக்கோப் பெருநள்ளியின் காலத்தே வாழ்ந்தவர்; மேற்குக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களுள் மிகச் சிறந்த துறைமுகமாகிய தொண்டிநகரை அறிந்தவர்; ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிப் பரிசில் பெற்றவர்; அணிகள் பல அணிந்து கொள்ளத்தக்க இளமைப் பருவ வத்திலேயே பெரும் புலவராய்த் திகழ்ந்தவர்; இவையன்றி அவர் வரலாறாக வேறு எதையும் அறிய முடியவில்லை.

வீர உணர்ச்சியையும், காதல் உள்ளத்தையும் விளங்க உரைக்கும் அவர் பாடல்கள் இரண்டைக் கண்டோம்; இனி ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாராட்டி அவர் பாடிய பாடல்கள் சிலவற்றைக் கண்டு அவர் புலமையின் நலத்தைச் சிறிது நுகர்வோம்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன்னைச் சேர்ந் தோர்க்கு இனியன்; சேரா தவர்க்கு இன்னான்; கொடியன் என்ற அவனியல்பை விளக்க விரும்புகின்றார் புலவர்; கடற்கரையைச் சேர்ந்த ஒரு பொழில்; அதில் நெய்தல் மலர்களால் அணி செய்யப்பெற்ற அழகிய பந்தல்; அப் பந்தலில் அரசர் பலர் அமர்ந்துள்ளனர்; அழகிய விறலியர் ஆடல் புரிகின்றனர்; ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அவ ரிடையில் அமர்ந்து விறலியர் ஆடலைக் கண்டும், பாடலைக்

* காணம்—பழங்காலத்தில் வழங்கிய செலாவணி நாணயம்.
† கா—பழங்கால ஒரு நிறுத்தலளவை.

கேட்டும் மகிழ்ந்திருக்கிறான். அவனுடைய இவ் வின்ப வேட்கையை அறிந்தனர் அவன் பகையரசர்கள்; அவன் மிகவும் மெல்லியன், எளியன் என்று எண்ணிவிட்டனர்; அப் பகைவர் அறியாமை கண்டு இரங்குகின்றார் நம் புலவர். "சேரலாதன் இன்பத்துறையில் ஈடுபாடுடையனே என்றா லும் போர்க்களம் புகுந்தால் அவனை வெல்வார் யார்? அங்கே அவன் கண்வலைப்பட்டுப் பிழைத்தார் எவரும் இலரே! எமன் விரித்த வலையில் வீழ்ந்தவர் பிழைப்பது எவ்வாறு இயலாதோ, அவ்வாறே இவன் பார்வையிற் பட்டவரும் பிழையாரே! போர்க்களத்தில் இவன் பார்வை ஒருவர்மீது வீழ்ந்தது என்றால், அவர்மீது எமன் வலை வீசிவிட்டான் என்றே பொருள்; அங்கே அவ்வளவு கொடியவனாயிற்றே சேரலாதன்; அத்தகையானை எளியன் என்று எண்ணுகின்றனரே அவன் பகைவர்; அந்தோ! என்ன பாவம்!" என்று ஏங்குகின்றார்.

"விறலியர், பாடல் சான்று நீடினை யுறைதலின்
வெள்வே லண்ணல் மெலியன் போன்மென
உள்ளுவர் கொல்லோ நின் உணரா தோரே!
மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்
வலைவரித் தன்ன நோக்கலை." (பதிற்று: ருக)

ஆடவரும் மகளிரும் கைகோத்து ஆடும் துணங்கை என்ற ஆட்டத்தை ஆடிமகிழ்வர் அக்கால மக்கள்; அத் தகைய ஆட்டம் ஒன்றில் ஒரு பெண்ணிற்குக் கைகொடுத் தான் சேரலாதன்; இதையறிந்தாள் அவன் மனைவி; சினங்கொண்டாள்; கையில் பிடித்திருந்த குவளைமலரை அவன்மீது எறிய ஓங்கினாள்; உடனே சேரலாதன், அவளை அணுகி, "மலரை வீசி எறியாதே; வாடிவிடும்; என் கையிற் கொடுத்துவிடு" என்று இருகை விரித்துக் கேட் டான். ஆனால், அவளோ அதை அவனிடத்தே கொடுக்க மறுத்து, "நீ யாரோ; நான் யாரோ; நின்னிடத்தே என் மலரைக் கொடேன்" என்று கூறி வேறு இடம் சென்று விட்டாள்; சேரலாதன் செய்வதொன்றும் அறியாது அவள் சென்ற திக்கையே நோக்கித் திகைத்து நிற்கின்

ருன் ; அந் நிலையில் அங்கே வந்து சேர்ந்தார் நம் புலவர் ; நகைச்சுவை தோன்ற நையாண்டி செய்யத் தொடங்கி விட்டார்.

"சேரலாத ! உன்னுடைய கை நின்னிடத்தில் வந்து நின்று பொருள் வேண்டும் இரவலர்க்கு அவர் விரும்பும் பொருளைக் கொடுக்கக் குவிந்து கவிழுமே யல்லாது, பிறர் பால் சென்று இரப்பதற்காக என்றும் மலர்ந்து விரியாது என்றெல்லாம் பிறர் கூறக் கேட்டிருக்கிறேன் ; அவை யெல்லாம் பொய் என்பதை இன்று அறிந்தேன் ; இருகை விரித்துப் பிறர்பால் இரந்து நிற்பதை இதோ காண்கி றேனே !" என்று நகைத்துக் கூறினர் ; அம் மட்டோடு நின்றாரல்லர். "சேரலாதன் சிறந்த வீரன் ; பகைவர் கோட்டைகளைப் பாழ்படுத்திக் கைக்கொள்ளும் பேராற்றல் வாய்ந்தவன் என்று புகழ்கிறார்கள் உன்னை ; அதையும் நான் நம்பவில்லை ; அவள்பால் இரு கையேந்திக் கேட்கிறாய் அம் மலரை ; அவள் மறுத்துவிட்டு, 'யாரையோ நீ' என்று இகழ்ந்து கூறிவிட்டுச் சென்றாள் ; நின் மனைவியின் கையில் உள்ள குவளை மலரை நீ கேட்கிறாய் ; அவள் மறுக்கிறாள் ; உன்னால் அதைக் கைப்பற்ற முடியவில்லை ! பகைவர் கோட்டைகளை எவ்வாறு நீ கைப்பற்றியிருப்பாய் ?" என்று கூறி எள்ளி நகைத்தார்.

"தடக்கை
இரப்போர்க்குக் கவித லல்லதை இரைஇய
மலர்புஅறி யாஎனக் கேட்டிகும்"

"நின், எறிய ரோக்கிய சிறுசெங் குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள் நீயெமக்கு
'யாரையோ' எனப் பெயர்வோள் கையதை
கதுமென வுருத்த நோக்கமோடு அதுநீ
பாஅல் வல்லாய் ஆயினை ; பாஅல்
யாங்கு வல்லுநையோ...வேந்தர்தம் எயிலே." (பதிற்று : ௫௨)

"நல்லாறு எனினும் கொளல்தீது ; மேல்உலகம்
இல் எனினும் ஈதலே நன்று". (திருக் : ௨௨௨)

என்ற குறளுரைக்கு ஏற்ப, புலவர்க்கும் இரவலர்க்கும் கொடுத்துப் பழகிய அவன் கொடைச்சிறப்பையும், பிறர்பால் கையேந்திக் கேளாப் பெருமைக் குணத்தையும், பகைவர் கோட்டையைப் பாழாக்கும் பேராற்றலையும், தன் இல்லாள்பால் கொள்ளும் இன்பச் சிறப்பையும் ஒருங்கே உணர்த்தி விளங்கவைத்த புலவர்தம் சிறப்பை நோக்குங்கள்.

வேற்றூர் செல்லவிரும்புகின்றான் ஒருவன்; ஊர்தி ஏறிச் செல்ல வசதியில்லாக்காலம் அது; எங்கும் நடந்தே செல்லுதல் வேண்டும்; அவன் செல்லவேண்டிய இடமோ நெடுந் தொலைவில் இருக்கிறது; பகலில் நடந்து சென்றால் வெயிலின் வெப்பம் வாட்டும் என்று அஞ்சினான்; ஆகவே, பின் இரவில் எழுந்து நடக்கலானான்; செல்லும் தொழில் மேலுள்ள வேட்கை, அவனை விடியற்காலத்திலேயே விரட்டிவிட்டது; வெளியே வந்தான்; பனி மழைபோலக் கொட்டுவதைக் கண்டான்; குளிர் தாங்கமுடியவில்லை; திறந்தவெளியில் வாழ்ந்து பழகிய விலங்குகளும் குளிரால் உடல் குன்றித் துன்புறுகின்றன என்றால் பனியால் அவன் படும்துயரை அளவிட்டுக் கூறல் இயலாது. என்றாலும், மீண்டு வீட்டிற்குச் சென்றுவிடாமல் வழிநடக்கின்றான். விரைவில் இருள்போய்ப் பகல் வரும் என்ற நம்பிக்கை அவனை நடக்கவைக்கிறது; அந் நம்பிக்கையால் நடுங்கும் குளிரையும் தாங்கிக்கொண்டு வழிநடக்கிறான்; நடக்கிறான்! நடக்கிறான்! நடக்கிறான்; ஆனால் இரவு குறைவதாகவோ, பகல் தோன்றுவதாகவோ தோன்றவில்லை; அப்போது தான், அது மாசித்திங்கள் என்ற நினைப்பு வந்தது; மாசித் திங்களில் பகல் குறைவு; இரவே நீண்டது என்பதையுணர்கிறான்; உள்ளம் கலங்குகிறது; எனினும் உறுதி குலையாமல் குனிந்து நடந்துகொண்டே செல்கிறான்; நெடுந்தொலைவு சென்று நிமிர்ந்து நோக்கினான்; கிழக்கே ஞாயிறு தோன்றிவருவதைக் கண்டான்; அந் நிலையில் அவன் உள்ளம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும் என்பதை உணர்த்தமுடியுமா? வழியில் வருந்தும் அவன் வாட்டம்

தீர ஞாயிறு தோன்றியதைப்போல, இரவலரின் இடும்பை தீரத் தோன்றினன் சேரலாதன் என்று சிறப்பிக்கின்றார் நம் புலவர். இவ் உவமையால், அவ்விரவல் மக்களின் நீண்டகால வறுமையின் கொடுமையும், அவர்களுக்குப் பொருள்களை வாரி வழங்கும் சேரலாதன் வள்ளன்மையும் ஒருங்கே தோன்றக் கூறியுள்ள சிறப்பை யுணர்க.

"பகல்நீ டாகாது இரவுப்பொழுது பெருகி,
மாசி நின்ற மாகூர் திங்கள்
பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்பப்
புல்லிருள் விடியப் புலம்புசேண் அகலப்
பாயிருள் நீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றி யாஅங்கு
இரவன் மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய......செல்வர் செல்வ!" (பதிற்று : ருக)

செய்யுளில் உவமையினை மேற்கொள்வதில் நம் புலவர் புதுமுறையொன்றை மேற்கொண்டுள்ளார்; "மாரியன்ன வண்மை" என்று ஒருவன் வள்ளல் தன்மைக்கு மழையை உவமை கூறுதல் மரபு; இதனால், வள்ளல் மேகம் போன்றவன் என்று பொருள்படும்; இவ் உவமைகண்டு அஞ்சுகின்றார் நச்செள்ளையார்; நீர் ஏந்திக் கருக்கொண்டு வந்த மேகம், மழையைப் பெய்தபின்பு வெண்ணிறம்பெற்று, மேலே எழுந்து சிறுசிறு பிசிராக மாறி மறைந்துவிடும்; இது மேகத்தின் இயல்பு; சேரலாதன் மேகத்தோடு ஒப்பானவன் என்று கூறினால், அவனும் அம் மேகத்தைப் போன்றே தேய்ந்து அழிந்துபோய் விடுவானோ என அஞ்சுகின்றார்; ஆகவே, அவ்வாறு "அழியாது வாழ்க" என்று வாழ்த்துகிறார்.

"பெய்து புறந்தந்து பொங்க லாடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்
சென்று அழியரோ பெரும!"

சேரலாதனுக்கு மேகத்தை உவமைகூறி, தம் உள்ளத் தூய்மையையும் உணர்த்தும் அவர் புலமையின் சிறப்பே சிறப்பு!

## ௪௧. காமக்கணிப் பசலையார்

பசலையார் என்ற பெயர், பசலை என்ற நோயின் இயல்பைப் பாடிய காரணத்தால், மாறோக்கத்து நப்பசலையார்க்கே உரியது என்றாலும், அக் கால மகளிர் பலரும், அப் பெயரைத் தாமும் வைத்துக் கொண்டிருந்தனர்: குமிழி ஞாழலார் நப்பசலையார், போந்தைப் பசலையார் என்ற பெயர்களைக் காண்க; அத்தகைய மகளிருள் காமக்கணிப் பசலையாரும் ஒருவர். பசலையார் என்ற பெயரை எவ்வாறு மகளிர் பலரும் வைத்துக் கொண்டிருந்தனரோ, அவ்வாறே காமக்கணி அல்லது காமக்கண்ணி என்ற பெயரையும் அக்கால மகளிர் பலரும் தங்கள் பெயராக வைத்துக் கொண்டிருந்தனர்: வெறிபாடிய காமக்கண்ணியார் என்ற பெயரைக் காண்க. இவர், அவ்விரு பெயரையும், தம் ஒரு பெயராகக் கொண்டுள்ளார். மதுரை காமக்கணி நப்பாலத்தனார் என்ற புலவர் ஒருவர், அகநானூறு பாடிய புலவர் வரிசையில் காணப்படுகிறார். காமக்கணி என்ற தொடர் இருவர் பெயரினும் வருவதைக்கண்டு, இருவரையும் ஒருவராகக்கொண்டு, காமக்கணி நப்பசலையார் மதுரையில் வாழ்ந்த நல்லிசைப் புலமை மெல்லியலார் என்று கூறுவர் சிலர்.

இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்தது நற்றிணையில் வரும் பாட்டொன்றே; ஒன்றேயாயினும், அது அழகு நிறைந்து அறிவுரை பல கூறும் ஆற்றல் வாய்ந்து காணப்படுகிறது.

இளவேனிற்காலம், கணவனும் மனைவியும் கலந்து வாழவேண்டிய காலம்; சோலைக் குயில்கள் தம் பெடையோடு இணைபிரியாதிருந்து இன்பம் அனுபவிக்கும் காலம்; இத்தகைய காலத்தே ஒருத்தியின் கணவன் பொருள் தேடிவரப் பிரிந்து சென்றுவிட்டான். "நாம் வாழ்க்கையில் இன்பத்தை நுகர்ந்து வெறுத்துவிட்ட முதியோர் அல்லர்; நல்ல இளமையுடையோம்; இன்ப உலகில் இப்போதுதான் அடியெடுத்து வைத்துள்ளோம்; அவ்வா

றாகவும், இந்தப் பருவத்தில் இத்தகைய இளவேனிற் காலத்தில்—என்னைத் தனியேவிட்டுப் பிரிந்துவிட்டார்; குயில்கள் கூடியிருந்து 'கூ, கூ'வெனக் கூவுவதைக் கேட்டு மகிழ்ந்தவர்தான் அவர்; கூ, கூ எனக் கூவும் குயில்கள் என்ன கூறுகின்றன தெரியுமா? 'மக்காள்! செல்வம் நிலையற்றது; சூதாடு கருவி உருட்டுந்தோறும் உருட்டுந்தோறும் ஒன்றுபோல் விழாமல், மாறி மாறி விழுவதேபோல், செல்வமும் ஒரே தன்மையாய் இராமல் குறைவதும் நிறைவதுமாய் மாறி மாறி வரும்; ஆகவே, அச் செல்வத்தை மதித்து இன்பம் அனுபவிக்கவேண்டிய இளமைக் காலத்தில், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து போய்விடாதீர்கள்; எங்களைப்போல் இணைந்து இருந்து இன்பம் நுகருங்கள்,' என்று கூறுகின்றன, என அன்று எனக்குக் கூறி மகிழ்வித்தவர்தான் அவர்; நிலையாத பொருளைத் தேடிப் பெற வேண்டும் என்று அவர் பிரிந்து போய்விட்டார்; 'பிரியேன்; பிரியின் உயிர்தரியேன்; அறன் அல்லன செய்தவனும் ஆவேன்' என்று அன்று கூறியதை அழித்துப் பேசும் அறனிலி அல்லர் அவர்; அறத்தை அறிந்தவர்; அறவழி நடப்பவர்; இருந்தும், இன்று பிரிந்துவிட்டாரே!" என்று பெரிதும் துன்புற்றாள். பின்னர்ச் சிறிதுநேரம் அமைதியாக இருந்து சிந்தித்தாள்; "இளமை நில்லாது; இளமை கழிந்தபின்னர் இன்பம நுகர்தலும் இயலாது; பொருளோ சகடக்கால்போல் மாறி மாறி வரும் இயல்புடையது. சேர்ந்தோர் துயர்உறத் தான் பிரிந்து செல்லுதல் அறன் அன்று என்றெல்லாம் அறிந்தவர் பிரிந்தார் என்றால், பிரிவின் இன்றியமையாமையினை உணர்ந்தே பிரிந்திருத்தல் வேண்டும். இருந்து வாழ்ந்தால் இருவரும் இன்பம் பெறுவோம்; ஆனால் பொருள் பெறமுடியாது; பொருள் நில்லா இயல்புடையது என்றாலும், அது இல்லையானால் அறவோர்க்கு அளித்தல்முதலிய இல்லறக் கடமைகளை இனிது ஆற்றல் இயலாது.

> "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு." (திருக்குறள்: அக)

அன்றே அந்தக் கடமையில் தவறுதல் கூடாது; அதற்குப் பொருள் மிக மிகத் தேவை;

"அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு." (திருக்குறள் : எடுஎ)

ஆகவே, அறத்திற்கும் பொருள்தேவை; அறத்தினும் பொருளே சிறப்புடைத்து," என்று அறிந்தார் அவர்; ஆகவே பிரிந்தார் என்று அவளுக்கு உண்மை உணர்வு உண்டாயிற்று "பொருளின் அருமையே அருமை" என்று அவள் உள்ளம் அவளறியாமலே கூறிற்று.

"பொதும்புதோ றல்கும் பூங்கண் இருங்குயில்
'கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின்! அறிவுடையீர்!' எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல,
மெய்யுற இருந்து மேவா நுவல,
இன்னா தாகிய காலைப் பொருள்வயின்
பிரிதல் ஆடவர்க்கு இயல்பெனின்
அரிதுமன் றம்ம! அறத்தினும் பொருளே." (நற்றிணை: உசங)

"என்னைவிட்டுப் பிரிந்தானே" என்று ஏங்கிச் சினவாது, "பிரிதல் அவர்கடன்; அதற்குத் துணைசெய்தல் என்கடன்; இல்லறப் பண்பிற்கு ஏற்றது" எனத் தன் கடமையுணர்ந்து துயர் பொறுத்துக்கொள்ளும் தலைமகள் ஒருத்தியைக் காமக்கணிப் பசலையார், நமக்கு அறிமுகம் செய்துவைத்துள்ளார்.

# ௧௦. காவற்பெண்டு

காவற்பெண்டு என்பது செவிலித்தாயைக் குறிக்க அக்காலத்தே வழங்கிய ஒரு பெயர். அதுவே இவர்க்கு இயற்பெயராக அமைந்துவிட்டது. சிறந்த அரசர்குடி ஒன்றில் இவர் செவிலித்தாயாகத் தொழிலாற்றியிருப்பர் என எண்ணுவர் சிலர். சோழன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழ அரசனுக்குச் செவிலித்தாயாக இவர் இருந்தார் என்றும் கூறுவர்; ஆனல், அதற்கான சான்று எதையும் அவர்கள் காட்டவில்லை. புறநானூற்றில், இவர்பாட்டு, போரவைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாராட்டிவந்த பாக்களையடுத்து வைக்கப்பெற்றுள்ளமையே இவரை, அவன் செவிலித்தாயாகக் கோடற்குக் காரணம் போலும்; முன்பாட்டு, இன்னுரைக் குறிக்கிறது; ஆகவே, இதுவும், அவரையே குறித்ததாதல் வேண்டும் எனக் கோடல் பொருந்தாது. முன்னும், பின்னும் வரும் பாக்கள், ஒருவரையே குறிக்க, இடைவரும் பாட்டு, யாரைக்குறிப்பதெனும் தெளிவின்றிவரின், ஒரோவழி அப் பாட்டையும், அவரைக் குறிப்பதாகவே கோடல் பொருந்தும்; இவர் பாட்டு அவ்வாறு வரிசை செய்யப்பெறவில்லை; இவர் பாட்டை அடுத்துவரும் பாட்டு, போரவைக்கோப்பெருநற்கிள்ளியைக் குறிக்கவில்லை; மாருக அதியமான் நெடுமானஞ்சியைக் குறிக்கிறது. ஆகவே, இவரை அப் போரவைக் கோவின் செவிலித்தாயாகக் கோடல் பொருந்தாது எனக் கொள்க. சில ஏடுகளில் இவர் பெயர் காதற்பெண்டு என்றும் காணப்படுவதை நாம் மறத்தல் கூடாது. இவர் பெயர் எதுவேயாயினும் இவர் தொழில் எதுவேயாயினும், இவர் பாட்டைப் படிப்போர் ஒவ்வொருவரும், இவர் ஒரு மறக்குடி மகளாய்ப் பிறந்து மற்றொரு மறக்குடியில் வாழ்க்கைப்பட்டவர் என்பதும், மறம்விளங்கும் மகன் ஒருவனுக்குத் தாயாம் பேறுபெற்றவர் என்பதும், சிறு சொற்களால் பெரும்பொருள்களை விளங்கவைக்கும் புலமையுடையவர் என்பதும் உணர்வர்.

காவற்பெண்டு, "இடம்பட வீடிடேல்;" "சிறுகக் கட்டிப் பெருகவாழ்;" என்பதற்கேற்ப, சிறிய, ஆனால், அழகிய வீடொன்று கட்டி வாழ்ந்திருந்தார். அவர் ஒரே மகன், நாடுகாவல் கருதி நடக்கும் போரில் கலந்து கொள்ளச் சென்றிருந்தான். போர் பல நாள் நீடித்தது; அதனால், அவ்வூரார் அவனை நெடுநாளாகப் பார்க்கவில்லை; அந்நிலையில் அண்டைவீட்டு மகள் ஒருத்தி அவர் வீட்டிற்கு வந்தாள்; வந்து அவ்வீட்டுத் தூண்களில் ஒன்றைத் தழுவி நின்றுகொண்டே அவரை நோக்கி, "நின் மகனை நெடு நாளாகவே காணமுடியவில்லையே! அவன் எங்கே? பெற்ற உன்னைத் தனியேவிட்டு அவன் எங்கே போயிருக்கிறான்?" என்று கேட்டாள். அதற்கு அவர், "அம்மா! என் மகன் என்னைத் தனியேவிட்டுப் போய்விட்டான் என்று துயருறு கின்றாய்; என்பால் நீ காட்டும் அன்பிற்கு நன்றி; ஆனால் ஒன்று உரைக்கிறேன் கேள்; என்னைத் தனியேவிட்டுப் போய்விட்டானே யென்று கவலைகொள்கிறாயே, எனக்கும் அவனுக்கும் உறவென்ன இருக்கிறது? நான் அவனைப் பெற்றேன் என்பது உண்மைதான்; அவனைப் பத்துமாதம் சுமந்த வயிறும் இந்த வயிறுதான்; அதனாலேயே அவன் எப்போதும் இங்கேயே இருக்கவேண்டுமா? புலிகூட இளமையாக இருக்கும்போது மலைக் குகைகளில் சில நாள் இருந்து வாழ்கின்றன; அதனால் அது எப்போதும் அங் கேயே வாழ்வது கிடையாது; அவ்வாறு வாழ்ந்திருக்கும் என்று எவரும் எண்ணார்; அதைப்போல், நான் பெற்றேன் வளர்த்தேன்; என் கடன் அஃதோடு தீர்ந்தது; அவனும் ஆண்மகனாகிவிட்டான்; ஆண்மகனாகிவிட்ட அவன், இனி யும் என்னோடு இருந்து இங்கேயே வாழவேண்டும் என்று எண்ணுவது அறிவுடைமையன்று; அவன் தன் கடன் செய்யச் செல்வதே அறம்; களிறு எறிந்து பெயர்த லன்றோ அவனைப்போன்ற காளையர்க்குக் கடன்; அதை அவன் செய்யப் போயிருப்பான்; அவன் அதில் சிறிதும் தவறான்; ஆகவே, எங்கே போயிருக்கிறான்? என்ன செய் கிறான் என்றெல்லாம் கவலைப்படவேண்டிய நிலை எனக்கு இல்லை. அவனைக் காணவேண்டும் என்று எப்போதாவது

எண்ணினால் நேரே போர்க்களம் செல்வேன்: அவன் அங்கே யிருப்பது உறுதி; காண்பேன்; மீள்வேன்; இப் போதும் அவன் அங்கேதான் இருப்பான்" என்று கூறினார்:

"சிற்றில் நற்றூண் பற்றி 'நின்மகன்
யாண்டுளனோ?' என வினவுதி; என்மகன்
யாண்டுளனாயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே." (புறம்: அசு)

இப்பாட்டு ஒன்றிலேயே, காவற்பெண்டின் மறக்குடி உள்ளத்தின் மாண்பும், அக்கால இளைஞர் தம் கடமையில் சிறிதும் தவறார்; ஆகவே, தாய் தந்தையர் அவர் ஒழுக்கங் குறித்துச் சிறிதும் கவலைகொள்ளார்; மக்களைப் பெற்றுப் பேணிவிடுவதே தம் கடன்; அஃதோடு அவர்க்கும் தமக்கும் உள்ள உறவு அற்றது; இனி அவர், அவர்கடன் ஆற்றச் செல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பதன்றி, என்றும் தம் அருகிலேயே யிருந்து தமக்கு வேண்டுவனவே புரிந்து கொண்டிருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது அறிவுடைமை யன்று என்றே அக்காலப் பெற்றோர்கள் கருதினார் என்ற உண்மைகளும் வெளியாதல் காண்க. இவ்வளவு கருத்துக் களையும் தம் சிறுபாட்டு ஒன்றிலேயே விளங்கவைத்த காவற்பெண்டின் புலமைச் சிறப்பே சிறப்பு!

# கக. குமுழிஞாழலார் நப்பசலையார்

குமுழி ஞாழலார் நப்பசலையார் என்ற இப்பெயர் இவருக்கு ஏன் வந்தது என்பதை அறிந்துகொள்ள முடிய வில்லை; இவரின் பிறவாழ்க்கை வரலாறுகளையும் அறிந்து கொள்ள இயலவில்லை.

இவர் பாடிய பாட்டு ஒன்று; அது அகநானூற்றில் நெய்தல்திணை குறித்து வந்துளது; இவர் மக்கள் உள்ளத் தையே அன்றி, பிற உயிர்களின் இயல்பையும் உள்ளவாறு உணர்ந்து உணர்த்தவல்லவர் என்பது அச் செய்யுளால் அறியப்படும்; ஆமை முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் முறையை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்; சூல்கொண்ட பெண் ஆமை, முட்டையிடும் காலம் நெருங்கிவிட்டது என்பதை அறிந்துகொண்டவுடனே, அந் நீர்நிலையைவிட்டு வெளிவந்து, கரையில் மேடான இடத்தைத் தேடிக் கண்டு, அங்கே குழியொன்று பறித்து அதில் முட்டைகளையிட்டுக் குழியை மண்ணால் மூடிப் புதைத்துவிட்டு, அவ்விடத்தை யும் அருகே வளர்ந்திருக்கும் அடம்பங் கொடிகளால் மறைத்து விட்டுச் சென்றுவிடும்; பின்னர், அம் முட்டைகள் குஞ்சு ஆகும்வரை அவ்விடத்தை விட்டக லாது ஆண் ஆமை காத்துக்கிடக்கும் என்று கூறுகிறார். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே நம் புலவர் அறிந்து கூறிய உண்மை இது.

"ஆமை இராக்காலங்களில் நிலத்திடைப் போதரும். சினையீனும் காலத்தில் நீராலும் பிறவற்றாலும் இடையூறு நிகழாததோர் தனியிடம் கண்டு, ஆங்கொரு குழிசெய்து, அதன்கண் தன் சினைகளை ஈன்று, மணலான் மெத்தென மூடிவிட்டுப் பின் வேறொரு வழியால் நீர்நிலையை அடை யும். சினையீனும் காலம் எய்திய வழியும், அக்காலத்து அது செய்தலால் தனக்காதல் தன்சினைகட்காதல் ஊறு நிகழும் என்பது தோன்றின், அது நிகழாமைக்குரிய காலம் வருமளவும் சினையீனாது நின்று, பெயர்த்துக் கரு வுயிர்க்கும் பெற்றிமையுடையது; சினையீன்ற ஆமை,

முன்னர்ப் போந்தவழியே மீளாமல், பிறிதொரு வழியாற் சேறல், பகையுயிர்கள் தன் சுவடுபற்றிப்போந்து, தன் சினைகட்குத் தீங்கு விளைவிக்கும் என்பது கருதிப்போலும் !.... முட்டை இட்டவுடன், ஆமைப் பார்ப்புகள் மணலைக் கிளைத்துக்கொண்டு வெளிவரும். அவற்றிற்கு அக்காலத்துக் கண் முதலிய பொறியில்லையாயினும், வாயினால் மணலைக் கறித்துக்கொண்டே நீர் நிலையை யடையும். காந்தவூசியை எவ்வழியிற் றிருப்பினும், அது வடதிசையையே நோக்கி நிற்றல்போல, ஆமைப் பார்ப்புகள் நீர்நிலையை அடைதற்குரிய நெறியைப் பற்றாதவாறு எத்துணையிடையீடுபடுப்பினும், அவை அவ்வனைத்தும் கடந்து நீர்நிலையையே தவறாது அடையும் இயற்கைவன்மை படைத்துள.*

இக்கால உயிர்நூற் புலவர்கள் பலவகையானும் ஆராய்ந்து கண்ட உண்மை இது.

"அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கம் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட்டு உருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்புஇடனாகும் அளவைப் பகுவாய்க்
கணவன் ஓம்பும்." (அகம் : ௧௬௦)

---

* The tortoises leave water only when the time comes for them to lay eggs The site of man will keep them off shore and the females will retain their eggs for long, rather than force unnatural risk. Landing in the still of night, they march in land to some point high enough to escape flood and high tide, dig deep pits in the sand and there lay their eggs. Then they return to the sea but not by the way they came in as if to lead astray any who should follow them to their nurseries. The young turtles, when hatched form the eggs, bite their way out of the sand and may be seen with their mouths full of grit as they march to the water. Instinct is strong and over-mastering with them. No matter how many times they may be diverted or even turned round and forced in as cpposite direction they make for the sea as a magnetic needle points to the north :...Book Of Knowledge.

# கஉ. குறமகள் இளவெயினி

குறிஞ்சிநில மக்கள் எயினர் எனப்படுவர்; அவர்களுள் பெண் மகள் எயினி எனப்படுவாள் ஆதலாலும், குறமகள் என்றே இவர் அழைக்கப்படுதலாலும், "எம்மோன்"- எங்கள் தலைவன்—என்று பாராட்டிய ஏறைக்கோனை "குறவர் பெருமகன்" என்று இவரே அழைப்பதாலும் இவர் குறவர் குடியிற் பிறந்தவர் என்பது தெளிவு. கல்வி, செல்வம், நாகரிகம் இவற்றால் இழிநிலையிலிருக்கும் இன்றைய குறவர்நிலையைப் பார்ப்பவர்க்கு, அக் குடியிற் பிறந்தவர் ஒருவர், அதிலும் பெண் ஒருவர் பெரும்புலவராய் விளங்கினார் என்பது அற்புதச் செயலாகவே தோன்றும். குறவர் குடியிலே பிறந்த இவர், மிகமிக இளமைக் காலத்திலேயே புலமை பெற்றுப் பாடல் புனையத் தொடங்கிவிட்டார். ஆகவே இவர், குறமகள் இளவெயினி என அழைக்கப்பெற்றார்.

குறமகள் இளவெயினி இனப்பற்று மிக்கவர்; புலவர் பலர் கூடியிருந்த அவையொன்றில், தம்மால் பாராட்டப் பெறும் தங்கள்குலத் தலைவனாகிய ஏறைக்கோன் என்பானுக்கும், அப் புலவர்களால் பாராட்டப் பெறும் ஏனைய தலைவர்களுக்கும் உள்ள உயர்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டி, "எல்லா வகையாலும் எங்கள் தலைவன் ஏறைக்கோனே சிறப்புடையான்' என்று காரணம் காட்டி உறுதி செய்துள்ளார். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," எனக் கொள்வதே புலவர் பண்பு; அதற்கு மாறாக, "நீங்கள்; உங்கள் தலைவர்கள்; நான்; என் தலைவன் எனப் பேதங் காணல், பெரும் புலவர்க்கு அழகு அல்ல என்றாலும், ஆண்டு இளமை, புலமையினும் ஆற்றல் மிக்கது ஆகவே, இளமை யுடையாராகிய இளஎயினி, இனப்பற்று மிக்கு அவ்வாறு கூறினார்; இளமையால் இனவுணர்ச்சி கொண்டு, பிரிவினை காட்டிப் பாடினார் என்றாலும், அவர் புலமைச் சிறப்பு, அக் குறை மறைத்து அவரைப் பெரும்புலவர் வரிசையில் வைத்துப் பாராட்டியது.

ஏறைக்கோனைப் பாராட்டிய பாட்டில், சிறந்த பல குணங்கள் ஏறைக்கோன் ஒருவனிடத்திலேயே உள்ளன; பிறர் எவரிடத்தும் அவற்றைக் காண முடியாது என்று கூறினார்; அவ்வாறு கூறுமுகத்தான், நல்லோர்பால் இருக்கவேண்டிய நற்குணங்கள் இவை இவை என்று உலகோர்க்கு எடுத்துரைத்துதவியுள்ளார்.

நம்மோடு நட்புக்கொண்டு நெடுநாள் பழகி வாழ்பவர் ஒரோவழி தவறு செய்துவிட்டால், அவர் தவறு செய்து விட்டனரே என்று வெகுண்டு, அவரோடு அன்றுவரை கொண்டிருந்த தொடர்பை மறந்து, அவரைப் பகைத்துக் கொண்டு, அவர்க்குத் துயர் தருதல் கூடாது; அது சான்றோர் செயலன்று.

இரப்பாரைக் கண்டு எள்ளி நகைத்தலும், பிறர் வறுமை கண்டு வாட்டம் கொள்ளாது, அதைத் தன் வாழ்வின் உயர்விற்குப் பயன்படுத்திக் கொள்வதுமே இன்றைய உலக நிலை. இந்நிலை இருப்பதாலேயே உலகம் அமைதி இழந்து அல்லல் உறுகிறது. "நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற உண்மையை உணர்ந்து தன்னைப் போன்றே உலகோர் அனைவரும் உயர்ந்து வாழ வேண்டும் என்று விரும்பி, அதற்காக உழைப்பதே தனக்கும் பிறர்க்கும் நலம் தருவதாம். இதை உணர்ந்தவர் மட்டுமே, வாட்டம் ஒருபாலும், ஆட்டம் ஒருபாலும், வறுமை ஒருபாலும், செழுமை ஒரு பாலும் இருப்பது காண உளம் நடுங்குவர். அந் நடுங்கும் உள்ளம் எல்லா மக்களுக்கும் உண்டானால், உலகம் அன்றே உயர்ந்துவிடும்.

"எப்படியாவது வெற்றிபெற வேண்டும்; எம்முறை யைக் கையாண்டாவது வெற்றி காணவேண்டும்" என எண்ணுவது பேடிச்செயல்; இன்றைய உலகப் போர்த் தலைவர்கள் அதையே போர்த் தந்திரம் எனப் போற்று கின்றனர்! உண்மை வீரன், வெற்றி தரும்வழி, பழிதரும் வழியாக இருத்தல் கூடாது என்பதில் கருத்துடைய னவன்;

"கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது." (திருக்குறள்: எஎஉ)

என்ற எண்ணம் அவன் உள்ளத்தே தோன்றுதல் வேண்டும்.

"அழியுநர்புறக்கொடை அயில்வே லோச்சாக்
கழிதறுகண்மை."

யைக் காதலிக்க வேண்டும் அவன்; அதுவே உண்மை வீரனுக்கு அழகாம்.

இம் முப்பெருங் குணங்களால் சிறந்தார் ஒருவர் எவர்க்கும் அஞ்ச வேண்டுவதில்லை; எவர்க்கும் பணிந்து போக வேண்டுவதும் இல்லை; எங்கும் அவர் பெருமிதமாகவே வாழலாம்; அரசர் பலர் கூடிய அவையிலும் அவர் நிலை உயர்ந்தே நிற்கும்; ஆகவே, அரசரும் மதிக்க வாழும் அப் பெருவாழ்வைப் பெறவே ஒவ்வொருவரும் முயன்று உழைத்தல் வேண்டும்

ஏறைக்கோன், முன்னர்க் கூறிய முக்குணங்களையும் பெற்றோன் ஆகவே, அரசவைகண்டு அஞ்சாது பெருமையோடு வாழ்ந்தான் என்று கூறியுள்ளார்.

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்,
பிறர்கை யறவு தான்நா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல; எம்மோன்
பெருங்கல் நாடன் எம் ஏறைக்குத் தகுமே."
(புறம்: குஎ)

இவ்வாறு தம் தலைவன் புகழ் பாடுவார்பால், உலக உயர்விற்கு ஒரு வழிகாட்டியாய் நின்று அறிவுரை கூறிய எயினியார்க்கு உலகம் நன்றி செலுத்துவது கடப்பாடாகும்.

# கந. குறமகள் குறிஎயினி

இவரும் குறவர் குடியிற் பிறந்த பெண்பாற் புலவரே என்று அவர் பெயர் அறிவிக்கும் வரலாறு தவிரப் பிற ஒன்றும் அறிய முடியவில்லை; ஏறைக்கோனைப் பாடிய குறமகள் இளவெயினியாரே இவர்; இளமையில் ஏறைக்கோனைப் பாடியவராதலின் அங்கே அவர் இளவெயினி எனப்பட்டார் என்றும் தன், வாழ்நாளின் பிற்காலத்தே பாடிய நற்றிணைச் செய்யுளில், "நின்குறிப்பெவனோ தோழி! என் குறிப்பு" என்ற முதலடியில் குறிப்பு என்ற சொல்லை அடுக்கிவைத்துப் பாடிய காரணத்தால் இவர் குறிப்பெயினி எனப்பட்டார்; ஏடு எழுதினோர் அதைக் குறிஎயினி என மாற்றி யிருத்தலும் கூடும் என்றும் கொள்வர் சிலர். குறமகள் என்பதைக் குறிஞ்சி நிலத்து நன்மகள் என்று கொள்ளாது குறக்குடியிற் பிறந்த மகள் என்று கொள்வது பிழை எனக் கூறுவர் வேறு சிலர். குறமகள் குறி எயினி, குறமகள் இளஎயினி என்பாரெல்லாம் குறவர்குடி மகளிரே என்பது குறமகள் என்ற சொல்லால் அன்றி, எயினி என்ற சொல்லாலேயே நன்கு உறுதி செய்யப்படும் என்பதை அவர் உணர்ந்திலர் போலும்.

குறவர் குடியிலே புலவரா? அக் குடிமகளிரில் இவ்வளவுபேர் புலமை பெற்றிருக்க முடியுமா? என்ற ஐய நெஞ்சத்தின் விளைவே இத்தகைய முடிவுகளெல்லாம். குறவர் குடியில் பெண்கள் பலர் புலமை பெற்றிருத்தலும் கூடும்; பேய்மகள் இளஎயினி என மற்றொரு புலவரும் இருப்பதே இதற்குச் சான்று. அவர்களை வேறு பிரித்துக் காண்பதற்காக, குறமகள் இளஎயினி, பேய்மகள் இளஎயினி; குறி எயினி, இள எயினி என அவர் பெயர்களுள் சில சொற்களை, அவர் பாடிய பாடல்களின் இயல்புக்கேற்ப மாற்றியமைத்து வழங்கியுள்ளனர். ஆகவே, அவ் இளவெயினியாரே, இக் குறி எயினியார் என்று கொள்வது சரியன்று; புலவர் வரலாறுகளை உணர்ந்துகொள்ளும் வழிவகையற்றிருக்கும் நிலையில் பலரை ஒருவராக்குவது, ஒருவரைப்

பலராக்குவது போன்ற தவறுகளைச் செய்யாது இருப்பதே தமிழறிஞர் தமிழ்மொழிக்கு ஆற்றும் கடனும்.

தாம் பாடிய குறிஞ்சித் திணைப்பாட்டில் வரும் தலைமகள், தலைமகன் தன்னை விரைவில் வரைந்து கொள்ளாது வாழ்கிறான் என்பதை அறிந்தும் அதுகுறித்து வருந்தாது இருக்கிறாள். அஃது எவ்வாறு எனக் கேட்பாள்போல் அவள் முகம் நோக்குகிறாள் தோழி; அதற்கு அவள் "தலைவனைக் கண்டு உறவுகொண்ட அந் நாளில், 'பிரியேன்; பிரியின் தரியேன்; அறனல்லன செய்தவனுமாவேன்' என்று சூளுரைத்துள்ளான் தலைவன்; அவ்வாறு சூளுரைத்த அந் நாளை நினைக்குந்தோறும், அவன் வரைந்துகொள்வது உறுதி என்ற எண்ணம் தோன்றுகிறது; அதனால், என் உள்ளம் துன்புறுவதில்லை; இதுவே என் கருத்து; தோழி! இதில் நின் கருத்து யாது?" என்று கூறுகிறாள். தலைவன் தெளித்த சொல்லைத் தேறியிருப்பதே தமிழ் மகள் கடன் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார் தமிழ்நாட்டு பெண்பாற் புலவராகிய குறி எயினியார்.

"நின்குறிப் பெவனோ தோழி! என்குறிப்பு
என்னொடும் நிலையா தாயினும், என்றும்
நெஞ்சுவடுப் படுத்துக் கெடவறி யாதே......
சாரல் நாடனொடு ஆடிய நாளே." (நற்றிணை: ௩௨௩)

# கசு. தாயங்கண்ணியார்

பெயரன்றிப் பிறிதொன்றும் அறிய முடியாத புலவர் வரிசையில் இவரும் ஒருவர். தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவரும், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவரும் ஆக இரு புலவர்கள் புறநானூற்றினால் அறியப்படுகின்றனர். அவ்விருவரும் ஒருவரே எனக் கொண்டு, தாயங்கண்ணனார், தாயங்கண்ணியார் என்ற பெயர்களிடையே காணப்படும் ஒற்றுமையினைக் கண்டால், தாயங்கண்ணியார், அப் புலவரோடு யாதோ ஒரு வகையில் உறவுடையவரோ என எண்ணவும் கூடும். அஃது உறுதி யாகுமானால், நம் தாயங்கண்ணியாரும் எருக்காட்டூரில் வாழ்ந்தவரே என்பதும் உறுதியாகும்; எருக்காட்டூர், தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் காவால குடிக்குக் கீழ்த்திசையில் உள்ள ஓர் ஊர் என்றும், திருவா ரூர்க்குத் தென்மேற்கே மூன்று நாழிகை வழித் தூரத்தில் உள்ளது என்றும் கூறுவர். தாயம என்பது உரிமை என்று பொருள்படும்; அது அரசர்கள் வரி நீக்கி ஒருவ ருக்கு உரிமையாக்கும் நிலத்தையோ அல்லது ஊரையோ உணர்த்துவதாகும். இதனால், நம் தாயங்கண்ணியார், எருக் காட்டூரைத் தாயமாகப் பெற்ற பெருமை மிக்க குடியோடு தொடர்புடையவர் என்பதும் உறுதி செய்யப்படும்.

தாயங்கண்ணியார், கணவனை இழந்த கைம்பெண் களின் துயர் நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்ட வல்லவர்.

கணவனும் மனைவியும் கூடி இல்லறம் ஆற்றிய பொழுது, ஆக்கிய சோறும் கறியும் மணக்கும் தாளிப்பு மணம், இரவலர் பலரை இழுத்துக் கொணர, அவர்கள் வீட்டுவாயில் என்றும் குறைவின்றிக் கூடியிருக்கும் சிறப்புடையது. வறுமையால் வாடிக் கண்ணீர் விட்டுக் கலங்கும் பலருடைய கண்ணீரை மாற்றிக் கருணை புரிந் தது அவ்வீட்டின் முன்னே அமைந்த பந்தல்; அவ்வளவு சிறப்புடைய வீடு இப்போது பொலிவிழந்து விட்டது;

கணவன் இறந்துவிட்டான்; அவன் மனைவி, தலைமயிரை யையும் கைவளையையும் இழந்து, அல்லி அரிசியாலான புல் லுணவு உண்டு புலம்புகிறாள்; முன்னே பலர் கண்ணீரை மாற்றியது அவ்வீடு; ஆனால் இப்போது அவள் ஒருத்தி யின் கண்ணீரைக்கூட அதனால் மாற்ற முடியவில்லை; அறுசுவை அடிசில் வீடு நோக்கி வந்தவர் பலர்க்கும் அளித்த அவ்வீடு, அவள் ஒருத்திக்கு உணவளிக்க முடிய வில்லை; வனப்பும் வளமும் பெற்றிருந்த வீடு, அவள் கணவன் இறந்துவிட்டானாக, வாழ்வும் வளமும் இழந்து, அவளோடு கூடி வாடி வருந்துகிறது என்ற கருத்தமைந்த அவர் பாடல் இது.

“குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.”

(புறம் : உருo.)

மனைக்குரியோன் மாண்டானாக, மனை மாண்பிழந்து விட்டது எனக் கூறும் புலவர், மனை மாண்பிழத்தலாவது இரவலரை இனிதேற்று, இனியன அளித்து, அவர் கண்ணீரை மாற்ற மாட்டாமையே எனக் கூறுவது பாராட் டற்குரியதாம்.

# ௧௫. பாரி மகளிர்

பாண்டி நாட்டில் பறம்பு என்றோர் மலையுண்டு; அது மிகவும் உயர்ந்தும் அகன்றும் விளங்கிற்று; அதனால் என்றும் நீர் அறாத அருவிகள் பல அம்மலையில் பாய்ந் தோடிக்கொண்டிருந்தன; அவ்வருவிகளே யல்லாமல், இனிய குளிர்ந்த நீர் நிறைந்த சுனைகள் பலவும் அம்மலையில் உண்டு. இவ்வாறு நீர் வளம் நிறைந்திருந்ததால், அம் மலை மண்வளத்திலும் சிறந்திருந்தது; அதனால் பலா போன்ற பழவகைகளும், வள்ளிபோன்ற கிழங்கு வகைகளும், நெல் போன்ற உணவு வகைகளும் நிறையக் கிடைக்கும்; இனிய தேன் வகைகளுக்கும் இருப்பிடமாயிருந்தது அம் மலை. இவ்வாறு எல்லா வகையாலும் சிறந்த அம் மலையைச் சூழ முந்நூறு ஊர்களும் இருந்தன; அம் முந்நூறு ஊர்களைக் கொண்ட நாட்டிற்கும் அம் மலையின் பெயராகிய பறம்பு என்பதே பெயராக அமைந்தது.

அப் பறம்பு மலையையும், அப் பறம்பு நாட்டையும் ஆண்டுவந்தான் பாரி என்னும் பெருவீரன்; பெரிய கொடைவள்ளல்; அன்பும் அருளும் உடையான்; அறி வுடையோரை ஆருயிர் நண்பராகக் கொள்ளும் அவாவுடை யான்; அவன் நண்பர்களுள் சிறந்தவர் கபிலர் என்ற முது பெரும் புலவர்; அவனுக்குப் பெண்மகளிர் இருவர் இருந் தனர்; அவர்கள் பெயரை அறிந்துகொள்ள முடியாத கார ணத்தால், பண்டைத் தமிழர்கள் அவர்களைப் பாரிமகளிர் என்று அழைத்தனர்; ஆகவே, நாமும் அவர்களை அவ்வாறே அழைப்போம்; தமிழ் நாவலர் சரிதை என்ற நூல் மட்டும் அவ்விரு மகளிர்க்கும் அங்கவை, சங்கவை என்று பெயரிட்டு அழைக்கின்றது.

பாரிமகளிர் தம் தந்தையைப் போன்றே அன்பும் அருளும் உடையவர்; அறிவிற் சிறந்தவர்; தந்தை பாரி புலவர்களை அழைத்து அவர் பாடல் கேட்டு மகிழும் பண்புடையனே தவிர, பாடும் ஆற்றலைத் தான் பெற்றவ னல்லன்; ஆனால், அவன் மகளிரோ, அருங்கவி பாடும் அறிவுடையவர்; புலவரும் போற்றும் புலமையுடையவர்.

இவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்த அவர்கள் வாழ்வும் பாழ்பட்டது; தாழ்வுற்றது; அவர்கள் தந்தை பாரி, பேரும் புகழும் பெருக வாழ்வதைக்கண்டு பொறாமை கொண்டனர், அப்போது தமிழ்நாட்டை யாண்டுவந்த சேர சோழ பாண்டியர் என்ற தமிழரசர்கள் மூவரும்; பொறாமை, பகையாக வளர்ந்தது; பாரியை அழித்துவிட முடிவு செய்தனர்; பெரும் படைகொண்டு பாரியை எதிர்த்தனர்; அவன் மலையை முற்றுகை செய்தனர்; முற்றுகை பல நாள் நீடித்தது; என்றாலும் பாரியை வெல்ல அவர்களால் முடியவில்லை; போர் செய்து அவனை அழிக்க முடியாது என்பதை யுணர்ந்த அவர்கள், அவனை வஞ்சனையால் கொன்றனர்; பாரிமகளிர் தந்தையை இழந்தனர்; தந்தையைத் தொடர்ந்து தாயும் மாண்டாள்; பாரிமகளிர் பெற்றோர் இழந்த பேதையர் ஆயினர்; தனியராய் நின்று தவிக்கும் அம் மகளிரை அவர்கள் தந்தையின் ஆருயிர் நண்பராகிய கபிலர், ஆறுதல் கூறித் தம்முடன் அழைத்துச் சென்றார்.

பறம்புமலையை விட்டுப்பிரிந்து ஒரு திங்கள் ஆயிற்று; ஒரு நாள் அவர்கள் மூவரும் ஓர் ஊரில் ஒரு குடிசை வீட்டில் தங்கியிருந்தார்கள்; அன்று முழு நிலா நாள்; அவர்கள் அவ் வீட்டில் அமர்ந்திருக்கும்பொழுது, அவ் வீட்டை அடுத்துச் செல்லும் பெருவழி வழியாக உமணர்கள் என்னும் உப்புவணிகர் தம் உப்புவண்டிகளை வரிசையாக ஓட்டிக்கொண்டு சென்றனர். ஒழுங்காகச் செல்லும் அவ் வுப்புவண்டிகளைக் கண்டதுமே, அம்மகளிர் உள்ளம் மனக்கவலைமறந்து மகிழத்தொடங்கிற்று; இருந்த இடத்தைவிட்டு எழுந்து ஓடினர்; வீட்டருகேயிருந்த குப்பையொன்றே உயர்ந்த இடமாகஇருப்பது உணர்ந்தனர்; அதன் மீது ஏறிநின்றனர்; உப்பு வண்டிகளை ஒன்று இரண்டு என எண்ணத் தொடங்கினர்.

இக் காட்சியைக் கண்டார் கபிலர்; கண்களில் நீர் விட்டுக் கலங்கினார்; வாழ்க்கையில் நிகழும் ஏற்றத்தாழ்வுகளை எண்ணினார்; அவர் உள்ளம் உருகிற்று; அம் மக

ளிர், அவர்கள் தந்தை உயிரோடு இருந்த காலத்தில் வாழ்ந்த செல்வவாழ்வும், அப்போது அவர்கள் மேற் கொண்டிருந்த இன்ப விளையாடல்களும் அவர் மனக்கண் முன்வந்து நின்றன: பாரியை அழிக்க எண்ணிய மூவேந் தர்கள், அவன் மலையை முற்றுகையிட்டுள்ளனர்; அம் முற்றுகைப் படையில் கலந்து வந்துள்ள யானையும் தேரும் குதிரையும் பிறவும் கணக்கிலடங்கா; இவ்வாறு புறத்தே பகைவர் பெரும்படை; ஆனல், அம் மகளிர்க்கு அதைக் குறித்துக் கவலைகொள்ளாக் குழந்தையுள்ளம்; பறம்பு மலையின் உயரமான உச்சி யொன்றின்மீது ஏறிநின்றனர்; மலைக்கோட்டைக்கு வெளியே வந்துநிற்கும் பகைவர் படைவரிசையைக் கண்டனர்; பெரும்படை கண்டு அச்சங் கொள்வதற்கு மாருகப் பார்த்து நகைத்தனர்; நம் தந்தை யொருவரை அழிக்க மூன்று பெரும் அரசா களா? இவ்வளவு பெரும் படையா? படையில் கலந்து வந்திருக்கும் குதிரைகள்மட்டும் எவ்வளவு? என்று ஏள னம் செய்துகொண்டே அக் குதிரைகளை ஒன்று இரண்டு என்று எண்ணிப் பார்த்தனர்; அன்று இவ்வாறு ஆடி மகிழ்ந்தனர்; அம் மகளிரின் இன்றைய நிலை..? என்று ஏங்கித் துயருற்ருர்; முன்பு அவர்கள் பெற்றிருந்த செல்வ வாழ்வும், அவர்களின் இன்றையச் சீர் அழிந்த நிலையும் அவரை ஆருத் துயர்க்கடலில் ஆழ்த்தின; குன்றேறி நின்று குதிரைகளை எண்ணிய அவர்கள், இன்று குப்பை மேடேறி, உப்புவண்டிகளை எண்ணும் கோரக்காட்சி கபி லர் கண்களைக் கடலாக மாற்றிற்று.

கபிலர் கண்ணீர், கவலைமறந்து களித்துத் திரியும் அம் மகளிர் உள்ளத்தே பண்டைய நினைவுகளை எழுப்பிற்று; முந்திய முழுநிலா நாளில் தங்கள் தந்தையோடிருந்து, பல் வளம் நிறைந்த தங்கள் பறம்புமலையில் ஆடிப்பாடி அக மகிழ்ந்து வாழ்ந்த இன்ப நினைவுகளை எண்ணினர்; அன்று, தாங்கள் ஆடிப்பாடி அகமகிழ்ந்து வாழ்தற் கிடமாயிருந்த தங்கள் இன்பப் பறம்பு, இன்று, பகையரசர் ஆட்சிக் குரிமையாகிவிட்டது; அன்று, தங்கள் ஆடல் பாடல்களை

அருகிருந்து கண்டு அகமும் முகமும் மலர மகிழ்ந்த தம் தந்தை இன்று இல்லை; இறந்துவிட்டான்; ஒருமாத காலத்தில் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த இம் மாறுபாடு அம் மகளிர் உள்ளத்தை மத்தடிபட்ட தயிரேபோல் கலங்கச் செய்தது; தங்கள் அவலவாழ்வு குறித்து அழுது அழுது பாடினர்; அவர்கள் அழுது பாடிய பாட்டிலே ஒன்று நமக்கும் கிடைத்துளது; அது:

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்: எம் குன்றும்! பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே."
(புறம்: ௧௧௨)

ஆற்றாது தாம் அழுவதைக்கண்டு அம் மகளிரும் அழுகின்றனர் என்பதறிந்தார் கபிலர்; தாமும் தேறினார், மகளிரையும் தேற்றினார்; அம் மகளிர் மணப்பருவம் எய்திய மங்கையர்; ஆகவே, அவர்களைத் தக்கார்க்கு மணஞ் செய்துவைப்பது, அவர் தந்தையின் நண்பனாகிய தன் கடனே என்று உணர்ந்தார்; மகளிரை அழைத்துக் கொண்டு விச்சிக்கோன் என்ற குறுநில மன்னன் ஒருவன் பால் சென்றார்; அவன் வளஞ் சிறந்த மலைநாடுடையோன்; யானைப்படையால் நிறைந்த பெரும் படையுடையான்; அவனை அணுகி, "அரசே! இதோ நிற்கும் இம் மகளிர், என் நண்பன் பாரியின் மகளிர்; பாரி, முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் என்ற புகழுடையான்; குலத்தாலும் குணத்தாலும் நிறைந்த இவர்களை ஏற்று மணஞ்செய்து கொள்வாயாக" என்று வேண்டினார்; ஆனால், யாது காரணத்தாலோ அவன், அம் மகளிரை பேற்றுக்கொள்ள மறுத்து விட்டான்.

முயற்சியைக் கைவிட்டாரல்லர் கபிலர்; இருங்கோவள் என்ற மற்றொரு சிற்றரசன்பால் சென்றார்; பழைய தமிழ்க்குடிகளுள் ஒன்றாகிய வேளிர்குடியிலே வந்தவன்

அவன்; பேராற்றல் வாய்ந்தவன்; அவன் அரசவை சென்று அவனைக் கண்டார்; மகளிரைக் காட்டினார்; "அரசே! தன்னைப் பாடிவந்த புலவர்களுக்கே, தன் முந்நூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துப் புகழ்பெற்ற பாரியை நீ அறிவாய்; அவன் மகளிர் இவர்கள்; நான் அப் பாரியின் உயிர்நண்பன்; கபிலன்; பாரி இறந்துவிட்டான்; ஆகவே, இம் மகளிர்க்கு ஆவனபுரிதல் என் கடன்; இவர்களை நான் நினக்குத் தருகிறேன்; ஏற்று மணஞ்செய்து கொள்வாயாக" என்று வேண்டினார். அவர் வேண்டுகோளை அவனும் மறுத்தான்.

பெரும் புலவராய தம் வேண்டுகோளைக் குறுநில மன்னர்கள் மறுப்பதுகாண மனங்குன்றினார் கபிலர்; பேரரசனாகிய பாரியின் மகளிரை இவ்வாறு அரசவைதோறும் அழைத்துத் திரிதல் மானக்கேடு என்று எண்ணினார்; ஆகவே, தமக்கு வேண்டிய பார்ப்பார் சிலரிடத்தே அம் மகளிரை ஒப்படைத்தார்; திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருக்கோவலூர்க்குச் சென்றார். அந் நாடு மலையமான்கள் என்ற ஓர் அரச மரபினரால் ஆளப்படுவது; அப்போது அவர்கள் வழியிலே வந்த சிற்றரசன் ஒருவன் ஆண்டுவந்தான்; அவனைக் கண்டு, பாரி மகளிரை மணக்க அவனை இசையவைத்தார்; பின்னர் அம் மகளிரை அழைத்துச் சென்று அம் மலையனுக்கு மணம் செய்து கொடுத்தார்; பாரி மகளிரும் மலையனை மணந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

பாரி மகளிரின் திருமணத்தைப்பற்றிய மற்றொரு கதையும் தமிழ்நாட்டில் வழங்குகிறது; அதைப்பற்றியறிந்துகொள்வதும் நன்று.

பாரி மகளிர் பார்ப்பாரில்லத்தில் வாழ்ந்துகொண்டிருந்தனர்; ஒருநாள் பெருமழை பெய்துகொண்டிருந்தது; அப்போது ஔவையார் மழையால் முழுதும் நனைந்த மேனியராய் அவ் வீட்டினுள் நுழைந்தனர்; அம் மகளிர் வந்தவர் ஔவையார் என்பதை யுணர்ந்துகொண்டனர்;

ஔவையாரை அணுகி நனைந்த அவராடையை அகற்றினர்; உடுத்துக்கொள்ள அவர்க்கு வேறு ஆடை இல்லாமையால் தங்கள் நீலநிறச் சிற்றாடையைக் கொடுத்து நடுங்கும் அவர் உடற்குளிர் போக்கினர்; கொல்லையில் கொழுந்து விட்டு வளர்ந்திருக்கும் குப்பைக் கீரையைப் பறித்து வந்தனர்; சுவைபடச் சமைத்துச் சுடச்சுட அளித்தனர்; ஔவையாரின் உள்ளம் குளிர்ந்தது; ஊக்கம் பிறந்தது.

"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு." (திருக்குறள்: ௨௨௪)

என்றார் திருவள்ளுவர். அவ் வறிவுரையினை மதியாது, வந்தவர் இன்முகம் காணும்வரையிலும் பொருள்களை வாரி வழங்குவதே வாழ்வின் பயன் என்று கொண்டான் அம் மகளிரின் தந்தை பாரி; அதனாலேயே உயிரும் துறந்தான்; இதை அம் மகளிர் நன்றாக அறிந்திருந்தனர்; அறிந்திருந்தும், தந்தையை இழந்து தனித்துயர் உற்றுத் தவிக்கும் அந் நிலையிலும், ஔவையாருக்கு ஆடையும், உணவும் அளித்துப் பேணினர்;

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்று அவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடி!
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி." (நன்னெறி: ௧௭)

என்ற செய்யுள், பாரிமகளிரின் பண்பு கருதியே பாடப்பட்டதுபோலும்; அவ் விளமகளிரின் செயல், ஔவையார் உள்ளத்தில் அளவிலா மகிழ்ச்சியை உண்டாக்கிற்று; உடனே,

"வெய்தாய் நறுவியதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த—பொய்யா
'அடகு' என்று சொல்லி, அமுதத்தை யிட்டார்
கடகம் செறியாதோ கைக்கு."

"பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரி அன்று ஈந்த களைக்கொட்டும்—சேரமான்

'வாராய்' என அழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்."

என்ற பாடல்களைப் பாடி அம் மகளிரைப் பாராட்டினார்.

பாடல்பாடிப் பாராட்டியதோடு தம் கடன் தீர்ந்தது எனக் கருதவில்லை அவர். அவர்களின் நிலையறிந்து இரங்கி அவர்கள் திருமணத்தை முன் நின்று முடித்தலைத் தம் கடனாகக் கொண்டார்.

பாரி மகளிரை மணந்து கொள்ளத்தக்க பீடும் பெருமையும், அறிவும், ஆற்றலும், ஆண்மையும், அழகும், ஒழுக்கமும், உயர்வும் உடையவன் யாவன் என எண்ணிப் பார்த்தார் ஔவையார்; இவ்வளவும் உடையவன் ஒருவன் உளன்; அவன் தென் பெண்ணையாறு பாயும் திருமுனைப் பாடி நாட்டுத் திருக்கோவலூர் அரசன் தெய்வீகன் என்பவன்; அவ்விரு மகளிரையும் அவன்பால் அழைத்துச் சென்று மணம் செய்துகொள்ளுமாறு வேண்டினார்; புலவர் வேண்டுவனவற்றைக் குறிப்பால் அறிந்து, அவர் அகமும் முகமும் மலர அள்ளி அள்ளிக் கொடுக்கும் அருள் உள்ளம் உடையவனே அவனும்; என்றாலும், ஔவையாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்தான்; ஔவையார்க்குச் செய்வதொன்றும் புலப்படவில்லை. "பேரழகும், சீரிளமையும் வாய்ந்தவர் பாரி மகளிர்; குலத்தால் குணத்தால் குறையுடையவரல்லர்; அறிவிலும், அன்பிலும் அனைவரினும் சிறந்தவர்; இவ்வளவும் இருந்தும், மன்னர்கள், இவர்களை மணக்க மறுப்பானேன்? மகளிர் முகத்தையும் காண மறுக்குமளவு, மன்னர்கள் துறவுள்ளம் கொண்டுவிட்டனரோ என்றால் இல்லையே! அரசனொருவன் பால் அழகுள்ள மகள் ஒருத்தி இருக்கிறாள் என்றறிந்தால் போதும்; அவள் இசையினும் இசையாவிடினும் அவளை மணந்து கொள்ளத் துடிப்பர்; உற்றோரும், பெற்றோரும் மறுத்தால், பெரும்படைகொண்டு, அவள் நாட்டையும், கோட்டையையும் அழித்து அவளை வலிதிற் பற்றிக் கொள்வர்; அவ்வளவு வெறி பிடித்தவர்கள்தானே அரசர்

கள்! அவ்வாருகவும், அழகிற்சிறந்த ஆரணங்குகள், அவர் அரண்மனைவாயில் வந்து காத்துக்கிடப்பினும் அவர் களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனரே! என்ன காரணம்?" என்று எண்ணி எண்ணிப் பார்த்தார். ஒன்றும் விளங்க வில்லை. "அரசே! இம் மகளிரை மணக்க மறுப்பது ஏன்?" என்று அரசனையே கேட்டார்.

"அறிவுசான்ற அம்மையே! இவ் விளமங்கையர் இருவரையும் மணந்துகொள்ள மறுக்கும் எண்ணம் எவ ருக்கும் எளிதில் உண்டாகாது; என்ருலும், இவர்களோ பாரியின் மக்கள்; பாரியோ, பேரரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் பகைவன்; அதனுலேயே அவனை அழித்தும் ஒழித்தனர்; இப்போது, நான் இவ்விரு மகளிர் களை மணந்துகொள்வதென்ருல், அம் மூவேந்தர் பகையை இரு கையேந்தி வரவேற்றவனுவேன்; இன்பம் எனக் கருதித் துன்பத்தை மேற்கொள்ளேன்; இன்று இவர்கள் இன்முகம் கண்டு இரங்கி இச்சை கொண்டால், மூவேந்தர் படை நாளை என் நாட்டின்மீது போர்தொடுக்குமே; அதைத் தடுப்பார் யார்? ஆகவேதான் அவர்களை மணக்க மறுக்கிறேன்." என்று தன்மனத்திடை ஒருங்கே மண்டிக் கிடக்கும் ஆசையையும் அச்சத்தையும் வெளியிட்டான்.

பாரி மகளிரை மணக்கப் பார் மன்னர்கள் மறுக்கும் காரணத்தின் உண்மையை உணர்ந்தார் ஔவையார்; இதற்கு என்ன செய்வது என எண்ணினுர்; அவருக்கு ஒரு வழி தோன்றிற்று; வேந்தர் மூவரும் தம்மிடத்தில் பேரன்புடையவர்; தாம் விரும்பும் எதையும் செய்யும் இதயமுடையவர்; அவர்களிடத்தில் பாரிமகளிர் துயர் நிலை கூறி, அவரை மணக்க விரும்பும் மன்னன்பால் பகை கொள்ளுதல் கூடாது என்று வேண்டினுல் அவர்கள் மறுக்கமாட்டார்கள்; மனம் ஒப்புவர். ஆதலின், அவர்கள் ஒப்புதலைப் பெற்றுத்தர உறுதிமொழியளித்து அரசனை இசைய வைத்தல் வேண்டும் என எண்ணினுர்; அரசனும் அதற்கு உடன்பட்டான். உடனே ஔவையார், தெய்வீ கன் பாரி மகளிரை மணந்துகொள்ள இசைந்ததை அறி

வித்து, அம் மண விழாவிற்கு வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு மூவேந்தர்க்கும் அழைப்பு அனுப்பினார்.

"சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊராளவும் தான்வருக உட்காதே ;—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனமிசைந்தார்
சங்கவையையும் கூடத் தான்."

இது சேரனுக்கு அனுப்பிய அழைப்பிதழ்.

"புகார் மன்னன் பொன்னிப் புனல்நாடன் சோழன்
தகாதென்று தான்அங் கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டாம் நாள்."

இது சோழ வேந்தனுக்கு அனுப்பிய அழைப்பிதழ்.

"வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடிய ஈரொன்பான்நாள்
ஈண்டு வருக இசைந்து."

இது பாண்டிய மன்னனுக்கு அனுப்பிய மண ஓலை.

இவ்வாறு அரசர்க்கு அழைப்பு அனுப்பிய ஒளவையார், பின்னர்த் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். திருமணச் செலவு வகைகளுக்குப் பொன்னும் பொருளும் ஏராளமாகத் தேவை என்பதை உணர்ந்தார்; அவற்றைப் பிற அரசர்பால் இரந்து பெறுவதினும் தம் ஆற்றலால் தாமே தேடித்தருவதே சிறப்பு என்று கருதினார்; வருணனை நோக்கி,

"கருணையால் இந்தக் கடல் உலகம் காக்கும்
வருணனே! மாமலையின் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி."

என்ற பாடலைப் பாடினார்; உடனே, அவ் வூரார்க்கும், அம் மணவினைக்கும் வேண்டுமளவு பொன்மழை பெய்து மக்கள் மனதில், மகிழ்ச்சியை விளைவித்தது. பொன்னும் பொருளும் கிடைத்துவிட்டன; மணவிழாக் காண வருவோர் அழகிய ஆடையும், இனிய உணவும் விரும்புவர்; அவற்றைப் பெற்று அளித்தலும் தம் கடனே என்று எண்ணினார்.

"பொன்மாரி பெய்யும் ஊர்; பூம்பருத்தி ஆடையாம்;
அந்நாள் வயலரிசி ஆகும் ஊர்;—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாட்டினில்
ஓங்கும் திருக்கோவ லூர்."

"முத்தெறியும் பெண்ணை! முதுநீ ரதுதவிர்ந்து
தத்தியநெய், பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக் கோவலூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா."

என்ற இரு பாடல்களைப் பாடினார்; உடனே, அந் நாட்டுப் பருத்திச் செடிகள் எல்லாம் ஆடைகளாகவே காய்த்தன; நன்செய் வயல்களில் வளர்ந்திருக்கும் செந்நெற் பயிரெல்லாம் அரிசியாகவே விளைந்துவிட்டன; திருக்கோவலூரை அடுத்துப் பாயும் பெண்ணையாறு நீரோடுவது நீங்கி, ஒரு பக்கம் நெய்யாகவும், ஒருபக்கம் பாலாகவும் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிற்று.

இவ்வாறு திருமணத்திற்கான எல்லாம் இனிது நிறைவேறின; திருமண நாளும் வந்தது; முடியுடை மன்னரும், குறுநில மன்னருமாக எல்லா அரசர்களும் வந்து சேர்ந்தனர். மணவிழாத் தொடங்கவேண்டிய நேரம்; தெய்வீகனுக்கு அளித்த வாக்கை நிறைவேற்ற எண்ணினார்; "அங்கவை, சங்கவை ஆகிய அவ்விரு மகளிரைத் தெய்வீகன் மணஞ்செய்து கொள்வதைத் தடுக்கவில்லை; அதுகுறித்து அவனோடு பகை கொள்ளோம்; இம் மணம் நிகழ்வது எங்களுக்கும் விருப்பமே" என்று அறிவிக்குமாறு ஔவையார் மூவேந்தரையும் வேண்டினார். அரசர்

கள் ஔவையாரை நோக்கி, "அம்மையே, இம் மணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயின், இத்திரு மணப் பந்தரிலே ஏதேனும் ஓர் அற்புதம் நிகழ்தல் வேண்டும்; நிகழ்ந்தால், இத் திருமணத்திற்கு எங்கள் இசைவினைத் தருவோம்; மணமக்களையும் வாழ்த்திப் போற்றுவோம்,'' என்று கூறினார்கள்.

உடனே ஔவையார், திருமணப் பந்தலுக்குக் காலாக நிற்கும் பனந்துண்டு ஒன்றை நோக்கி,

"திங்கட்குடையுடைச் சேரனும், சோழனும், பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்து நின்றார் மணப்பந்தரிலே;
சங்கொக்க வெண்குருத்தீன்று, பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

என்ற பாடலைப் பாடினார். உடனே, வெட்டுண்டு உலர்ந்து போன அப் பனந்துண்டு உயிர்பெற்றது; வெண்குருத்து வெளிவந்து பச்சோலையாக மாறிச் சலசல என ஒலித்தது; ஒருபால் பனங்குலையொன்று தோன்றி, நுங்கு முற்றிக் காயாகிக், காய் கனியாகிக் காட்சியளித்தது. ஔவை யாரின் இவ்வரும் பெரும் செயல் கண்டு அச்சமும், வியப் பும் கொண்டனர் அரசர்கள் மூவரும். மணவினைக்கு மேலும் தடையாக இருத்தல் தகாதெனக் கொண்டனர்; மணவிழாவை முன்நின்று முடித்து, மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர். இவ்வாறு பாரிமகளிர்க்கு மணம் செய்து கண்டு களித்தார் ஔவையார்.

பாரிமகளிர் திருமணத்தைப்பற்றி மேலும் பல கதை கள் நாட்டில் வழங்குகின்றன. பாரிமகளிரைப் பார்ப் பார்க்கு மணஞ்செய்து கொடுத்தார் கபிலர் என்ற ஒரு கதையும் உண்டு; அங்கவை, சங்கவை என்ற இருவரும் பாரிசாலன் என்ற சிங்கள நாட்டு மன்னனின் மகளிராவர்; ஔவையார் அவர்களைத் தெய்வீகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்; இவ்வாறு ஒரு கதை கூறும்; பாரி மகளிருள் ஒருத்தியை மலையனுக்கு மணம்செய்து கொடுத்

தார் கபிலர்; மற்றொருத்தியைத் தெய்வீகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார் ஔவையார்; இவ்வாறு கூறுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

பாரிமகளிர் திருமணத்திற்குத் துணைபுரிந்தவர் கபிலரா? ஔவையாரா? இவர்கள் ஒவ்வொருவரும், அம் மகளிர் இருவர் திருமணத்திற்கும் துணைபுரிந்தார்களா? அல்லது, கபிலர், ஒருத்தி திருமணத்திற்கும், ஔவையார் மற்றொருத்தி திருமணத்திற்குமாகத் தனித்தனியே துணைபுரிந்தார்களா? அம் மகளிர் இருவரும் ஒருவரையே மணந்துகொண்டனரா? அல்லது வேறுவேறு அரசர்களை மணந்துகொண்டார்களா? இவை போன்ற ஐயங்களுக்குத் தெளிவான உண்மை காணமுடியவில்லை.

பாரிமகளிர்க்குத் திருமணம் செய்யக் கபிலர் முயன்றார் என்று தெளிவாகக் கூறுகிறது புறநானூறு; அதைப் போலவே, அம் மகளிரை மலையமான் வழிவந்த ஒருவனுக்கு மணம்செய்து கொடுத்தார் கபிலர் என்று தெளிவாகக் கூறுகிறது திருக்கோவலூரில் உள்ள பழைய கல்வெட்டு. பாரிமகளிர் திருமணத்தோடு கபிலரைத் தொடர்புபடுத்தும் இவ்விரு ஆதாரங்களைப் போல், அவர்கள் திருமணத்தோடு ஔவையாரைத் தொடர்புபடுத்த நல்ல ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆகவே, விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகிய இருவரிடத்தும் அம் மகளிரை அழைத்துச் சென்று பயனின்றி மீண்ட கபிலர், அம் மகளிரைப் பார்ப்பார்பால் அடைக்கலமாக விட்டுச் சென்று, மலையமானைக் கண்டு உடன்படுத்திப் பின்னர் அம் மகளிரைக் கொண்டுசென்று அவனுக்கு மணம்செய்து கொடுத்தார் என்று கொள்வதே பொருந்தும்; அம் மகளிரின் இம் மண முயற்சியில் கபிலர்க்குத் துணையாய் ஔவையாரும் இருந்தார் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

---

## கக. பூங்கணுத்திரையார்

இவர் இயற்பெயர் உத்திரையார் என்றிருக்க, அத்துடன் அவர் பெற்றிருந்த அழகிய கண்களைக் கண்டு பிறர் அளித்த பூங்கண் என்ற சிறப்புப் பெயரும் சேர, **பூங்கணுத்திரையார்** என்பது இவர் பெயராயிற்று என்று கூறுவர். பூங்கண் என்ற பெயருடைய ஊர் ஒன்று காவிரியின் வடகரைக்கண் உளது எனக் கல்வெட்டுக்களால் (M. E. R. No. 153 of 1932) தெரிவதால், இவரை அவ்வூரினராகக் கொள்வாரும் உளர். பூங்கணுத்திரையார் பாடிய பாடல்களுள் புறத்தில் ஒன்றும் குறுந்தொகையில் இரண்டும் இடம் பெற்றுள்ளன. குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில் அவர் மேற்கொண்ட உவமை படித்தவர்களுக்கு நகைப் பூட்டும் இயல்பிற்று.

தலைமகள் ஒருத்தி தலைமகன் ஒருவனோடு நட்புக் கொண்டு வாழ்ந்து வருகிறாள்; இடையில் அவளை மணஞ் செய்துகொள்வதற்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொண்டுவர அவன் வெளிநாடு சென்றிருந்தான்; இவர்கள் உறவும் முடிவும் பெற்றோர் அறியார்; தலைமகள் தோழி ஒருத்திமட்டுமே அறிவாள். இந்நிலையில், ஒருநாள் முதியோர் சிலர், தலைமகள்வீட்டிற்கு வந்திருந்தனர்; அவர்கள் யார்? ஏன் வந்தார்கள் என்பதை அறிந்துகொண்டாள் தோழி; அவர்கள், தலைமகளைத் தங்கள் மகன் ஒருவனுக்கு மணம் பேச வந்திருந்தனர்; தலைமகள், தலைமகனோடு கொண்டிருக்கும் உறவை அறியாத அவள் பெற்றோர், அப் புதியோர்க்கு இசைந்து விடுவரோ என அஞ்சினாள்; ஓடோடியும் சென்று செய்தியைத் தலைமகளுக்கு அறிவித்தாள். அவள் கூறியதையும் கூறிவிட்டு நடுங்கும் அவள் நிலையையுங் கண்டு, தலைவி நகைத்துக் கூறுகிறாள்: "தோழி! மழை பெய்த புதுநீர் குளத்தில் புகுந்து நிறைவதைக் காணக் காலையில் குளக்கரைக்குச் சென்றோமே அங்கே கண்டதை நீ மறந்தாயா? வலைஞன் ஒருவன் வலை வீசினானே, எதைக் கருதி வீசினான்? மீனைப் பிடிக்கவேண்டும் என்றன்றோ வீசினான்? ஆனால், அவன் வலையில் மீன்

அகப்பட்டதா? இல்லையே? நீர்நாய் அன்றோ அகப்பட்டது? மணம் பேச வந்தவர் செயலோடு அதை ஒப்பிட்டுப் பார்; இவர்கள் என்னை மணம் பேசவே வந்திருக்கின்றனர் என்பது உண்மை; ஆனால், இவர்கள் என்னைப் பெறப் போவது இல்லை; இவர்களுக்குக் கிடைக்கப்போகிறவள் நான் அல்ல; வேறு எவளோ; ஆகவே, மணம் பேசவந்து விட்டனரே என்று கவலற்க; மணம்பேச வந்தவுடனே அவர்கள் எண்ணம் ஈடேறிவிடும் என்று எண்ணாதே; அவ்வாறு ஒன்றும் நடவாது; அஞ்சற்க," என்று கூறினாள்.

> "காணினி வாழி! தோழி! யாணர்க்
> கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
> மீன்வலை மாப்பட்டாங்கு
> இது; மற்று எவனோ நொதுமலர் தலையே."

காக்கைபாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர்மாசாத்தியார் போன்ற புலவர்களைப்போலவே, இவரும் தமிழ்நாட்டு வீரத்தாய்மார்களின் இயல்பை விரித்துரைத்துள்ளார்.

ஒரு கிழவி; அவள் தலைமயிர் முற்றும் கொக்கின் இறகேபோல் வெளுத்து நரைத்துவிட்டது; அவளுக்கு ஒரே மகன்; அவனோ மிகவும் சிறியன். எனினும் நாடு காவற் போரில் தன்குடியும் பங்குகொள்ளுதல் வேண்டும் என்ற கருத்தினள் ஆதலின், இளையன் என்றும் பாராது போருக்கு அனுப்பினாள்; அவனும் தன் குடிப்பண்பிற்கு ஏற்பக் களத்தே களிறு பலவற்றைக் கொன்றான்; ஆனால், இளையனாகிய அவனால் தொடர்ந்து போரிட முடியவில்லை; பகைவர் படைக்கலம்பட்டு வீழ்ந்து மாண்டான்; காலையில் களம் நோக்கிச் சென்றோன், மாலையில் வெற்றியோடு வீடு திரும்புவான் என்று எதிர்நோக்கியிருந்தாள் கிழவி. ஆனால், அவன் வரவில்லை; வீரர் பலர் அவள் வீட்டிற்கு வந்தனர்; "நின் மகன் மிகவும் இளைஞன்தான்; ஆனாலும் அவன் ஆற்றிய போருண்டே! ஆ ஆ! அருமை! அருமை!!

பகைவர் படையில் எத்தனை களிறுகள் அவனால் கெடுண்டன? இருந்தும் இறுதியில் இறந்துவிட்டானே!" என்று கூறி அழுதனர். வீரர்பலர், தன்வீடு நோக்கிவந்து, தன் மகன் ஆற்றிய அரும்போர் குறித்துப் புகழ்வது கேட்டாள்; பொங்கிற்று அவள் மகிழ்ச்சி; பூரித்தது அவள் உள்ளம். "பிள்ளை பெற்ற பேற்றினை இன்றே அடைந்தேன்; இவனைப் பெற்றபோது நாடுகாவலுக்கு நமக்கும் ஒரு மகன் பிறந்துவிட்டானே என்று மகிழ்ந்தேன்; இன்று, அவன் தன் கடனாற்றி என் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டான்; வாழ்வின் பயனை இன்றே அடைந்தேன்; அவனே என் மகன்," என்று மகிழ்ச்சிக் கண்ணீர்சொரிய ஆடிப்பாடி மகிழ்வாளாயினள். "இறந்துவிட்டானே இளைஞன்" என்று வீரர் கண்ணீர்விட்டுக் கலங்குகின்றனர்.

> "புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
> இரந்துகோள் தக்க துடைத்து." (திருக்குறள்: எஅ0)

என்பதற்கேற்ப, பிறர் புகழும் பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டான் தன்மகன் என்பதுகண்டு, அவனைப் பெற்ற அன்று தான்கொண்ட மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி கொள்கிறாள் கிழவி.

தமிழகத்தில், அன்று தாம்கண்ட இவ்வருங்காட்சியை என்றும் அழியா ஓவியமாய்த் தீட்டிக் காட்டுகிறார் பூங்கணுத்திரையார்.

> "மீன்உண் கொக்கின் தூவி அன்ன
> வால்நரைக் கூந்தல் முதியோள், 'சிறுவன்
> களிறு எறிந்து பட்டனன்' என்னும் உவகை,
> ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்
> நோன்கழை துயல்வரும் வெதிரத்து
> வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே." (புறம்: உஎஎ)

# கஎ. பெருங்கோப்பெண்டு

பாண்டிய மன்னர்களில் பூதப்பாண்டியன் என்பவன் ஒருவன் இருந்தான்; பாண்டியர்க்குரிய ஒல்லையூர் எவ்வாறோ பகைவர் கைப்பட்டிருந்தது; இவன் அப் பகைவரை வென்று அவ்வூரை மீட்டமையால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என அழைக்கப்பெற்றான். பூதப்பாண்டியன் சிறந்த புலவன்; அவன் பாடிய பாடல்கள் பல எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. சிறந்த வீரனும் பெரும் புலவனுமான இவன் மனைவியே பெருங்கோப்பெண்டு; ஆகவே இவர் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு என அழைக்கப்பெற்றார். இருவரும் பெரும் புலவர்; ஒருவரை யொருவர் அன்புடன் நேசித்து வாழ்ந்துவந்தனர்; பூதப்பாண்டியனுக்குப் பகைவர் சேரனும், சோழனும். அவர்கள் இவனோடு போரிடவந்தனர்; அவரோடு போரிடச் செல்லும் பூதப்பாண்டியன், "என்னோடு போரிட இருபெரும் அரசர்கள் வந்துள்ளனர்; அவர்களைப் போரின்கண் புறமுதுகுகாட்டி ஓடச்செய்யேனாயின், அழகிய பெரிய மையுண்ட கண்களையுடைய சிறந்த என் மனைவியைப் பிரிந்து துன்புற்று வாழ்வேனாகுக," என்று கூறிய வஞ்சினம்,

> "அவர்ப்புறம் காணே னாயின் சிறந்த
> பேரமர் உண்கண் இவளினும் பிரிக."

என்பது. இது தன் மனைவிபால் அவன் கொண்டுள்ள அன்பின் மிகுதியைப் புலப்படுத்தும். பூதப்பாண்டியன் தன் மனைவியைப் பிரிந்தறியான்; அவள் அழகும் அறிவும் கண்டு கண்டு மகிழ்வான் என்பது இதனாற் புலப்படும்.

இவ்வாறு அன்புகொண்டு வாழ்ந்து வருகையில், அவர்களிடையே எதிர்பாராப் பிரிவு ஒன்று வந்து சேர்ந்தது. போரில் பூதப்பாண்டியன் இறந்துவிட்டான்; தன் கணவன் இறந்துவிட்டான் என்ற செய்திகேட்டார் பெருங்கோப்பெண்டு; அவரை இன்றி எவ்வாறு வாழ்வேன்

என்று ஏக்கமுற்ருர்; கணவனைப் பிரிந்து தனித்து வாழ்வது தன்னுல் இயலாது என்பதை உணர்ந்தார்; உடனே சுடுகாட்டில், கரிய கட்டைகளைக் கொண்டு பிணப் படுக்கை யொன்று அமைக்க ஏற்பாடு செய்தார். குளித்து நீர் ஒழுகும் மயிர் இருபக்கமும் தொங்கச் சுடுகாடுநோக்கி நடக்கத் தொடங்கினர். அவரை அந்நிலையிற் கண்டார் மதுரைப் பேராலவாயர் என்ற பெரும் புலவர். "முழவோசை எப்போதும் முழங்கிக்கொண்டிருக்கிறதே; காவலர் கண் இமையாது காத்திருக்கின்றனரே என்று கருதி அவள் கணவன் முன்னர் ஒருசமயம் அவளைச் சிறிது பொழுதுவிட்டுப் பிரிந்திருந்தான்; அதற்கே அஞ்சினள் இவள்; அவ்வளவு மென்மையும் இளமையும் உடைய இவளா இப்போது சுடுகாடு நோக்கிச் செல்கிருள்!"

"நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம; தானே; தன் கொழுநன்
முழவு கண் துயிலாக் கடியுடை வியன்நகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்கும் தன் இளமை புறங்கொடுத்தே."
(புறம்: உசஎ)

என்று எண்ணினர்; இருகண் நீர்சோர அழுதார்; அழுது என்ன பயன்? பெருங்கோப்பெண்டு சுடுகாட்டை அடைந்து அவ் வீமத்திற்குத் தீவைத்தார். அவரோடு அதுவரையிலும் தொடர்ந்துவந்த சான்ருேர் பலரும், அவர் செய்கை யறியாது திகைத்து நின்றனர். இறுதியாக, அவர்கள்பால் விடைபெற்றுத் தீயில் குதிக்கத் துணிந்தார்; அந்நிலையில் புலவர் அனைவரும் அவரைத் தடுத்து நிறுத்தினர்; கணவன் இறந்தமையால் அரசிழந்து அல்லல் உறும் அந் நாட்டை அவருக்கு நினைவூட்டினர்; உடனுயிர் மாயாது உயிர் வாழ்தலும் உத்தம மாதர்க்கு உரியதே என உணர்த்தினர்.

உடனே பெருங்கோப்பெண்டிர்க்கு வந்தது கோபம். "'கணவன் இறந்தால் அவனோடு உயிர் விடுவதே கற்புடை

மகளிர் கடமை என்று அறிவுரை கூறுவதே சான்றோர் கடன்; நீங்கள் அக் கடமையில் தவறினீர்; அறிவுரை யொன்றுங் கூறாது விட்டதே உங்கள் சான்றாண்மைக்கு இழுக்கு; அவ்வாறாகவும், நீங்கள் கூறாது போயினும், என் அன்பும் கடமையும் கொண்டு தீப்பாய நானே துணிந் தேன் என்றால், என் செயல் கண்டு எனக்குத் துணை செய் யாது, என்னைத் தடுத்து நிறுத்துகிறீர்களே! நீங்கள் உண் மையில் சான்றோரல்லர்; ஏனைப் பெண்களைப்போல் என் னையும் எண்ணி விட்டீர்களா? வெள்ளரிக்காய் விதை போல் நெய்கலவாமல் நீரில் மிதந்துகிடக்கும் பழஞ் சோற்றை, வெந்த வேளைக்கீரையோடும், எள் துவையலோ டும் கலந்து உண்டு, பரற்கற்கள் உறுத்தும் பாழுந்தரை யில் பாயில்லாமல் படுத்துறங்கித் துன்புற்றுக் கைம்பெண் ணாய் வாழும் வாழ்வை நான் பொறேன். ஈமத் தீ என்னைச் சுடுமே என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்; இத்தீ எனக்குத் துன்பம் தரும் என்று கவலற்க," என்று கூறித் தீப் பாய்ந்து இறந்தார்.

"பல்சான் றீரே! பல்சான் றீரே!!
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!!!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக; தில்ல; எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தெனை, அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே." (புறம்: உசசு)

# கஅ. பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார்

இவர், பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார் என அழைக்கப் பெறுவர். சோழநாட்டுத் தலைநகர்களுள் ஒன்றாகிய உறையூர்க்குக் கோழி என்பது ஒரு பெயர். நாய்கன் என்பது கடல் வாணிகம் மேற்கொள்ளும் இனத்தார் வைத்துக்கொள்ளும் பட்டப் பெயர்; கண்ணகியின் தந்தைக்கும் மாநாய்கன் என்பதே பெயராதல் காண்க. ஆகவே, நக்கண்ணையார், உறையூர்ப் பெருவணிகன் ஒருவன் மகளாதல் பெற்றாம். கண்ணன் என ஆடவர்க்குப் பெயரிடுவர்; அவ்வாறே, கண்ணை எனப் பெண்டிர்க்கும் பெயரிடுவர்; அப்பெயரோடு 'ந' என்ற சிறப்பும் சேர, நக்கண்ணையார் என ஆயிற்று.

போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழ அரசன் ஒருவன் உறையூரிலிருந்து ஊராண்டிருந்தான். அவன், ஆண்மையும் அழகும் நிறைந்த இளைஞன்; மற்போரில் வல்லவன். இக் கிள்ளியின் ஆண்மையும் அழகும் ஆற்றலும் கண்டு அவன்பால் காதல்கொண்டார் நக்கண்ணையார். ஆனால், அவர் காதல் ஒருதலைக் காதலாயிற்று; கிள்ளிபால் இவர் காதல் கொண்டார்; ஆனால், அவனுக்கு இவர்பால் காதல் உண்டாகவில்லை. இதனால் நக்கண்ணையார் அவனையடைந்து மணந்து மகிழ்ந்து வாழ முடியவில்லை; அவனை அடையமாட்டாமையால் கவலை மிகுந்து, உடல் மெலிந்து கைவளையும் கழலத் தொடங்கிற்று.

வளை கழலுவது கண்டு, தன் தகாக் காதலறிந்து தாய் கடிந்துகொள்வாளோ என்ற கவலை ஒருபால்; வளை கழலாமை வேண்டின், தானே சென்று அவன் உறவைப் பெறுதல் வேண்டும். ஆனால், காதலர் இருவர்க்கும் மணம் முடித்து வைப்பது, அவ்வூர் அவையில்வாழ் சான்றோர் கடன்; அவர் அதுகுறித்து ஒன்றும் செய்யாதிருப்ப, அவர் அறியாது அவன் உறவைப் பெறுதல் அறன் அன்று என்ற அச்சம் மற்றொருபால்; இவ்வாறு இருவகையாலும் கவலை. தாய் இல்லாதிருந்தால், கவலைகொண்டு வளை

கழலுவது கண்டு தன்னைக் கண்டிப்பார் ஒருவரும் இரார் ; ஆகவே, ஒன்று தாயாவது இல்லாதிருக்க வேண்டும் ; அல்லது ஊர் அவை இல்லாதிருப்பின், நாமே சென்று அவனுறவைப் பெறுதலும் கூடும் ; ஆகவே, அவ்வவை யாவது இல்லாதிருக்க வேண்டும் ; ஆனால் 'இருவரும் உளரே என் செய்வேன்' என்று வருந்துகிறார்.

"அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்குஎன்
தொடிகழித் திடுதல்யான் யாய்அஞ் சுவலே ;
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே ;
என்போற் பெருவிதுப் புறுக என்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்ட இம் மைய லூரே." (புறம் : அங)

இந்நிலையில் தித்தன் என்பானொரு பெருவீரன் பெரும்படையோடும் போந்து உறையூரை வளைத்துப் போரிட்டுப் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியை வென்று அவனைத் துரத்திவிட்டு அவ்வூரில் தானிருந்து அரசாள்வா னாயினன். கிள்ளி, உறையூரைவிட்டு முக்காவல் நாட்டைச் சேர்ந்த ஆமூர் சென்று வாழத் தொடங்கினன். கிள்ளிபால் காதல் கொண்ட நக்கண்ணையாரும் அவன் அண்மையில் வாழ்ந்தால் தம் காதல் கைகூடினும் கூடும் ; அவனுக்குத் தம்பால் காதல் உண்டாதலும் கூடும் என்று எண்ணினர் ; ஆகவே, அவரும் உறையூரைவிட்டு ஆமூர் சென்று அவன் வாழும் இடத்திற்கு அணித்தே உள்ள ஓர் இடத்தில் வாழத் தொடங்கினர் ; ஆனால், இவ்வாறு அருகில் வந்து வாழ்ந்தும் அவன் அன்பைப் பெற முடிய வில்லை ; தாம் காதல் கொள்ளத் தம் காதலை ஏற்றுக் கொள்ளாதிருக்கின்றானே என்று அவன்பால் கோபம் கொண்டாரல்லர் நக்கண்ணையார். அவன் இவர் காதலை அறியாதவனாய் இருக்க இருக்க, அவன்பால் இவர் கொள்ளும் அன்பு வளர்ந்துகொண்டே யிருந்தது ; அவன் ஆண்மையும் பிறவும் இன்பத்தை மேலும் மேலும் வளர்த் துக்கொண்டே யிருந்தன. தன்னாடுவிட்டு வந்து வறுமை வாழ்வு மேற்கொண்டமையால் புல்லரிசி உணவு உண் கிறானே, அவன் உடல் தளர்ந்துவிடுமோ? என்று அஞ்சி

ஞர் ; ஆனால், அவன் தோள் தளராது முன்னினும் பருத்து இருப்பது கண்டு மகிழ்ந்தார் ; அவன் தோள் தமக்கு உரிமையாகி இன்பம் அளிக்காது வருத்துகிறது என்பதை யுணர்ந்தும் எதிர்த்த பகைவர் எவரையும் எளிதில் வெல்லும் அதன் ஆற்றல் கண்டு அகமகிழ்ந்தார்.

மல்லர்க்கும், மற்போருக்கும் சிறந்தது அவ்வாமூர் ; மல்லருள் சிறந்தான் ஒருவன் அவ்வூரில் இருந்தான் ; அவன் சிறப்பறிந்த அவ்வூரார் அவனை ஆமூர் மல்லன் என்றே அழைத்தனர். தான் வாழும் ஊரில் தன்னினும் வலியான் ஒருவன் வாழ்வதா என்ற எண்ணத்தால் ஆமூர் மல்லற்கும் கிள்ளிக்கும் பகை உண்டாயிற்று. பகை வளர்ந்து ஒரு நாள் இருவரும் மற்போர் நிகழ்த்தத் தொடங்கிவிட்டனர் ; ஊர்மக்கள் எல்லாம் போரைக் காண ஒன்று திரண்டுவிட்டனர். கிள்ளி அந்நாட்டையோ, அவ்வூரையோ சேர்ந்தவனல்லன் ; ஆகவே, அவனியல்பறிய மாட்டாத அவ்வூர்மக்கள் போரின் முடிவு குறித்து பல்வேறு கருத்துக்களை வெளியிடலாயினர். "கிள்ளிக்கே வெற்றி" எனப் பேசிச் சென்றனர் சிலர் ; "கிள்ளிக்கு வெற்றி இல்லை" எனப் பேசிச் சென்றனர் வேறு சிலர் ; இவ்வாறு ஊர் மக்கள் பேசிக்கொள்வது நக்கண்ணையார் காதில் விழுந்தது ; காற்சிலம்பு ஒலிக்க ஓடினர் ; மற்போர் நிகழும் இடத்திற்கும், தம் வீட்டிற்கும் அணித்தே உள்ள பனைமரத்தருகே நின்று மற்போரைக் கண் இமையாது கண்டு நின்றார். கடைசியில் வெற்றி தம் காதலன் கிள்ளிக்கே கிட்டியது கண்டு மகிழ்ந்து மீண்டார்.

"என்னைக்கு ஊர்இஃது அன்மை யானும்,
என்னைக்கு நாடுஇஃது அன்மை யானும்,
ஆடுஆ டென்ப ஒருசா ரோரே ;
ஆடன்று என்ப ஒருசா ரோரே ;
நல்ல, பல்லோர் இருநன் மொழியே ;
அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்மில்
முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான்கண் டனன்அவன் ஆடுஆ குதலே." (புறம் : அடு)

இவ்வாறு, கிள்ளிபால் கொண்டிருந்த தம் காதல் உள்ளத்தைக் கவிகள் வழியாகவே காட்டியுள்ளார் நக்கண்ணையார்; அவர் காதல் கைவரப்பெற்றதா? அல்லது இறுதிவரை கைக்கிளையாகவே முடிந்ததா? என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை.

"என் காதல் நிறைவேறவில்லை; என் காதலை ஏற்றுக்கொள்ளாத ஒருவன் நல்வாழ்வு வாழ்வதா? அதையும் நான் பார்ப்பதா? கூடாது. என் காதலை மறுத்த அவனை வாழவிடேன்," என்று எண்ணும் இழிகுல மகளிரைப் போல் அல்லாமல், "அவன் எம் காதலன்; எம்மால் அன்பு செய்யப்பெற்றவன்; எம் காதலை அவன் மதியாது போயினும் கவலையில்லை; எமக்கு அவன்பால் காதல் உண்டு; ஆகவே, அவன் நல்வாழ்வு வாழவேண்டும்; அவன் வாழ்வில் தாழ்வு ஏற்படல் கூடாது; அவன் தாழ்ந்தான் என்ற சொல்லையும் ஏற்க மறுக்கும் எம் காதுகள்" என்று எண்ணும் நக்கண்ணையார் உள்ளத் தூய்மையின் உயர்வை உணருங்கள்!

புறத்தில் பாடிய தம் வாழ்வுப் பாடல்களே யல்லாமல், அகத்துறைப் பாடல்கள் மூன்றும் பாடியுள்ளார் நக்கண்ணையார்; அவற்றுள் ஓர் இடத்தே அவர் மேற்கொண்ட உவமையொன்றே அவர் புலமையின் சிறப்பை உணர்த்தும்.

தலைமகள் ஒருத்தி, தலைமகன் ஒருவனோடு களவொழுக்க உறவுகொண்டு வாழ்கிறாள்; ஆனால், அவ் வாழ்விற்கு எத்தனையோ இடையூறுகள் உண்டாகின்றன. தலைவன்பால் கொண்டுள்ள பேரன்பு, அத் தடைகளையெல்லாம் அகற்றச் செய்கிறது; அதனால், பெண்கள்பால் இயல்பாக நிறைந்து காணவேண்டிய பெண்மைக் குணங்கள் எல்லாம் சிறிது சிறிதாக மறைந்துவிட்டன; இறுதியாக அவள்பால் நிற்பது நாண் ஒன்றே; அதுவும் எப்போது அவளைவிட்டு நீங்கிவிடுமோ என்ற நிலை. இம் மாறுபாட்டைக் கண்டாள் அவள் தாய்; அந் நிலை ஏற்படாதிருக்க, மிகவும் விழிப்போடு நின்று தன் மகளைக் காக்கத் தொடங்கிவிட்டாள். இரவிலும் உறக்கத்தை மறந்து

மகள் நலம்பேணத் தொடங்கிவிட்டாள். இதை உணர்ந்து கொண்டாள் தலைவி. இனி, களவொழுக்கம் மேற்கொள்வது இயலாது; மணந்துகொள்வதே வழி என அறிந்தாள். தன் நிலை, தன் காதலின் தன்மை, தன் தாய் நிலை ஆக இவற்றை அழகிய ஓர் உவமையால் விளக்கித் தன் கருத்தைத் தலைமகற்கு உணர்த்துகிறாள் தலைவி.

சிறு கரையுடைய ஒரு பெருங்குளம்; கடமை யறிந்த காவற்காரன் ஒருவன். ஒருநாள் இரவு காற்றோடுகூடிய பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது; குளம் முழுதும் நீர் நிறைந்துவிட்டது; மேலும் மழை பெய்து கொண்டே யிருக்கிறது; காற்றும் நிற்காமல் வீசிக் கொண்டேயுளது; அதனால், குளத்துநீர் அலையெடுத்து மோதிக் கரையை அழிக்கவும் தொடங்கிவிட்டது. அதன் கரையோ அவ்வளவு பெருநீரைத் தாங்கும் ஆற்றல் அற்றது; சிறியது; ஆகவே, அதன் காவற்காரன், கரை எங்கே உடைந்துவிடுமோ? எப்போது உடைந்துவிடுமோ? என்ற கவலையால், இரவுமுழுதும் கண்மூடாது கரையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டே யிருக்கிறான். இந்தக் காட்சியைத் தலைவனுக்குக் காட்டினாள்; காட்டிவிட்டு "கரை அழிந்துவிடுமோ என்று கவலைகொள்ளும் காவற்காரனைப் போல் என் துயர்நிலை கண்டு கவலையால் கண் விழியாது காக்கிறாள் என் தாய்; குளநீர்போல் பெருகியுளது என் காதல்; அக் குளநீரையும், அதன் மோதுதலையும் தாங்க ஆற்றாத அதன் சிறு கரைபோல், காதல் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தமாட்டாது சிறுமைப் படுகிறது, பெண்மைக் குணமெல்லாம் ஒழியத் தனித்து நிற்கும் நாண்" என்றுகூறி மணத்திற்கு உடன்படுத்துகிறாள் தலைவனை.

" ஈங்கைத்
துய்யவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழின்மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே." (அகம்: உ௫உ)

## கஙு. பேய்மகள் இளவெயினி

இவர் குறவர் குடியிற் பிறந்தவர்: இளமையிலேயே பாடல் புனையும் ஆற்றல் வாய்ந்தவர்; இவர் பெயர்க்கு முன்வரும் பேய்மகள் என்ற தொடர் எதனால் வந்தது என்பது புலனாகவில்லை; புறநானூற்றிற்கு அரிய உரை யெழுதி அளித்த பழைய ஆசிரியர், கண்ணுக்குத் தெரியாத பேயே இளவெயினி என்னும் பெயரோடு தோன்றிப் பாடிற்று என்ற கதை தன் காலத்தே வழக்கத்தில் இருந்தது எனக் கூறுவர்; "இவள் பேயாயிருக்கக் கட்புலனாய தோர் வடிவுகொண்டு பாடினாளொருத்தி யெனவும், 'இக் களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றார்கள்; ஈண்டு நின்னோடு எதிர்ந்து பட்டோரில்லாமையான், எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்' எனத் தான் பேய்மக ளானமை தோன்றப் பரிசில் கடாயினாள் எனவும் கூறு வாருமுளர்." ஆனால், அவர் அக் கதையை நம்பாமை நன்கு புலனாகும். பேய்மகள் என்பது தெய்வமேறியாடும் தேவராட்டி அல்லது பூசாரிச்சியைக் குறிக்கும்; தெய்வ முற்றாற்போல் வந்துநின்று குறி கூறுவது இவர்கள் தொழில்; அத்தகைய தேவராட்டிகளுள் இளவெயினி யும் ஒருவர்; ஆகவே, அவர் பேய்மகள் எனப்பட்டார் என்று கூறுவர் சிலர். போர்க்களத்துப் பிணந் தின்னும் பேய்மகளிரை வியந்து விரியப்பாடிய சிறப்பால் இளவெயி னியார்க்குப் பேய்மகள் என்பது சிறப்புப் பெயராயமைந்த தாகல்வேண்டும் என்பர் மற்றும் சிலர்.

பேய்மகளார், பாலைபாடிய பெருங்கடுங்கோ என்ற அரசனைப் பாராட்டியுள்ளார். கடுங்கோ, சேரர் மரபிலே வந்த பேரரசனாதலேயன்றிப் புலவரும் புகழும் பெரும்புலவ னவன்; பாலைத்திணையைச் சிறப்பித்துப்பாடிப் 'பாலைபாடிய' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவன்; கலித்தொகையுள் பாலைக்கலி முற்றும் இவன் பாடியனவே; இவையேயன்றி, ஏனைய நூல்களுள் வரும் பாலைத்திணைப் பாடல்களுள் பெரும்பாலன இவன் பாடியனவே. தலைமகனை நோக்கி,

அவன் ; அவனை அச்சுறுத்தி உண்ணுவிக்குமாறு, அஞ்சி, கையில் சிறுகோல் ஏந்தி அடிப்பான்போல் ஓங்குவான் ; இவ்வாறு அவனால் வளர்க்கப்பட்டவன் இன்று ஓர் அழகிய இளைஞனாயினான் ; அவன் உச்சிக்குடுமியும், முகத்து மீசையும் அழகை மேலும் அவன் மீது அள்ளிச் சொரிந்தன ; இந்நிலையில் நாட்டில் போர் மூண்டுவிட்டது ; முன்னாள் போரில், அவன் முன்னோர் பலரும் மடிந்துவிட்டனர்; அழகும் ஆண்மையும் மிக்க அவ்விளைஞன் மறுநாள் போர்க்களம் புகுந்தான்.

களம்புகுந்த அக்காளை, பகைவர் படைவரிசையுள்ளே பாய்ந்துசென்று களிறு பலவற்றைக்கொன்று கடனாற்றி, இறுதியில் கைப்படை இழந்து, களத்தே வீழ்ந்துகிடக்கும் களிறு ஒன்றின்மீது சாய்ந்துவிட்டான் ; அவன் நிலை குறித்தும், தன் படைநிலை குறித்தும் கவலை கொண்டான் அஞ்சி ; அதேநேரத்தில், களிற்றின்மீது வீழ்ந்துகிடக்கும் அவனும் கவலைகொள்ளலாயினான் ; "கைப்படையெல்லாம் போய்விட்டதே ! இன்னும் படையிருந்தால், பகைவர் களிறுகளில் மேலும் சிலவற்றையேனும் அழித்திருப்பேனே !" என்று எண்ணினான் ; எண்ணியவாறே தன் மார்பைத் தடவிக்கொடுத்தான் ; அங்கே பகைவர் ஏவிய அம்பொன்று தைத்துக்கிடப்பதை அறிந்தான் ; போர் வெறியால் அம்பு தைத்ததை அப்போதுவரை அறியாத அவன், அதைக்கண்டவுடனே பெருமூச்செறிந்தான். "அந்தோ ! போரிடும் வலிமையோடிருந்த அப்போது மார்புப்புண்ணில் அம்பொன்று கிடப்பதை அறியாது போனேனே ; அறிந்திருந்தால், இவ்வம்பால், பகைவர் யானையுள் ஒன்றையாவது வீழ்த்தியிருப்பேனே," என்று கவலையுற்றான் ; இக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் பொன்முடியார்,

"பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்,
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சியொடு
உயவொடு வருந்து மன்னே ; இனியே,
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்

# உ0. பொன்முடியார்

ஔவையார்க்கு நெல்லிக்கனி கொடுத்துப் புகழ் பெற்ற அதியமான் நெடுமானஞ்சியைப் பாராட்டிய புலவர்களுள் பொன்முடியாரும் ஒருவர். அதியமான், தகடூரைத் தலைநகராகக்கொண்ட சிறுநாட்டை ஆண்டுவந்த அரசன்; சிறந்த போர்வீரன்; பெருங்கொடை வள்ளல்; இதனால் அவன் பெற்ற புகழ் அவனுக்குப் பகைவர் பலரைத் தேடித்தந்தது; பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் அதியமானோடு பகைத்து அவன் தகடூரை முற்றுகையிட்டுத் தாக்கி அழித்து, அவனையும் கொன்றான். இத் தகடூர்ப்போர் நிகழும்காலத்தில், அதியமானோடு அத் தகடூரில் தங்கியிருந்து, அவ்வப்போதுள்ள போர்நிலைமையை அதியமானுக்கறிவித்து அறிவுரை கூறித் துணைபுரிந்த புலவர்களுள் பொன்முடியாரும் ஒருவர் ஆவர்; அப்போது பொன்முடியார் பாடிய பாடல்கள் பல "தகடூர் யாத்திரை" என்ற நூலில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, பழங்காலக் கோட்டைகளின் அமைப்பையும், அக் கோட்டை மதிலின்கண் வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான படைப்பொறிகளையும் இன்றும் நாம் அறிந்துகொள்ளும் வகையில், விளங்க உரைக்கும் தன்மையுடையது.

தகடூர் யாத்திரையில் காணப்படும் பாடல்களே அல்லாமல், நூழிலாட்டு, குதிரைமறம் என்ற துறைதழுவி அவர் பாடிய பாடல்கள் இரண்டு புறநானூற்றில் உள்ளன. நூழிலாட்டு என்பது, பகைவர்படைகளைப் பாழ்படுத்திப் பெரும் போரிட்டுவரும் வீரன் ஒருவன், தன் கைப்படையெல்லாம் போயவழி, தன் மார்பில் தைத்திருக்கும் வேலைப்பிடுங்கிப் பகைவர் படைமீது எறிந்து அழித்தான் எனப் பாடுவது; அதியமான் நெடுமானஞ்சியால் அன்போடு வளர்க்கப்பட்டவன் ஒரு வீரன்; சிறு குழந்தையாய் இருக்கும்போது, அஞ்சி அவனுக்குப் பால் உணவு அளிப்பான்; விளையாட்டு நினைப்பால், அதை உண்ண மறுப்பான்

அவன் ; அவனை அச்சுறுத்தி உண்ணுவிக்குமாறு, அஞ்சி, கையில் சிறுகோல் ஏந்தி அடிப்பான்போல் ஓங்குவான் ; இவ்வாறு அவளால் வளர்க்கப்பட்டவன் இன்று ஓர் அழகிய இளைஞனாயினன் ; அவன் உச்சிக்குடுமியும், முகத்து மீசையும் அழகை மேலும் அவன் மீது அள்ளிச் சொரிந்தன ; இந்நிலையில் நாட்டில் போர் மூண்டுவிட்டது ; முன்னாள் போரில், அவன் முன்னோர் பலரும் மடிந்துவிட்டனர் ; அழகும் ஆண்மையும் மிக்க அவ்விளைஞன் மறுநாள் போர்க்களம் புகுந்தான்.

களம்புகுந்த அக்காளை, பகைவர் படைவரிசையுள்ளே பாய்ந்துசென்று களிறு பலவற்றைக்கொன்று கடனாற்றி, இறுதியில் கைப்படை இழந்து, களத்தே வீழ்ந்துகிடக்கும் களிறு ஒன்றின்மீது சாய்ந்துவிட்டான் ; அவன் நிலை குறித்தும், தன் படைநிலை குறித்தும் கவலை கொண்டான் அஞ்சி ; அதேநேரத்தில், களிற்றின்மீது வீழ்ந்துகிடக்கும் அவனும் கவலைகொள்ளலாயினன் ; "கைப்படையெல்லாம் போய்விட்டதே ! இன்னும் படையிருந்தால், பகைவர் களிறுகளில் மேலும் சிலவற்றையேனும் அழித்திருப்பேனே !" என்று எண்ணினன் ; எண்ணியவாறே தன் மார்பைத் தடவிக்கொடுத்தான் ; அங்கே பகைவர் ஏவிய அம்பொன்று தைத்துக்கிடப்பதை அறிந்தான் ; போர் வெறியால் அம்பு தைத்ததை அப்போதுவரை அறியாத அவன், அதைக்கண்டவுடனே பெருமூச்செறிந்தான். "அந்தோ ! போரிடும் வலிமையோடிருந்த அப்போது மார்புப்புண்ணில் அம்பொன்று கிடப்பதை அறியாது போனேனே ; அறிந்திருந்தால், இவ்வம்பால், பகைவர் யானையுள் ஒன்றையாவது வீழ்த்தியிருப்பேனே," என்று கவலையுற்றான் ; இக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் பொன்முடியார்,

"பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்,
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சியொடு
உயவொடு வருந்து மன்னே ; இனியே,
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்

முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே,
'உன்னிலன்' என்னும் புண்ஒன்று அம்பு."
(புறம்: ௩௧0)

பொன்முடியார் பாடிய பாடல் பலவற்றினும் அவருக்குப் பேரும் புகழும் அளித்தது, "ஈன்று புறம் தருதல்" என்ற புறநானூற்றுப் பாடல் ஒன்றே; அப் பாட்டில் வீடும் நாடும் வாழ வழி கூறியுள்ளார்; வீடும் நாடும் அவற்றில் வாழ்வோரையே குறிக்கும்; வீடு என்ற உடனே, பெற்றோரும் பிள்ளைகளும் ஆகிய இவர்களே நம் கண்முன் தோன்றுவர்; அவ்வாறே நாடு என்றவுடனே, நாட்டில் வாழும் மக்களும் அம் மக்கள் தலைவனும் அரசனும் நம் கண்முன் தோன்றுவர்; ஆகவே, வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர் நல்லவராயின் வீடும் நாடும் விளங்கித் தோன்றும்; வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர் நல்லவராதல், அவர்கள் தங்கள் தங்கள் கடனறிந்து வாழ்தலே ஆகும். ஆகவே, வீட்டையும் நாட்டையும் நன்னிலையில் காண விரும்புவோர், வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர்க்கு அவர் கடன்களை அறிவித்து அதன்வழி நடக்கப் பழக்குதல் வேண்டும்; அதைச் செய்துள்ளார் பொன்முடியார்.

வீடு பல கொண்டதே நாடு ஆதலின், வீட்டைமுதலில் நோக்குகிறார். வீட்டிலும், தாய் தந்தை மக்கள் என்போரில் தாயே முன்னவள்; ஆகவே, தாயின் கடமையை முதற்கண் எடுத்துக்கூறுகிறார். ஒருவர்க்கு அறிவுகூறுவோர், முதலில் அதைத்தான் அறிந்து அதன்வழி நடப்பவராதல் வேண்டும்; ஒருவருக்கு அறிவுரை கூறுவதினும், அவ்வாறு நடந்துகாட்டுவதே நன்முறை; இதை உணர்ந்தவர் பொன்முடியார். உலகத் தாய்மார்களுக்கெல்லாம் அவர் கடமையை உணர்த்த விரும்புகிறார்; அத் தாய்மார்களுள் தானும் ஒருதாய் ஆதலின், "உங்கள் கடமை இது" என்று கூறுவதினும், "என் கடன் இது" என்று கூறினார்; தாயாம் தன் கடன் யாது? "ஈன்று புறந்தருதல்." பொன்முடியார் வாழ்ந்தகாலம், நாட்டில் புறப்பகையும், அகப்

பகையும் மிக்க காலம்; ஆகவே, அப்பகை போக்கி நாட்டைக் காப்பதே நாட்டுமக்களின் தலையாய கடன்; நாடு காவலுக்கு நல்ல வீரர் பலர் தேவை; ஆகவே, நல்ல ஆண் மக்களைப் பெற்றுத்தருவதே நாட்டுத் தாய்மார்களின் தலையாய கடன்; மக்களைப் பெற்றுவிட்டு, அவர்கள் வளர்ப்பிலே கவலைகொள்ளாதுபோயின், அவர்கள் நல்லுடல் பெறலின்றி நலிவர்; மக்கள் நலிந்துபோனால், அவர்களைப் பெற்றும் பயனில்லாதுபோகும்; ஆகவே, மக்களைப்பெற்றதோடு தீர்ந்தது தன் கடன் என்று நின்றுவிடாமல், அம் மக்கள் நல்லுடல்பெற்று வாழுமாறு வளர்த்துவிடுவதும் தாயின் கடமையே; ஆகவே, "ஈன்றுபுறந்தருதல் என் தலைக் கடன்" என்று கூறினார்.

மகன் வளருகிறான்; வளரும் மகனை அப்படியே விட்டுவிட்டால், அவன் நாடுகாவலுக்குப் பயன்படான்; தான், தன்வீடு, தன்நாடு, இவற்றிற்குத் தான் செய்யவேண்டிய தொண்டு, அத் தொண்டினை நிறைவேற்றும் வழிவகைகள் இவற்றை அவன் அறிந்துகொள்ளுதல்வேண்டும். அவற்றை அவன் தானே அறிந்துகொள்வான் என எதிர்பார்த்தல் இயலாது; அறிந்த ஒருவர் அவற்றை அவனுக்கு அறிவிக்க வேண்டும்; தன் மக்கள் நன்னிலைபெறவேண்டும் என்று விரும்புவோர், பெற்றோரினும் வேறு இரார்; பெற்றோர் இருவரில், தாய், வீட்டின் உள்ளிருந்து மக்களை வளர்த்துப் பழகியவளேயன்றி, வெளியேசென்று நாட்டின் தேவையை அறிந்தவள் அல்லள். அவற்றை அறிந்தவன் ஆண்மகனாகிய தந்தையே; ஆகவே, மக்களுக்கு அறிவூட்டுவது அவன் கடமையே; அறிஞர் பலர்கூடிய அவையில் தன் மகன் முதலிடம் பெறுமாறு அவனை அறிவுடையவனாக்குவது தந்தை கடனே.

> " தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்." (திருக்குறள் : சுஎ.)

என்று வள்ளுவரும் கூறினார்; ஆகவே, "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்றார்.

நாட்டு இளைஞர், தம்கடன் அறிந்த காளையர் ஆயினர்; நாடுகாவலை மேற்கொள்ள முன்வருகின்றனர்; ஆனால், களத்தே பயன்படுத்தப் படைக்கலம் பல தேவை; படை வீரர் ஒவ்வொருவருக்கும் தேவையான படைக்கலங்களை அவரவரே செய்துகொள்வாராக என விடுவது அறிவுடைமையாகாது; அது, காலக்கேடும் பொருட்கேடும் பயப்பதாம்; ஆகவே, ஓர் ஊரில் உள்ள வீரர் பலர்க்கும் வேண்டிய படைக்கலங்கள் அவ்வளவையும் செய்துதர, ஊர்தோறும் ஒரு கொல்லனை அமர்த்தியிருந்தனர் அக்கால மக்கள். போருக்குச் செல்லப் படைவீரர் தயார் ஆயினும், அவர்களுக்குத் தேவையான படைக்கலங்களைத் தேவையான காலத்தே படைத்துத் தருவதில் கொல்லன் தவறிவிட்டால், அவ்வீரரால் போர்புரிந்து நாட்டைக் காத்தல் இயலாது; ஆகவே, வேண்டும் புது வேல்களை ஆக்கித் தருவதிலும், இருக்கும் பழைய வேல்களைச் செம்மை செய்து கூராக்கித் தருவதிலும் அவன் தவறக்கூடாது; எனவே, அக் கொல்லனும் தன் கடன் அறிந்தவனாதல் வேண்டும்; ஆகவே, "வேல்வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே" என்றார்.

நாடுகாவலை மேற்கொள்ள வேண்டியவர்கள், ஒழுக்கந் தவறியவராயின் நாட்டிற்கே கேடாம்; ஆகவே, அவர்கள் ஒழுக்கத்திற் சிறந்த நல்லோராக விளங்குதல் வேண்டும். அதைப் பெற்றோர்கள் செய்வது இயலாது; தாயும் தந்தையும் தம் மக்களைத் தீயவழியிற் செல்லாவண்ணம் பாது காத்தல், அம் மக்கள் வீட்டோடு உள்ளவரையிலுமேதான் இயலும். மக்கள் வீட்டில் வாழ்காலத்தினும், வீட்டின் வெளியே வாழும் காலமே மிகுதியாம்; வீட்டிற்கு வெளியே, தாய் தந்தையர் தலைமறைவில் வாழும்போது மக்கள் தகாதன செய்தலும் கூடும்; அதை அப்போது அறிந்து திருத்துவார் யாரும் இராது போனால், அம் மக்கள் ஒழுக்கம் கெடுவர்; ஆகவே, அம் மக்கள் ஒழுக்கத்தில் விழிப்பாய் இருக்கவேண்டுவது வேந்தன் கடமை; நாட்டு இளைஞர் கெட்டவராயின், அப் பழி அந் நாட்டு அரசனையும், ஆட்சிமுறையையுமே சாரும்; அவர்கள் நல்லொழுக்க

மிக்கவராய் வாழ வழிகாட்ட வேண்டியவன் அரசனே ; ஆகவே, "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்றார்.

நாடுகாவல் ஒன்றே அன்றைய நாட்டின் நிலைமைக்குத் தேவை என்பதையும், அதை நன்கு அமைக்க நல்ல இளைஞர்கள் தேவை என்பதையும் அக்கால மக்கள் அறிந்திருந்தனர். ஆகவேதான், தாய், மகனைப் பெற்றுப் பேணி வளர்த்தாள் ; தந்தை அறிவூட்டிச் சான்றோனாக்கினான் ; கொல்லன், அவனுக்கு வேண்டிய படைக்கலங்களைப் பண்ணித்தந்தான் ; அவன் நல்லொழுக்கம் பெற நாட்டு அரசன் முயன்றான் ; ஆகவே, நாடுகாவலை நல்லமுறையில் மேற்கொள்வதே நல்ல மகனுக்குரிய கடமை; அவன், அதற்கு மாறாகத் தன் கடமையில் தவறினால்?—போருக்குச் சென்று புறமுதுகுகாட்டி ஓடி ஒளிந்துகொண்டால்?–அனைத்தும் பாழ்; அனைவர் உழைப்பும் பாழ்; அந்நாடும் பாழாம்; ஆகவே, அவ்விளைஞன், தன் கடமையில் தவறுதல் கூடாது ; தன் கடமை, மாற்றார் படையைப் பாழாக்குவது ; பகைவர் படையில் பெரும் பகுதியாக வரும் களிற்றினங்களைக் கண்டதுண்டமாக்கி வெற்றி காண்பது ; இதில் அவன் தவறக்கூடாது ; ஆகவே, "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்" என்றார்.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
> சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
> ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
> களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."
>
> (புறம் : கூஉ)

இவ்வளவு அரும் பெரும் கருத்துக்களை எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளார் நோக்குங்கள்! அவர் கூறிய கருத்துக்கள், அக்கால நாட்டுநிலை நோக்கிக் கூறப்பட்டனவே எனினும், அவை இக்கால மக்களும் ஏற்றுப் போற்றக் கூடியனவே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

---

## உகூ. போந்தைப் பசலையார்

தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்கும் துறை யமைத்து இவர் பாடிய அழகிய பாட்டொன்று அகநா னூற்றில் காணப்படுகிறது.

மகளின் வேறுபாடுகண்ட செவிலித்தாய், அவள் உயிர்த்தோழியை அழைத்து மகள் வேறுபாட்டிற்குக் காரணம் யாது என்று கேட்டாள்; அவள் வேறுபாட்டிற் கான காரணத்தை அறிந்த தோழி, அதை இன்றுவரை பிறர் அறியாவாறு மறைத்துவைத்ததேபோல் இனியும் மறைத்துவைத்தல் கூடாது என்று எண்ணினள்; ஆகவே, நடந்த நிகழ்ச்சியை உரைக்கத் தொடங்கினள்:

ஒருநாள் ஊர்ப்பெண்கள் எல்லோருங்கூடிக் கடற் கரைக்குச் சென்றோம்; கடல்நீரில் குதித்து ஆடினோம்; மணல் வீடுகட்டிச் சிறுசோறு ஆக்கினோம்; பின்னர் இவ் வாறு ஆடியதால் உண்டான களைப்புத்தீர சோலை நிழலில் தங்கினோம்; அந்த வேளை ஓர் இளைஞன் அங்கே வந்தான்; இளைஞன் ஒருவன் வருவதுகண்ட நாங்கள் எழுந்து ஒருவர் உடலில் ஒருவர் மறைந்துகொண்டு நின்றோம்; இளைஞன் எங்களை அணுகி, "பொழுதும் போய்விட்டது; நானும் நடக்கமுடியாமல் தளர்ந்துவிட்டேன்; ஆகவே, நீங்கள் ஆக்கிய இச் சோறுண்டு, இதோ இந்தச் சிறிய வீட்டில் இரவு தங்கிச் செல்ல விரும்புகின்றேன்; உங்களுக் கொன்றும் தடையில்லையே?" என வினவி நின்றான். அவன் வேண்டுகோளை ஏற்க விரும்பாத நாங்கள், அதை நேரே மறுக்காது, "புலால் நாறும் மீன் உணவு நினக்கு ஆகாது" என்று கூறினோம்; மேலும் அங்கேயே நின்றால், அவனோடு மேலும் சொல்லாடவேண்டிவருமே என்ற கவலையால், அவனைவிட்டு அகலுவது எப்படி என்று எண் ணிக்கொண்டிருந்தோம்; அந்நிலையில், "கடலில் கப்பல்; கடலில் கப்பல்; காண்போம் வாருங்கள்" என்று கூறிக் கொண்டே, சிற்றிலையும் சிதைத்துவிட்டு எல்லோரும் ஓடி விட்டனர்; நான்மட்டும் சற்றே நின்றேன்; நின்ற என்

லைச் சிறிதுநேரம் உற்று நோக்கிவிட்டு "நான் போகவா" என்றனன்; "செல்க" என்றனன் நானும்; நான் அவ்வாறு கூறியும் போகானாகித் தன் தேரைக் கையாற் பற்றிக் கொண்டு நின்றுகொண்டே யிருந்தான். அக் காட்சி இன்றும் என் கண்முன் நிற்கிறது; இதுதான் உண்மை. இதுதவிர வேறு ஒன்றும் அறியேன்; கடவுள்மீது வேண்டு மானாலும் ஆணையிட்டுக் கூறுகிறேன்," என்று கூறி முடித்தாள்.

இது, அவர் செய்யுட் பொருள்: இதுவே அறத்தொடு நிற்றல். தோழி அவ்வாறு கூறக்கேட்ட செவிலித்தாய், இளைஞன் இத் தோழியை நெருங்கிப் "போகவா" என்றத னால், நம் மகளைப் பெற அவன் இவள் துணையை நாடியுள் ளான்; இவள் கூறுவதை நோக்கின், இவளும் அவனுக்குத் துணைசெய்துள்ளாள்; அவனைப் பெறு மனக்கவலையால் மகள் உடல் மெலிந்தது. ஆகவே, அவனிடத்தில், இவளும் அன்புகொண்டிருக்கிறாள்; தோழி "போ" எனச் சொல்லி யும் அவன் போகாமையால் அவனும் இவளிடத்தில் பேரன்புவைத்துள்ளான்; தேரில் வந்து சென்றான்; ஆகவே, அவன் செல்வத்தாற் குறையிலன்; ஆதலால் இருவர்க்கும் மணஞ்செய்து மகிழ்வதே நம் கடமை என்று உணர்ந்தாள்.

ஒன்றைப்பற்றிய பேச்சு நிகழுங்கால் அப் பேச்சில் விருப்பம் இலாதார், "நீவிர் பேசுவது எமக்கு விருப்பம் இல்லை" என நேரே கூறுவது அத்துணை நன்றன்று எனக் கருதி, வேறு பொருள்பற்றிப் பேசத் தொடங்குவர்; அல் லது அவணின் நீங்கி அப்பாற் செல்வர். இதை அறிந்தார் போல், தலைமகனோடு இருந்து உரையாடலை விரும்பாத அவ் விளமகளிர் "கடலில் கப்பல் தோன்றுகிறது; காணுவம் வாருங்கள்" எனக் கூறிக்கொண்டே அவ்விடத்தின் நீங் கிச்சென்ற நிகழ்ச்சி நினைந்து இன்புறற்குரியதாம். இத் துணை அரும்பொருளெலாம் நிறைந்த அழகிய ஒரு பாட்டை அளித்தவர், போந்தைப் பசலையார் என்பதல்லது, இவர் வரலாறாக வேறு எதையும் அறிந்துகொள் வதற்கில்லை.

" அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க ;
பிறிதொன்று இன்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவள் நினக்கே ; கானல்
தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்,
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீரயாம் சிறிது
இருந்தன மாக, எய்த வந்து,
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின்று; அசைவு மிகவுடையேன்;
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டு, யானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்றெவனோ
என மொழிந்தனனே ஒருவன்; அவற்கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக்கு அரிய அல்ல, இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம்; இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணு மோஎனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு, நன்னுதால்
ஒழிகோ யான்என அழிதகக் கூறியான்,
பெயர்கு என்ன, நோக்கிற் றான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும் என் கட்கே."

(அகம்: ௧௧௦)

## உஉ. மாற்பித்தியார்

மாற்பித்தியார் பாடிய பாக்கள் இரண்டிலும், இல்லறத்தில் இனிது வாழ்ந்திருந்த கணவன், துறந்து காடு சென்றுவிட்ட கொடுங் காட்சியைக்கண்டு அவன் மனைவி அழுது அரற்றியதையே பாட்டின் பொருளாக மேற்கொண்டுள்ளார்; அவ்வாறு அழும் மனைவி மாற்பித்தியாரே; துறந்து காடுசென்று விட்டவன் மாற்பித்தியார் கணவனே; இல்லறத்தே இருந்து இன்பம் அளித்த தம் கணவன், துறந்து மறந்துபோனதைக் கண்டு மாற்பித்தியார்க்கு மயக்கமும் பித்தமும் உண்டாயின; தம் இழிநிலை குறித்துப் பாடிப் பாடி அழுதார்; அவ்வாறு அவர் பாடிய பாடல்களே அவை; ஆகவேதான் அவருக்கு மாற்பித்தியார் என்பது பெயராயிற்று என்று கூறி, மால் என்றால் மயக்கம்: பித்தி என்பது பித்தன் என்பதன் பெண்பாற் பெயர்; ஆகவே அறிவு பிறிதானவள் என்பதே மாற்பித்தி என்ற சொல்லின் நேர்பொருளாம் என்று கூறுவர் சிலர்.

புறத்துறை தழுவிய பாக்களில் தாபதநிலை என்ற துறை தழுவிய பாடல்கள், தாபதவாகை என்ற துறை தழுவிய பாடல்கள் என்று இருவகைப் பாக்கள் இருக்கின்றன; தாபதநிலையாவது, கணவன் இறந்துபோக இருந்து வருந்தும் மனைவியின் கைம்மை நிலை குறித்து வருந்திப் பாடல். தாபதவாகையாவது துறவிகளின் துறவு வாழ்க்கையினைச் சிறப்பித்துப் பாடல். மாற்பித்தியார் பாடியபாக்கள் இரண்டும் தாபதவாகை என்ற துறை தழுவியன; ஆகவே, கணவன் துறவு கண்டு மனைவி வருந்துவதோ, அல்லது கணவன் துறவு கண்டு வருந்தும் மனைவி நிலைகண்டு பிறர் வருந்துவதோ அல்ல அதன் பொருள்; அப் பாக்கள் இரண்டும், இல்லறத்தில் இருந்து இன்பம் நுகரவேண்டிய இளமைப் பருவத்திலேயே பெருந்துறவியாகிவிட்ட ஒருவனின் பெருமையைப் பாராட்டிக் கூறுவனவாம்; ஆகவே, அப் பாக்கள் மாற்பித்தியார் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியை விளக்குவன அல்ல; அப் பாட்டின் பொருளுக்கும், அவர்

வாழ்க்கை வரலாற்றிற்கும் யாதோர் தொடர்பும் இல்லை. இதனால், அவர் பெயருக்குக் கூறப்பட்ட பொருள் தவறுடையது என்று ஆகாது; அப் பெயரின் பொருள் அதுவே; ஆனால், அவருக்கு அப்பெயர் ஏன் வந்தது என்பதை அறிய முடியவில்லை. மாரிக்காலத்தில் மலரும் இயல்பினதான பித்திகம், புலவர் பலரின் பாராட்டைப் பெற்ற பெருமை வாய்ந்தது.

"மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி." (நற்: ௩௧௪)

"மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை." (குறுந்: ௧௧௮)

இவ்வாறு புலவர்களின் பாராட்டைப் பெற்ற மாரிப் பித்திகத்தை, மாண்புறச் சிறப்பித்துப் பாடிய சிறப்பால், இவர், மாரிப்பித்தியார் என அழைக்கப் பெற்றுளார். மாற்பித்தியார் என்பதன்று இவர் பெயர்; அவ்வாறு பாடிய அவர் பாட்டு இப்போது கிடைத்திலது போலும் எனக்கூறுவர் வேறுசிலர்.

இனி, அவர் பாடிய பாக்கள் இரண்டின் பொருளையும் திரட்டித் தருகிறேம்; படித்து இன்புறுங்கள்:

பரந்து உயர்ந்த வீடு; ஓவியத்தில் காண்பதே போன்று அழகு நிறைந்தது; அந்த வீட்டிலே, கொல்லிப் பாவைபோல் குறைவின்றி நிறைந்த அழகுடைய மகளிர்; அவர்கள் அறிவையும் மயக்கும் ஆண் அழகன் ஒருவன்; அவன் தெரு வழியே சென்றால், அவனைக்கண்டு அன்பு கொண்ட மகளிர் அவனைப் பெறமாட்டாக் கவலையால் தம் கைவளை கழலுமாறு தளர்வர்; அவனை விரும்பாத மகளிர் இலர்; அவன், தான் விரும்பிய மகளிரைப் பெறமாட்டாது பின்னடைந்ததும் இலன்; மயிலை வலைகொண்டு மடக்கும் வேட்டுவனேபோல், மகளிரைத் தன் சொல்வலையால் பிணிக்கும் சொல்லழகன்; இவ்வாறு, செல்வச் செருக்கிலே வாழ்ந்த அவன் வாழ்வின் சிறப்பினைக் கண்டவர், இன்று அவன் நிலையைக் கண்டால் அவனை வியந்து பாராட்டாதிரார்; இப்போது அவன் வாழ்வது நாட்டிலே, பெரிய வீட்டிலே அன்று; காட்டிலே வாழ்கிறான்; காலையில்

எழுந்து காட்டாற்று நீரில் மூழ்குகிறான்; அதனால் அவன் தலைமயிர் தன் பண்டைக் கருநிறம் ஒழிந்து செந்நிறம் பெற்றுவிட்டது; அது, மேலும் பல சடைகளாகத் திரிந்தும்விட்டது; கட்டுக்கடங்காக் காளையெனத் திரிந்த அவனு காட்டு வாழ்க்கையில் கைதேர்ந்துவிட்டான் என்றே எண்ணத் தோன்றும்; அவனுக்குக் காட்டுவாழ்க்கையில் எவ்வளவு பெரும் பழக்கம்; நீராடிய ஈரத்தை உலர்த்த நெருப்பு மூட்டும் அவனுக்கு வேண்டிய விறகுகளைக் காட்டு யானைகள் அன்றோ கொண்டுவந்து தருகின்றன! எவ்வளவு பெரிய துறவியாகிவிட்டான் அவன்! என்னே அவன் நிலை!

" ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்;
கழைக்கண் நெடுவரை அருவி யாடிக்
கான யானை தந்த விறகில்
கடுந்தெறல் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே." (புறம்: உருக)

" கறங்கு வெள்ளருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோடு
அள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே."
(புறம்: உருஉ)

## ௨௩. மாறோக்கத்து நப்பசலையார்

பாண்டிய நாட்டில் கொற்கை நகரைச்சூழ இருந்த நாட்டிற்குப் பழங்கால மக்கள் வைத்து வழங்கிய பெயர் மாறோக்கம் என்பது; மாறோகம் என்றும் சிலர் அழைப்பர்; அந் நாட்டு மக்கள், வீட்டிற்கு வெளியேசென்று விளையாடும் பேதைப் பருவத்து மகளிரைப் பெண்மகன் என்று கூறுவார்கள். அந் நாட்டுப் பெண்களுள் புலமையிற் சிறந்தவரொருவர் இருந்தார். அவர் பெயர் பசலையார்; பசலையார் என்ற இப் பெயர், அவர் தாய் தந்தையர் வைத்த இயற்பெயரன்று; பசலை என்ற நோயின் தன்மையை விளங்கப் பாடியதால் பெற்ற காரணப் பெயராம். இப் பெயரோடு, பெரும்புலவர்களுக்கு அவர் புலமையும் புகழும் கருதி அளிக்கும் 'ந' என்ற சிறப்படையும் சேர, **நப்பசலையார்** என்று அழைக்கப்பெற்றார்; பசலை யென்பது கணவன்மார் கல்வி, பொருள், போர் இவை குறித்துப் பிரிந்து வெளி நாடு சென்றகாலத்தில் அவர் மனைவியர்க்குத் தோன்றும் ஒரு நோய்; அவர்கள் நெற்றி, கணவன்மார் உடனிருந்த காலத்தில் பெற்றிருந்த அழகும் ஒளியும் கெட்டு, கண்ணாடியில் வாயினால் ஊதினால், அக் கண்ணாடி ஆவி படர்ந்து ஒளி மழுங்குவதுபோல், வேறுபட்டுத் தோன்றும் ஒரு நோய். நற்றிணையில் தாம் பாடிய பாட்டொன்றில், இப் பசலை நோயை,

> "மணிமிடை பொன்னின் மாமை சாயஎன்
> அணிநலம் சிதைக்குமார் பசலை."

(நற்றிணை : ௩௦௪)

என்று நப்பசலையார் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பாண்டிய நாட்டிற் பிறந்து தம் நாட்டுப் பற்றும் ஊர்ப்பற்றும் கொடாவகையில் தான் பிறந்த ஊர்ப்பெயரைத் தம்பெயரோடு இணைத்து வழங்கும் நம் புலவர் பாராட்டிய அரசர்கள் அனைவரும் சோழர்குலத் தொடர்புடையவராகவே காணப்படுகின்றனர்; அவர் பாடல் பெறும் பேறுபெற்ற அரசர்கள் மூவர்: **சோழன் குளமுற்றத்**

**துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரி, மலைய மான் சோழிய ஏனதி திருக்கண்ணன்** என்போர்.

குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் பெரும்புலவர் பலருடைய பாராட்டைப் பெற்ற பேரரசன்; பதின்மூன்று புலவர்கள் அவனைப் பாராட்டியுள்ளனர் என்றால் அவன் புகழை என்னென்பது! புலவர் பாராட்டப் பெறுதற்கு அவன் கொடையும், வீரமும் மட்டும் காரணமாகா; அவன் புலமையும் காரணமாம்; அவனே ஒரு பெரும் புலவன்; அப் புலவர்கள் பாட்டோடு ஒருங்குவைத்து மதிக்கத்தக்க அழகிய பாடல் பாடும் ஆற்றல் வாய்ந்தவன். கிள்ளிவள வன், உறையூரைத் தலைநகராகக்கொண்டு அதைச் சூழ இருந்த சோழநாட்டை ஆண்டவன்; சிறுகுடிகிழான் பண்ணன் என்ற கொடைவள்ளல்பால் பெருமதிப்புடைய வன்; மலையமான் திருமுடிக்காரியும், சேரவேந்தனும் அவன் பகைவர்; சோழர் குடியிலும் அவனுக்குப் பகைவர் இருந் தனர்; சேரர் தலைநகராகிய கருவூரை முற்றுகையிட்டு அழித்தான்; இமயமலையில் தங்கள் குல இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்துப் புகழ்பெற்று விளங்கிய சேர அர சனைத் தொலைத்தான்; மலையமானைப் போரில் வென்று அவன் மக்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து யானையைவிட்டு மிதித்துக் கொல்லத் துணிந்தான்; அச் செய்தியறிந்த கோவூர்கிழார் என்ற புலவர் வந்து வேண்ட விடுதலை செய்தான். போரில் பொறுத்தற்கரிய கொடியனே என்று லும் புலவர்களிடத்தே பெருமதிப்புடையவன்; அவன் காலத்தில் அவன் நாட்டில் வெள்ளைக்குடி என்ற ஊரில் நாகனார் என்ற புலவர் இருந்தார்; அவ்வூரில் அவருக்கு உரிமையான நன்செய் நிலத்திற்குச் செலுத்தவேண்டிய இறைப் பணத்தை அவரால் செலுத்த முடியவில்லை; இறை தண்டுவோர் விடவில்லை; என்ன செய்வார் அவர்? கிள்ளி வளனைக் கண்டார்; தன் குறைகூறினார்; அழகிய பாடல் ஒன்று பாடினார்; உடனே அரசன், அந் நிலத்திற்குச் சேரவேண்டிய பழைய கடனையும் தள்ளிவிட்டு அந் நிலத் தையும் இறையிலியாக மாற்றினான்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பதில் கிள்ளிவளவன் என்பதே அவன் இயற்பெயர்; குளமுற்றத்துத் துஞ்சிய என்பது, அவன் இறந்த பிறகு அவனுக்குக் கொடுத்த சிறப்புப் பெயர். ஒரே பெயர் கொண்ட அரசர்கள் பலர் வாழ்ந்தால், அவர்களைப் பிரித்து அறிவதற்காக, அவர் வாழ்க்கையோடு தொடர்புடைய சில நிகழ்ச்சிகளை அவர் பெயர்களோடு இணைத்து வழங்குவது வழக்கம். பழந்தமிழ் அரசர்கள் போர்வேட்கை யுடையவராவர்; ஆகவே, அவர்கள் அனைவரும் தங்கள் அரண்மனைகளிலேயே இறந்தார்கள் என்று சொல்வது இயலாது; பல்வேறு இடங்களில் நடைபெற்ற போர்களில் ஈடுபட்ட அவர்கள் அப் போர்க்களங்களிலேயே இறந்திருப்பர். வாழ்வின் பயன் வீரச்சாவு என்பதே பழந்தமிழர் பண்பாடாதலின், அரசர்கள் அரண்மனையில் இறவாது அமர்க்களத்தே இறந்தால், அதை அவரின் புகழுக்குரிய செயலாகக் கொண்டு அவ் விடங்களின் பெயர்களை அவ் வரசர் பெயர்களோடு இணைத்து வழங்குவர்: காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி; யானைமேல் துஞ்சிய பெருமான் கிள்ளி வளவன், குளமுற்றம் என்ற இடத்தே இறந்தவன் ஆகவே, அவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என அழைக்கப்பெற்றான்.

கிள்ளிவளவன் என்பதும் அவனுக்கு உரிய இயற்பெயரன்று; சோழ அரசர்கள் என்பதைக் குறிக்கச் சில சோழ அரசர் பெயர்களுக்குப் பின் வளவன் என்பதும் வரும்; நலங்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி; திருமாவளவன், மாவளத்தான். சோழ அரசர்கள் என்று அறிவிக்க வரும் இவ்விரு குறியீட்டுப் பெயர்களும் இணைய, கிள்ளி வளவன் என்பது இவனுக்குப் பெயராயிற்று. பழந்தமிழ் அரசர்கள் பெயரிடும் முறைகளுள் இதுவும் ஒன்று: பாண்டிய அரசர்கள் எனக் குறிக்கவரும் குறியீடுகள் மாறன் என்பதும், வழுதி என்பதுமாம்: முதுகுடுமிப் பெருவழுதி, நன்மாறன்; இவை இணைந்து மாறன்வழுதி என ஒரு பாண்டியன் பெயராக வருதலும் காண்க.

மலையமான் திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; பெண்ணையாறு பாயும் மலாடு என்ற நாட்டை ஆண்டவன்; திருக்கோவலூர் அவன் தலைநகர்; முள்ளூர் என்ற அரணமைந்த மலைக்கு உரியவன்; சிறந்த போர் வீரன்; சேர சோழ பாண்டியர் மூவர்க்கும் படைத்துணை அளிக்குமளவு பேராற்றல் வாய்ந்தவன்; இவன், தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதிகமான் நெடுமானஞ்சியால் ஒரு முறை தோற்கடிக்கப் பட்டான்; உடனே, அவ் வதிகன் பகைவனை பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசன் துணையைப் பெற விரும்பினான்; அதற்காக அவன் பகைவனும், கொல்லிமலைக்குத் தலைவனுமாகிய ஓரி என்பானைக் கொன்று அக் கொல்லிமலையைச் சேரனுக்கு அளித்தான்; உடனே அச் சேரன் அதியமான் தகடூர் மீது போர் தொடுத்து அழித்து அவனைக் கொன்றான்; மலையமான் தன் அரசுரிமையை மீண்டும் பெற்றான்.

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன், மலையமான் மரபிலே வந்தவன்; சோழர் படைத்தலைவன். மலையமான் திருமுடிக்காரியின் மகன் இவன் என்று கூறுவர் சிலர்; ஆனால் அதை உறுதிசெய்யும் தெளிவான சான்றுகள் கிடைத்தில. சோழர்குலச் சிற்றரசன் ஒருவன் தன் தாயத்தார்க்கு அஞ்சி இவனிடம் அரண் புகுந்தான். அவனைத் தன் முள்ளூர் மலையில் வைத்துக் காத்ததோடு, அவன் பகைவரையும் வென்று அவனைச் சோழர் அரியணையில் ஏற்றினான்.

நப்பசலையார் பாராட்டிய அரசர்களின் வரலாறுகள் இவை; இனி, இவர்களைப் பாராட்டிய அவர் பாடல்களின் சிறப்புக்களைச் சிறிது நோக்குவோம்.

கிள்ளிவளவன் ஈதற்சிறப்பு, வெற்றிச் சிறப்பு, செங்கோற் சிறப்பு ஆகியவற்றைப் புகழவந்த நப்பசலையார், "அரசே! நின்பால் வரும் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் பொருள்களை வாரிவாரி வழங்குகின்றாய் என்று கூறுகின்றார்கள்; என்றாலும் அஃது உன் புகழாகாது.

எதிர்த்த பகைவர்கள் எவ்வளவு பேராற்றல் வாய்ந்தவராயி னும், பாம்பினை அழிக்கும் இடியேற்றினைப்போல் அவர் களை அழிக்கும் ஆண்மையுடையாய் என்பர்; அதுவும் உனக்குப் புகழைத் தராது; முறை வேண்டினார்க்கும், குறைவேண்டினார்க்கும் பேர் அத்தாணிக்கண் இருந்து அறம் பிறழாது தீர்ப்பளிக்க வல்லாய் என்று நின்னைப் புகழ்வர்; அதுவும் நின் புகழாகாது,'' என்று கூறுகின்றார். இவ்வாறு கூறுவது, உண்மையில் புகழ்ச்சியன்று; இகழ்ச்சி என்றே எவர்க்கும் எண்ணத் தோன்றும். ஆனால், இவையெல்லாம் அவன் புகழாகா என்பதற்கு நப்பசலை யார் கூறும் காரணத்தை அறிந்தால், இதுவே உண்மைப் பாராட்டு என்ற முடிவிற்கு வருவர்.

சோழர் குடியிற் பிறந்தவர் வழிவழியாகவே கொடுத் துப் புகழ் பெற்றவர். அவர்கள் குல முன்னோன் ஒருவன் தன்பால் அடைக்கலம் புகுந்த புறா ஒன்றைக் காப்பாற்று வதற்காகவே துலாவில் ஏறி அமர்ந்து தன் உடலையே தானமாகக் கொடுத்துள்ளான். அதைப்போலவே, சோழர் குடி தோன்றிய காலத்திலிருந்தே சோழர்கள் பெரு வீரர் கள்; அவர்களுள் ஒருவன், தேவர்க்கும் அசுரர்க்கும் நடந்த போரில் தேவர்க்குத் துணைபோய், அசுரர்கள் தங் கள் பாதுகாப்பிற்காகப் பெற்றிருந்த வானத்திலேயே பறந்து திரியும் இயல்புடைய மூன்று பெருங் கோட்டை களை அழித்து அவ் வசுரர்களையும் கொன்றான். சோழர்கள் என்றுமே முறைதவறியவரல்லர்; அவர்கள் தலைநகராகிய உறந்தை நகரில் உள்ள அறங்கூர் அவையிடத்தே அறம் என்றும் நின்று நிலைபெற்றிருக்கும்; அதைப் புலவர் பல ரும் பாராட்டியுள்ளார்கள்.

இவ் வுண்மைகளை அறிந்தவர் நப்பசலையார். "ஆகவே, புறாவின் பொருட்டுத் தலைபுக்க சிபியின் வழிவந்தவனா கவே, வந்தவர்க்கெல்லாம் பொருள்களை வாரி வழங்கு கின்ற நின்செயல் நினக்குப் புகழாகாது; அவுணர் கோட்டை மூன்றையும் அழித்த நின் முன்னோன் செய லோடு ஒப்பிட்டு நோக்குங்கால், உன் ஆண்மை

ஆண்மையாகாது; உங்கள் உறந்தை அவையில் என்றும் அறம் நின்று நிலைபெறும் என்பதை அறிந்தால், நீதி தவறாதவன் நீ என்பதில் பொருளே இல்லை,'' என்று கூறினார். "இவ்வாறு உன் புகழெல்லாம் உன் முன்னோர்களிடத்திலும் காணப்படுவதால் உன்னை நான் எவ்வாறு புகழ்வேன்! யாது கூறி உன்னைப் பாராட்டுவேன்!'' என்றும் கூறுகிறார்.

இதனால், கிள்ளிவளவன் அருள், ஆண்மை, அறம் ஆகிய பெருங் குணங்களையுடையான் என்றும், வழிவழியாகவே அக் குணங்களால் சிறப்புடைய குடியிலே வந்தவன் என்றும், தன்குடி வழிவழியாகப் பெற்றிருந்த அக் குணங்களை அழிக்காமல் போற்றிக் காப்பாற்றிய பெருமையுடையான் என்றும் பாராட்டிய பெருமையைக் காணுங்கள் :

"புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக ;
ஈதல் நின் புகழு மன்றே ; சார்தல்
ஒன்னார் உட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்தநின் ஊங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழு மன்றே ; கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று ஆகலின் அதனால்
முறைமைநின் புகழு மன்றே;" (புறம் : ௩௯)

கிள்ளிவளவன் வீரமும் கொடையும் விளங்கப் பாட விரும்பிய நப்பசலையார்க்கு அதற்கு ஏற்ற காலம் கிடைத்தது. கிள்ளிவளவன் இறந்து விட்டான் ; நப்பசலையார் அச்செய்தி கேட்டார் ; அவர் உள்ளம் நடுங்கிற்று. அவ்வளவு பேராற்றல் வாய்ந்தவன் எப்படி இறந்தான் ! அவனை வென்று கொல்ல யாரால் முடியும்? அவனை அணுகவும் அஞ்சுவரே பகையரசர்கள் ! எமன் எப்படி அவன் உயிரைப் பற்றினான் ? அவனை நெருங்கக்கூடிய ஆண்மை எமனுக்கு ஏது ? எமன் தன் ஆற்றல் காட்டி அவனுயிரைக்

கவர்ந்திருக்க மாட்டான்; பகைத்து அவனுயிரைப் பற்ற அவனால் முடிந்திராது; பின் எவ்வாறு அவன் உயிரைக் கவர்ந்தான்; கிள்ளிவளவன் பெருங் கொடைவள்ளல் என்பதை எமன் அறிந்திருக்க வேண்டும்; ஆகவே, அவன்பால் பாடிச்சென்று பரிசில் பெறும் இரவலர் போலவே தானும் சென்று இருகை கூப்பி வணங்கி இரப்புரை கூறி நின்றே அவனுயிரைப் பெற்றிருத்தல் வேண்டும்:

> "செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்
> உற்றன் றாயினும் உய்வின்று மாதோ!
> பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
> இரந்தன் றாகல் வேண்டும்: பொலந்தார்
> மண்டமர் கடக்கும் தானைத்
> திண்தேர் வளவற் கொண்ட கூற்றே." (புறம்: உஉசு.)

என்று கூறினார். இரந்து அவன் உயிரைப் பெற்றான் எமன் என்று கூறியதால், அவனை அணுக எமனும் அஞ்சுவான் என அவன் ஆண்மையினையும், இரப்போர்க்குத் தன் உயிரையும் கொடுப்பான் என அவன் கொடைச்சிறப்பையும் நப்பசலையார் விளக்கியுள்ளார்.

மலையமான் திருமுடிக்காரியைப் பாராட்டுகிறார் நப்பசலையார். "பகையரசர்களின் பட்டத்து யானைகளுக்கு நெற்றியில் அணியும் பொன்னாலாகிய பட்டத்தை அழித்துச் செய்த பொற்றாமரை மலர்களைத் தம்மைப் பாடும் பாணர்களின் தலையிலே சூட்டுவர் நின் முன்னோர்," என அவன் குல முன்னோர் பெருமையையும், காவற்காடு சூழ்ந்து அருவி நிறைந்து விளங்கும் அவன் முள்ளூர் மலையையும் பாராட்டினார்.

பின்னர் மலையமான் புகழ் பாடுவார்போல பெரும் புலவராகிய கபிலர் புகழையும் ஒருங்கே பாராட்டிய உயர்வு உள்ளுந்தோறும் மகிழ்தற்குரியதாம். "கபிலன் உலகில் வாழும் மக்கள் எல்லாரினும் குற்றமற்ற அறிவுடைய அந்தணன்; அவ்வளவு சிறந்த கபிலன் நின்னைப் பாடினான்! எப்படிப் பாடினான்? உன்பால் வந்து உன் புகழ் பரவி,

அதைக்கேட்டு நீ அளிப்பன பெற்று வாழ்வர் இரவலர்; இனி அவர்கள் பிழைப்பிற்கு வழியில்லை. அவர்களால் புகழ்ந்துபாட முடியாத அளவு கபிலர் நின்னைப் புகழ்ந்து பாடிவிட்டார். இனி, வேறு யாரும் நின்னைப் புகழ்ந்து பாடல் முடியாது; மேற்குக் கடற்கரையின்கண்ணே உள்ள சேரக்குரிய துறைமுகங்களுக்குள்ளே, பொன்னை ஏற்றிக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து வந்த பெரிய கப்பல்கள் வந்து தங்கிவிட்டால், ஏனைய சிறு கப்பல்கள் எப்படி அத் துறைமுகத்தினுள்ளே நுழைய முடியாதோ, அப்படியே, என்னைப்போன்ற சிறு புலவர்கள் உன்புகழ் பாட முடியாத அளவு கபிலர் நின்புகழ் பாடி விட்டார்,'' என்று கூறுகிறார்.

"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்; அதற் கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலா தனையேம்." (புறம்: ௧௨௬)

கபிலர் புகழைப் பெறுவது அரிது; பெறக்கூடிய பேறுகள் அனைத்திலும் சிறப்புடைய பேறு என்று கூறிக் கபிலரைப் புகழ்ந்தார். முள்ளூர்மலையின் சிறப்பைப் பாராட்டிய பிறிதோரிடத்திலும், "பொய்யா நாவின் கபிலன் பாடிய....எள்ளறு சிறப்பின் முள்ளூர்'' என்று பாராட்டிக் கபிலரையும் பாராட்டிப் பாடியுள்ளார். "அத்தகைய கபிலரும் நின்னைப் புகழ்ந்து பாடினார் என்றால் உன் பெருமையே பெருமை!'' எனக் காரியையும் புகழ்ந்தார். இவ்வாறு இருவர் புகழையும் ஒரேபாட்டில் வைத்துப் பாராட்டியதோடு, அதை விளக்கும் வகையில், பழந்தமிழ் மக்களின் கடல்வாணிப வளத்தையும் விளங்கக் கூறியுள்ளார்

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் பாராட்ட விரும்புகிறார் நம் புலவர் நப்பசலையார். காவிரி

பாய்ந்து வளங்கொழிக்கும் சோழவளநாடு, பங்காளிப் போரால் பாழடைந்துவிட்டது; நல்ல அரசை இழந்து விட்டது அந் நாடு; அந் நாட்டு அரியணைக்கு வரவேண்டியவனே மிகவும் இளைஞன்; அவன் தாயத்தார் அவனையும் அழித்தொழிக்கத் திட்டமிட்டுவிட்டனர். அஃதறிந்த அவன், தங்கள் குலத்தின்பால் குன்றாத அன்புடையவர்களும், தங்களுக்குத் துயர் வந்தபோதெல்லாம் துணைபுரிவோரும் ஆகிய மலைய மன்னர்கள்பால் வந்து அடைக்கலம் புகுந்தான்; அப்போது அந் நாடாண்டிருந்தோன் திருக்கண்ணன். அவன் தந்தையும் அப்போதுதான் இறந்து விட்டான். ஆகவே, தானே முன்வந்து, தன் தந்தை தோழன், சோழர்குல இளவரசனுக்குத் துணைபுரிந்தான்; பகைவர் அணுகுதற்காகத் தன் முள்ளூர் மலையிடத்தே வைத்துக் கேடொன்றுமின்றி அவனைக் காத்தான்; இறுதியில் அவன் பகைவரையும் அழித்து அவனைச் சோழநாட்டிற்கு அரசனாக்கி, அரசிழந்து அல்லல்உற்ற அந் நாட்டு மக்கள் துயரையும் போக்கினான்.

இவ் வரலாறுகளை யெல்லாம் விளங்க உரைத்துவந்த நப்பசலையார், தந்தை இறப்பத் திருக்கண்ணன் தோன்றி, தன் தந்தை தொண்டினைத் தான் மேற்கொண்ட சிறப்பினைப் பாராட்ட விரும்புகிறார். அவன் தந்தை மறைவால் உண்டான கேட்டின் மிகுதியையும், அதைப் போக்கும் வகையில் திருக்கண்ணன் தோன்றிய காலத்தின் அருமையையும், அவன் முன்வந்தது கண்டு மக்கள் கொண்ட மகிழ்ச்சிப்பெருக்கையும் விளக்க ஓர் அரிய அழகிய உவமையினை அமைக்கின்றார்.

கொடிய கோடைகாலம்; அக் கோடையும் குறுகியதாகாது, நீண்டு செல்கிறது; கோடைக் கொடுமையால் மலைகள் வெப்பந் தாழாது வெடித்துப் பொடியாகின்றன. காடுகள் எல்லாம் தீப்பற்றி எரிகின்றன; நீர் நிறைந்திருந்த நீர்நிலைகள் பலவும் அந் நீர் முற்றும் வற்றி உலர்கின்றன; இந்நிலையில் கோடை நீளுகிறது; இக் கோடையின் கொடுமை கண்டு மக்கள் கண்கலங்குகின்றனர்.

கோடை, இவ்வாறு கொடுமை யளித்துக்கொண்டிருக்குங்கால், திடீரென, வானம் இருண்டு, இடியும் மின்னலும் கலந்து, மண்ணும் பிளந்து போகுமாறு பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது ; மக்கள் மனத்துயர் மாய்ந்தது ; மகிழ்ச்சி பொங்கிற்று.

இக் காட்சியைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்திக் கோடையின் கொடுமைபோன்றது திருக்கண்ணன் தந்தை மறைவு என்றும், பெருமழை பெய்ததுபோல வந்து முன்நின்றான் திருக்கண்ணன் என்றும் உவமை கூறி, கோடையின் கொடுமைகாண நடுங்கிப், பெருமழை காண மகிழும் நம் பசலையார் தம் மனித உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார்.

" கவலை நெஞ்சத்து அவலந்தீர
நீ தோன்றினையே ; நிரைத்தார் அண்ணல் !
கல்கண் பொடிய, கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பின் கயம்பல உணங்க
கோடை நீடிய பைதறுகாலை
இருநிலம் நெளிய ஈண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந்தாங்கே." (புறம் : கஎச)

இம் மூவரையேயன்றி அவியன் என்ற ஒரு தலைவனையும் பாடியுள்ளார் பசலையார். கோழிக்குரல் கேட்டு, எழுந்து கொடுமைசெய்யும் குளிரையும் பொருட்படுத்தாது சென்று அவனைப் பாடியதையும், தன் பாடல் கேட்ட அவனும், தன் தகுதியறிந்து வரவேற்றுச் சிறப்புப் பல செய்து, பாம்பின்தோல் போன்றனவும், பெரு மூங்கிலினுள்ளே பிரித்தெடுக்கப்படும் வெள்ளிய மெல்லிய தோல் போன்றவுமாய அழகிய ஆடைகள் பல அளித்ததையும் விளக்கிவிட்டு, அத்தகையான் ஒருவனைப் பெற்றுவிட்ட காரணத்தால், "வறுமை என்னை வாட்டாது ; மழை இன்மையால் காலமே கெடினும் கவலைகொள்ளேன் ; மழைக் கோளாகிய வெள்ளி எங்குச் செல்லினும் அதுகுறித்து இனி வருந்தேன்," என்று பெருமிதம் தோன்றக் கூறியுள்ளார் :

"நாஞ்செழு நாடன் கடுந்தேர் அவியன் என
ஒருவனை உடையேன் மன்னே;
அருன்; எவன் பரிகோ வெள்ளியது நிலையே?" (புறம் : ருஅரு)

போர்க்களத்தே வீரப்புண் பெற்று மாண்டான் கணவன்; அஃதறிந்த மறக்குடியிற் பிறந்த அவன் மனைவி அவன் உடலை ஒன்றும் தீண்டாதவாறு அன்றிரவு காத்துக் கிடக்கின்றாள். இந்நிலையை விளக்கும் ஒரு செய்யுளை இறுதியாகப் பாடியுள்ளார், பெண் உள்ளம் அறிந்த நம் பெண்பாற் புலவர். பாம்பு அறியும் பாம்பின் கால் என்பர்; பெண்கள் துயரைப் பெண்களே அறிவர்; ஆகவே, கணவனை இழந்த அப் பெண் வாயிலாகக், கணவனை இழந்த மகளிர் தம் துயர்நிலையைச் சித்திரித்துக் காட்டுகிறார்.

"கணவன் மார்புப் புண் அவன் உயிர் மீளாவாறு செய்துவிட்டது; ஆகவே, அது மிகமிகக் கொடிய புண்; நடுநாள் யாமத்திலும் தும்பி வந்து புண்ணைச் சுற்றுகிறது; அதைத் துரத்துதல் வேண்டும். உடல் வீழ்ந்து கிடக்கும் இடம், ஊர்ப்புறம். ஆகவே, ஏற்றிய விளக்கை எரியவிடாது அலைக்கிறது காற்று. உறங்கிப் பலநாள் ஆயினமையால், கண்களும் உறக்கத்தை மேற்கொள்ளுகின்றன; இடை இடையே எழும் கூகையின் குரலோ அச்சத்தைத் தருகிறது. 'என் கணவன் உயிர்மீண்டு எழமாட்டானோ' என்ற ஆவலால் நற்சொல் கேட்டுநிற்கும் பெண்கள் எண்ணமும் நிறைவேறாது. தலைமயிர் கழித்து, தண்ணீரில் மூழ்கி நல்லாடை இன்றி அல்லிக்காய் அரிசி தின்னும் கைம்பெண்ணாய் வாழும் கருத்திலேன் யானும். இதுகாறும் இவன்பால் பொருள்பெற்றுப் பிழைத்துவந்த ஏ! பாண! ஏ! விறலி! இனியும் நீங்கள் இங்கேயிருந்து வாழ்தல் இயலாது; நீங்கள் இனி எங்ஙனம் வாழ்வீர்?" (புறம் : உஅ0)

இது, அப் பெண் அழுது பாடியதாக அவர் பாடிய ஆனந்தப்பையுள். இதில், தாம் துயர்உறும் காலத்தும், தம் துயரைப் பெரிதெனமதியாது, பிறர் துயரையே பெரிதெனக்கொண்ட உயர்நிலையும் விளக்கப்பட்டுள்ள வியப்பைக் காணுங்கள்.

## உச. வெண்ணிக் குயத்தியார்

வெண்ணி என்ற ஊரில் வாழ்ந்த வேட்கோவர் குடியிற் பிறந்த பெண்பாலார் இவர். வெண்ணி என்ற ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில், நீடாமங்கலத்திற்கு அண்மையில் உள்ளது; இப்போது, வெண்ணில் எனவும் கோயில் வெண்ணி எனவும் அழைக்கப்பெறும். வணிகர் குடியிலே சிறந்தார்க்கு எட்டிப் பட்டமும், படைவீரருள் சிறந்தார்க்கு ஏனாதிப் பட்டமும் வழங்குவதேபோல், பழங்கால அரசர், வேட்கோவர் குடியிலே சிறந்தார்க்குக் குயம் என்று பட்டமளித்துச் சிறப்பித்தனர். பின்னர் வேட்கோவர் என்ற பெயர் மறைய, குயவர் என்பதே குடிப்பெயராயிற்று; குயவர் குடியிலே பிறந்து குன்றாப் புகழ்பெற்ற புலவராய் இருந்தமையால், இவர், குயத்தியார் எனக் குலப் பெயராலேயே அழைக்கப்பெற்றார்; அவர் பெயரோடு, அவர் பிறந்த ஊர்ப் பெயரையும் இணைத்து **வெண்ணிக் குயத்தியார்** என்று அழைத்தனர். இவரைப்போலவே, ஊரும் குலமும் அறிய நின்ற புலவர்களும் இருந்தனர்: ஆலத்தூர்கிழார், கோவூர்கிழார்.

வெண்ணிக்குயத்தியார், சோழநாட்டு அரியணையில், கரிகாலன் என்ற பேரரசன் வீற்றிருந்த காலத்தே வாழ்ந்தவர்; கரிகாலன் முன்னோர் வரலாற்றையும், சிறப்பையும் நன்குணர்ந்தவர். ஆண்டில் அவ்வப்போது வீசும் காற்றின் தன்மையை உணர்ந்து, மாறி மாறி வீசும் அதன் இயல்பை உணர்ந்து, அதற்கு ஏற்ப, கப்பல்களைப் பிற நாட்டிற்குக் கொண்டுசெல்வதும், பிறநாட்டினின்றும் கொண்டுவருவதும் ஆய தொழில்களை அந்தக் காலத்திலேயே மேற்கொண்டவர் கரிகாலன் முன்னோர்; பழந்தமிழர். வெண்ணிக்குயத்தியார் இதை உணர்ந்து கூறியுள்ளார்.

கரிகாலனுக்கும், சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும் புலவர் ஊராகிய வெண்ணி அருகே பெரும்போர் நடந்தது; அதனால் அவ்விடம் வெண்ணிப் பறந்தலை என்று

அழைக்கப்பட்டது: போர் நிகழ்ந்த இடத்தைப் பறந்தலை என்று அழைத்தனர் பண்டைக்கால மக்கள்; பாழிப் பறந்தலை, வாகைப் பறந்தலை எனவும் வருதல் காண்க. போரில் கரிகாலன் எய்த அம்பு ஒன்று, சேரலாதன் மார்பில் தைத்து ஊடுருவிச் சென்று, முதுகுவழியே வெளிவந்துவிட்டது; அதனால், அவனும், அவன் படையும் தோற்றனர். ஆனால், சேரலாதன் இறந்தானல்லன்; புறப்புண் பெற்றது காண உள்ளம் நாணினன். மானம் அழிந்து வாழும் வாழ்வும் வாழ்வா என எண்ணினன்; வாழ்வை வெறுத்தான்; உடனே கையில் வாளேந்தி, வடக்கு நோக்கி அமர்ந்து, உண்ணாது இருந்து உயிர் இழந்தான்; இவையெல்லாம் தன் ஊர் அருகிலேயே நிகழ்ந்தமையால் அவற்றை நன்கு உணரும் வாய்ப்பு புலவருக்குக் கிட்டியது. படையைப் பாழ்செய்து பெற்ற கரிகாலன் வெற்றிச் சிறப்பையும் கண்டார்; தோற்ற சேரலாதன், புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர்விட்டுப் பெற்ற புகழ்ச் சிறப்பையும் கண்டார். இவ்விரு சிறப்புக்களில் சிறந்தது எது என ஆராய்ந்து கண்டார்; வென்று கொண்ட புகழினும், வடக்கிருந்து பெற்ற புகழே அவருக்குச் சிறந்ததாகத் தோன்றியது. வெற்றிக் களிப்போடு நிற்கும் கரிகாலனைக் கண்ட குயத்தியார், "வடக்கிருந்து இறந்த அவன், வென்ற நின்னினும் நல்லன்" என்று சிறிதும் கூசாது கூறினார்.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க்கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே." (புறம்: சக)

# உரு. வெள்ளிவீதியார்

மதுரையில் வெள்ளியம்பலவீதி என்றொரு வீதியுண்டு; அது வெள்ளிவீதி எனக் குறைந்தும் வழங்கப்பெறும். அவ் வீதியில் வாழ்ந்தமையால், சிலர் இவர் வெள்ளிவீதியார் என அழைக்கப்பெற்றார் என்பர். மக்கள் பெயரைத் தெருவிற்கு வைக்கும் இக் காலம்போலன்றி, அக்காலத்தில் தெருவின் பெயரை மக்களுக்கு வைத்து வழங்கினார்போலும். வெள்ளிவீதியார் தம்மையொத்த ஒரு புலவரைப் பாராட்டி, மற்றொரு புலவரால் பாராட்டப்பெற்றுப் பெருமையடைந்தவராவர்; இவர் பாராட்டைப் பெற்ற புலவர் ஆதிமந்தியார்; இவரைப் பாராட்டிய புலவர் ஔவையார்; வெள்ளிவீதியார் பாராட்டிய புறத்திணைத் தலைவர்கள் இருவர்; ஒருவர் ஆதிமந்தியார்; மற்றொருவர் திதியன். ஆதிமந்தியார் வரலாற்றை முன்னரே அறிந்திருக்கிறோம்; காவிரியில் மறைந்த தம் கணவனைத் தேடித் திரிந்த ஆதிமந்தி என்று அவர் வரலாற்றின் சிறப்புடைய பகுதியைக் குறித்துள்ளார். திதியன் சிறந்த போர்வீரன்; சேர்ந்தோர் துயர் தீர்க்கும் சிறப்புடையோன்; அன்னி மிஞிலி என்பவள் ஒருத்தியும், அவள் தந்தையும் பசுக் காத்தல் தொழில் மேற்கொண்டு வாழ்ந்திருந்தனர்; ஒரு நாள் அவர்கள் பசு, கோசர் என்பவர்களுக்கு உரிய நிலத்தில் பயிரை மேய்ந்துவிட்டது அச் சிறு குற்றத்திற்கு அவர்கள், அவள் தந்தையின் கண்ணைப் போக்கிவிட்டனர்; அதுகண்டு, அவரைப் பழிவாங்காமுன் உண்ணேன் என்று சூளுரைத்துத் திதியனிடம் சென்று முறையிட்டாள்; அவன் அவரைக்கொன்று அவள் துயர் தீர்த்தான்; அன்னி என்பவன் திதியனோடு பகைத்தான்; பலர் தடுத்தும் கேட்கவில்லை; குறுக்கைப் பறந்தலை என்னுமிடத்தில் இருவருக்கும் கடும்போர் நடந்தது; களத்தில் அன்னி இறந்தான்; திதியன், அன்னியின் காவல் மரமாகிய புன்னையை அழித்து மகிழ்ந்தான்; திதியன் பெற்ற இவ் வெற்றிச் சிறப்பையும், அதைக் கண்டு பாணர், கூத்தர் முதலியோர்

மகிழ்ந்து பாடியதையும் வெள்ளிவீதியார் பாராட்டி யுள்ளார்.

வெள்ளிவீதியார் பாடிய பாடல்கள் பதின்மூன்று; அவை அனைத்தும் அகத்துறை தழுவிய பாடல்கள்; அவற்றுள் ஒன்றே ஆண்மகன் கூற்று; மற்றவை எல்லாம் தலைவி, தோழி, செவிலி என்ற பெண்பாற் கூற்றுக்களே. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் வரும் அவர் பாடல்களை எல்லாம் கோவை செய்து கண்டால் வெள்ளிவீதியாரின் வாழ்க்கை வரலாறு ஒரு வாறு விளங்குதல் கூடும் என்பர்.

வெள்ளிவீதியார் தலைவன் ஒருவனைக்கண்டு காதல் கொண்டு வாழ்ந்து வந்தார்; இடையில், அவன் தங்கள் திருமணத்திற்கும், இல்லறவாழ்விற்கும் பொருள் தேவை என்பது உணர்ந்து, அதைத் தேடிப் பெற்றுவர வெளி நாடு சென்றுவிட்டான்; பல நாளாகியும் அவன் வாராமை யால் வெள்ளிவீதியார் வருத்தம் மிகுவதாயிற்று; ஒருநாள் காலை வீட்டைவிட்டு வெளியே வந்தார்; அவன் ஊருக்குப் போகும் வழியில் ஒரு நீர்நிலை; அதனருகே நின்றுகொண் டிருந்தார்; அந் நிலையில் அவனூர்ப்பக்கமிருந்து நாரை யொன்று வந்து நீர்நிலையில் தங்கிற்று. அதைக்கண்ட அவர், "ஏ நாரையே! நாள்தோறும் இங்கே நீ வருகின்றாய்; எங்களூர் நீர்நிலையில் உள்ள மீன்களைப் பிடித்து உண் கிறாய்; மாலை ஆனதும் அவனூருக்குச் சென்றுவிடுகிறாய்; நான் வளைகழல வருந்துவதை நாள்தோறும் காணும் நீ; அதை ஒருநாளாவது அவருக்கு அறிவிப்பாய் என எதிர் பார்க்கிறேன்; ஆனால், நீ அதைச் செய்வதாகத் தெரிய வில்லை; ஏன்? உனக்கு என்பால் அன்பில்லையா? அல்லது மறதி மிகுதியோ?" என்று அதைக் கேட்பார்போல் தம் துயர்கூறி அழுதார்.

"சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
எம்மூர் வந்து எம் ஒண்துறைத் துழைஇச்
சினைக்கெளிற்று ஆர்கையை, அவனூர்ப் பெயர்தி,

அனைய அன்பினையோ? பெருமறவியையோ?
கழனி நல்லூர் மகிழ்நர்க்கு என்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே."

பொருள் தேடிக்கொண்டு தலைவனும் வந்து சேர்ந்தான்; ஆனால், வெள்ளிவீதியாரின் பெற்றோர் அவரை அவனுக்கு மணம் செய்துகொடுக்கமாட்டார்போல் தோன்றிற்று; மேலும், அந்த ஊரிலேயே இருந்து, பிறர் யாரும் அறியாவண்ணம் அவனோடு கூடி வாழ்தல் இனியும் இயலாது என்பதை உணர்ந்தனர் இருவரும்; தோழியோடு கலந்தனர்; அவனோடு அவனூர் சென்று மணந்துகொள்வது என்று முடிவு செய்தனர்; காலையில் எவரும் எழுந்திருக்காமுன் வந்து அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான்; வெள்ளிவீதியார் தனியே இருக்கிறார்; அவர் உள்ளத்தில் எண்ணங்கள் பல தோன்றின; "உற்றோரும் பெற்றோரும் அறியாவண்ணம் அயலான் ஒருவனோடு சென்றுவிடுதல் நாணுடை மகளிர்க்கு அழகல்லவே; அவ்வாறு செல்லும் மகளிரிடத்தே நாண் நில்லாது நீங்குமே; என் நிலையும் அதுதானோ? என்னைவிட்டு நாண் நீங்குவதா? நாண் இல்லா மகளிரும் மகளிரோ? தாயினும் சிறந்ததன்றோ நாண்? அதை எவ்வாறு இழப்பேன்," என்று ஏங்கினார்; பின்னர்ச் சிறிது நேரம் கழித்து, "நாணைப்போற்றி அவரோடு செல்லாது போனால், பின்னர் அவரைப் பெறுதல் முடியாது; பெற்றோரும் பிறன் ஒருவனுக்கு என்னை மணம்செய்து வைத்துவிடுவர்; அந் நிலையில் என் கற்பு என்னும்? நாணைக் காட்டினும் கற்பன்றோ சிறந்தது? நான் கற்புடைமகளாதல் வேண்டுமாயின் நாணை மறந்தே ஆகவேண்டும்? அதை விட்டே ஆகவேண்டும்," என்ற துணிபு பிறந்தது. மேலும் எண்ணங்கள் வளர்ந்தன. "இந் நிலை ஏன் உண்டாயிற்று? என்னோடு பிறந்து, என்னோடு வளர்ந்த நாணை நானே கைவிடவேண்டிய இந் நிலை எதனால் உண்டாயிற்று? நான் அவர்பால் காதல்கொண்டு காம நோயை வளரவிட்டதாலன்றோ? காமநோய் என் மனத்திடை வளர வளர, அதன்

தாக்குதலைத் தாங்கமாட்டாது, நீரின் தாக்குதலைத் தாங்காமல் மணற்கரை அழிந்து மறைவதேபோல், நாணும் இன்று என்னைவிட்டு நீங்குகிறது; அந்தோ! நாணே! உன் நிலைகண்டு வருந்துகிறேன்,'' என்று வருந்தினர்.

"அளிதோ தானே நாணே; நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.'' (குறுந் : கசுக)

வெள்ளிவீதியார் தலைமகனோடு சென்றுவிட்டார்; காலையில் அவளைக் காணாத பெற்றோர் கவலை கொண்டனர்; தோழியை அழைத்துக் கேட்டனர்; அவள் நடந்தது கூறினாள்; உடனே, அவரைத் தேடிக்கண்டு அழைத்து வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டாள் செவிலித்தாய்; வழியில் பலர் ஆணும் பெண்ணுமாய்க் கலந்து கலந்து வருகின்றனர்; அவர்களைத் தொலைவில் காணும்போதெல்லாம் அவர்கள் தன் மகளும் அவள் காதலனுமே என்று மகிழ்வாள்; ஆனால், அவர்கள் அண்மையில் சென்று கண்டு வேறுதல் அறிந்து வருந்துவாள்; இவ்வாறு பலமுறை ஏமாந்தாள்; இறுதியில் அவளுக்கு ஓர் உண்மை புலப்பட்டது; தவறு செய்தவள் தன்மகள் ஒருத்திமட்டும் அன்று; உலகில் பலர் அத்தகையவரே; ஆகவே, இஃது உலகியல்; அவர்களுக்கு மணம் செய்துவைத்து மகிழ்தலே பெற்றோர் கடன் என உணர்ந்து வீடுதிரும்பினாள்:

"அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற; இவ்வுலகத்துப் பிறரே.'' (குறுந் : சுச)

தலைவனை மணந்து இல்லற வாழ்வினை மேற்கொண்டார் வெள்ளிவீதியார்; அவர்கள் வாழ்வு இனிதே கழிந்து கொண்டிருந்தது; இடையே வந்தது ஒரு பேரிடி; அமைதி குலைந்தது; தலைவன்பால் தவறான ஒழுக்கம், அதாவது பரத்தையர் வீடுசெல்லும் வழக்கம் இருப்பதாக உணர்ந்

தார் வெள்ளிவீதியார்; ஆகவே, அவனோடு தொடர்பின்றி வாழத் தொடங்கினார்; அந் நிலையைப் பொறுக்கமாட்டாத அவன், ஒருநாள் வெள்ளிவீதியாரை நெருங்கி, "ஆணையிட்டுக் கூறுகிறேன்; நான் எத்தகைய தவறும் செய்திலேன்," என்று கூறினான். ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை; மாறாக "உன்னோடு இன்றுவரை வாழ்ந்த வாழ்வு போதும்; இனி, அதை நான் விரும்பேன்; உன்னைக்கண்டதும் சிரித்து மகிழ்ந்த இந்தப் பற்கள் உடையட்டும்; எனக்கு வாழ்வும் வெறுத்துவிட்டது; ஆகவே என் உயிரும் அழியட்டும்," என்று கடுஞ்சொற்களை அவன் மீது அள்ளி வீசிவிட்டார்.

"நான் தவறு செய்யவில்லை; அவளிடத்தில் அதை ஆணையிட்டு அறிவித்தேன்; அவள் ஏற்க மறுத்துவிட்டாள்; இனி இங்கிருந்து பயனில்லை," என்று எண்ணி எங்கோ சென்றுவிட்டான் அவன்; பல ஆண்டுகள் ஆயின; வெள்ளிவீதியார் உள்ளத்தில் அவன் தவறு செய்திலன் என்ற எண்ணம் மெல்ல மெல்லத் தோன்றிற்று; உடனே, அவன்பால் பண்டேபோல் அன்பும், இரக்கமும் உண்டாயின; உண்டாகி யாது பயன்? அங்கிருந்தால்தானே அவனையடையலாம்? அவன்தான் எங்கோ சென்றுவிட்டானே; என்ன செய்வார்? பாவம்! நிலவைக் காண்கிறார்; கடல் போல் பரந்த அதன் பேரொளி தன் உயிரை வாட்டுவதை உணர்கிறார்; ஊரில் விழா நிகழ்வதைக் காணுகிறார்; விழாக் காணக் காதலனும் காதலியுமாய்ச் செல்வோர் காட்சி, தம் கண்ணை உறுத்திக் கவலையைப் பெருக்குவதை உணர்கிறார்; பொழுதுபோக்கப் பூஞ்சோலைக்குப் போகிறார்; அங்கே தம் துணைவியோடிருந்து தேன் உண்ணும் வண்டுகள் தம் வருத்தத்தை வளர்ப்பதை உணர்கிறார். எங்குச் சென்றினும் அவருக்கு அமைதியில்லை; உலகமே தம்மோடு பகைகொண்டு போரிடுவதாக நினைக்கிறார்; அழுகிறார்; தம் தோழியை அழைத்து "என் காமம் பெரிதே; களைநரோ இலரே; நான் யாது செய்வேன்!" என்று கவலைப் பட்டார்.

அவர் கவலையும் கண்ணீரும் கண்ட தோழி, அவருக்கு ஊக்கம் பிறக்குமாறு "அம்மா! அவர் எங்கே போய்விடுவார்? நிலத்தைக் குடைந்துகொண்டோ, மேகத்தில் நுழைந்தோ, கடலைக் கடந்தோ மறைந்துபோயிருக்க மாட்டார் அவர்; இந்த உலகில்தானே எங்கேனும் இருக்கப் போகிறார்? ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும் தேடினால் அகப்படாமலா போவார்? உறுதியாக அகப்படுவார்; அவரைத் தேடிப் பிடித்துவிடலாம்; நீ கவலை கொள்ளாதே," என்று கூறித் தேற்றினாள்:

"நிலந்தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்;
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ, நம் காதலோரே?"
(குறுந்: ௱௩௰).

தோழி கூறிய அச்சொற்கள் அவருக்கு ஊக்கம் அளித்தன; தலைவனைத் தேடிக் காண்பது தம் கடனே என்பதை உணர்ந்தார்; அந்நிலையில், கணவனை இழந்து, கடுந்துயர் அடைந்து, அவனைத் தேடிக் காண எங்கெங்கோ அலைந்து அலைந்து துயர்உற்ற ஆதிமந்தியார் அவர் மனக்கண் முன்வந்து நின்றார்; சிறிது அச்சம் உண்டாயிற்று; அவரைப்போல் நானும் அலைந்து துன்புறவேண்டுமே! என்று ஏங்கினார்.

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ?"
(அகம்: ௪௫)

என்று ஏங்கினார். என்றாலும், தலைவன்பால் கொண்டுள்ள பெருங்காதல், அவனைத் தேடுவதால் வரும் துன்பத்தை மறக்கச் செய்தது. புறப்பட்டார் வீட்டை நோக்கி; எங்கெங்கோ அலைந்தார்; ஆனால், அந்தோ! அவர் முடிவு என்னையிற்று என்பதை அறிய முடியவில்லை; வெள்ளி

வீதியார் கணவனைத் தேடி அலைந்தார் என்பதை ஔவையார் தம் பாட்டொன்றில் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்:

"வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே."

வெள்ளிவீதியார் பாடிய பாக்களுள், தலைமகன் கூற்றாகவரும் செய்யுளொன்று சிறந்த ஓர் உவமையினைப் பெற்றுள்ளது.

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணிடத்தே காதல் கொண்டான்; அவளைப் பெறவேண்டும் என்ற வேட்கையால் அறிவு மயங்கினான் போலானான்; தன் கடமை யாது என்பதையும் மறந்தான்; இந்நிலை கண்டான் அவன் நண்பன்; நகுதற்கு அன்று நட்டல்; தவறு காணின் இடித்துக் கூறித் திருத்துவதற்கே என்பதை உணர்ந்தவன் நண்பன்; ஆகவே, "உன் போக்கு தகாது" என்று நண்பனைக் கடிந்தான். அது கேட்ட இளைஞன், "தவறு கண்டு இடித்துக் கூறித் திருத்த முயலும் நண்பரே! நும் செயல் கண்டு மகிழ்ச்சி; நன்றி; ஆனால், இடித்துக் கூறித் திருத்த முயலும் நீ, என்னைப்பற்றி வருத்தும் இந் நோயைப் பெருகாமல் தடுத்து நிறுத்த வல்லையாயின் நன்று; அது பரவுவதைத் தடுப்பது என்னால் இயலவில்லை," என்று கூறினான். தடுக்க முடியா நிலையில் பரவும் காமநோயினை விளக்க ஓர் உவமையினைக் காட்டுகிறான்.

ஞாயிறு தன் முழுக்கதிர்களையும் விட்டுக் காய்கிறான்; அஞ் ஞாயிற்றின் ஒளியால் வெம்மையுற்றுக் கிடக்கிறது ஒரு கற்பாறை; அக் கற்பாறைமீது வெண்ணெயைக் காய வைத்து, அதைக் காத்து நிற்குமாறு ஒருவனை நியமித்துள்ளார்கள்; அவனோ, கைகள் இரண்டும் அற்ற முடவன்; பேச முடியாத ஊமை; ஆகவே, வெண்ணெய்க்குக் கேடுவந்தால், கையில் எடுத்துக்கொண்டு காப்பதோ, பிறரைக் கூவி அறிவிப்பதோ அவனால் இயலாது; அத்தகையான் காத்துக் கிடக்கிறான் வெண்ணெயை; வெயிற் கொடுமையால் வெண்ணெய் உருகிக் கீழே ஒழுகிப் பரவத்

தொடங்கிவிட்டது; அவனும் பரவிப் பாழாவதைப் பார்க்கிறான். ஆனால், பரவிப் பாழாவதைக் கையால் தடுக்கவோ, பிறர்க்கு அறிவிக்கவோ அவனால் முடியவில்லை; இந்தக் காட்சியைக் காட்டிவிட்டு, அக் கையில்லா ஊமை காக்கும் வெண்ணெய் போன்றது என் காமநோய் என்று கூறினான்; இதனால், "வெண்ணெய் உருகிப் பரந்து ஓடுவதைப் பார்ப்பது தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாத கையில் ஊமையைப்போல், காதல் நோய் பெருகி வருத்துவதைப் பார்த்துக்கொண்டிருப்பது தவிர, அதைத் தடுத்துக் கொள்வதோ உன்னைப்போன்ற நண்பர்களுக்கு உணர்த்தி வழி தேடுவதோ என்னால் முடியவில்லை; யாது செய்வேன் யான்?" என்று தன்நிலை விளக்கியவாறு காண்க.

"இடிக்கும் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்று மன்தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே."
(குறுந்: ருஅ)

வெள்ளிவீதியார் பாடல்கள் இது போன்ற உவமைகளாலும், மணம் பேசவரும் பெரியவர்கள், கையில் தடியும், தலையில் துணியும் உடையராய் வருவர்; அக்காலத்தே தமிழகம் பல நாடுகளாகவும், நாடு பல ஊர்களாகவும், ஊர் பல குடிகளாகவும் பகுக்கப்பட்டு இருந்தது என்பன போன்ற செய்திகளாலும் சிறந்து விளங்குகின்றன.

## உகூ. வெறிபாடிய காமக்கண்ணியார்

இவர் இயற்பெயர் காமக்கண்ணியார்; இது காமாட்சி என்ற வடசொல்லின் தமிழாக்கம். பாடிய பாட்டின் சிறப்பிற்கு ஏற்பப் பெயர் தருவது பண்டையோர் வழக்கம்; பாலைபாடிய பெருங்கடுங்கோ, கோடைபாடிய பெரும்பூதன் என்ற பெயர்களைக் காண்க. இவர், வெறியாடலை விளங்கப் பாடிய காரணத்தால், வெறிபாடிய காமக்கண்ணியார் என்று அழைக்கப்பெற்றார்.

ஒரு பெண், ஆண்மகன் ஒருவனோடு காதல்கொண்டு வாழ்கிறாள்; அவர்கள் உறவினை அவள் பெற்றோர் அறியார்; இடையே, அவன், அவளிடத்தே வருவது சில காரணத்தால் தடைப்படுகிறது; அதனால், அவள் தாங்காத் துயர்கொள்ளுகிறாள்; கவலைமிகவே உடல்தளர்ந்து நோயுற்றாள்போல் ஆகிறாள். தன் மகளின் நிலையைத் தாய் நோக்குகிறாள். "ஐயோ! என் மகள் இவ்வாறு தேய்ந்து போகிறாளே" எனத் தேம்புகிறாள்; ஊரில் உள்ள சில முதிய பெண்களிடத்தே தன் குறை கூறிப் புலம்புகிறாள்; அவர்கள் கூறியவாறே, குறி கூறுவாளை அழைத்துக் கேட்கிறாள்; அவள் முறத்தில் நெல்லைப் பரப்பிப் பார்த்தும், கழற்கொடிக்காயை எண்ணிப் பார்த்தும், "இது தெய்வக் குற்றம்; முருகனுக்கு வழிபாடு செய்; எல்லாம் நன்மையாக முடியும்," என்று கூறிச்சென்றாள். உடனே தாய், வீட்டைத் தூய்மைப்படுத்தி அணிசெய்தாள்; ஊரில் உள்ள இசைக்கருவிகள் எல்லாம் அவள் வீட்டு வாயிலில் முழங்கின; வேலனை அழைத்து வந்தாள்; வேலன் என்பவன், கையில் வேலேந்திக் கடவுள் ஏறி ஆடும் பூசாரி; வந்த வேலன், கையில் காப்புக் கட்டிக்கொண்டான்; கழுத்தில் மாலை அணிந்து கொண்டான்; களத்தில் வேலை நட்டுச் சந்தனமும் மஞ்சளும் தெளித்து மாலை சூட்டினான்; ஆட்டுக்கடா அறுத்துக்கொண்ட குருதிகலந்த அரிசியைப் பலியாகத் தூவினான்; தீபதூபம் காட்டினான்; மலைகள் எதிரொலிக்குமாறு வாய்விட்டுப் பாடி முருகனை

அழைத்தான்; முருகனும் அவன்மேல் வந்து ஆடி அவன் குறை தீர்த்தான். இவ்வாறு முருகனை அழைப்பதையே வெறியாடல் என்ப.

காமக்கண்ணியார் பாடிய பாடல் ஐந்து; அவற்றுள் மூன்று அகத்துறை தழுவிய பாடல்களாம்; அம் மூன்றிலும் இவ் வெறியாடற் பொருளையே விரித்து உரைத்துள்ளார்.

"தோழி! தாய் வெறியாடத் தொடங்கிவிட்டாள்; அங்கே வேலனும் வந்து ஆடுவான்; அப்போது, 'நாங்கள் தலைவனிடத்தில் பேரன்பு கொண்டிருக்கவும், அவன் மட்டும் எங்கள்மீது சிறிதும் அன்பின்றிப் பிரிந்திருக்கின்றானே; அது ஏன்?' என்று அவ் வேலனையே கேட்போமா?" என்று தலைவி தோழியிடங் கூறித், தன், தாய், வேலன் ஆகிய இருவரின் அறியாமை கண்டு எள்ளி நகையாடுகிறாள்:

"நாடற்குக்
காதல் செய்தலும் காதல மன்மை
யாதெனிற் கொல்லோ தோழி! வினவுகம்
பெய்ம்மணல் முற்றம் கடிகொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலற் றந்தே." (நற்: உ௬அ)

இது நற்றிணைப் பாட்டு.

"தோழி! என் நோய், தலைவனைக் காணக் கொடுமையால் நேர்ந்தது என்பதை அன்னை அறிந்திலள்; ஆகவே, கைவளை கழலத் தள்ளும் என் உடல்நோய்க் காரணம் யாது எனக் கட்டுவிச்சியைக் கேட்க, அவள், "இது தெய்வத்தால் வந்தது; நெடுவேள் பேணத் தணியும்," என்று சொல்ல, அவள் ஆட்டியவாறெல்லாம் ஆடும் நம் தாய் வெறியாடத் தொடங்கிவிட்டாள். அவள் செயல் எனக்கு அச்சத்தைத் தருகிறது. இந் நோய் வேலனால் வந்தது அன்று; ஆகவே, வெறியாடுவதால் இது தணியப் போவது இல்லை; வெறியாடிய பின்னரும் இந் நோய்

தணியாமையைக் கண்டால், இவ்வூர்ப் பெண்கள் சும்மா இரார்; 'இவள் நோய்க் காரணம் வேறே என்று கொண்டு இல்லாததும், பொல்லாததும் கூறிப் பழி தூற்றத் தொடங்கி விடுவர்; அதை நான் எவ்வாறு தாங்கிக்கொள்வேன்? ஒருவேளை, வெறியாடல் கண்டு மகிழ்ந்த முருகவேள், என் நோய் தணிய அருள் புரிந்துவிட்டால், 'இவள் நோய் நம் உறவு இல்லாமலே தணிந்துவிட்டது; ஆகவே இவள் நோய்க் காரணம், நம் பிரிவு அன்று; வேறு யாதோ' என்று நம் தலைவர் எண்ணிவிட்டால், நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்; வாழேன்." இவ்வாறு தாய் செயல் கண்டு தலைமகள் அஞ்சுவதாக ஒரு செய்யுள்:

"ஆடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயின், இம்மறை
அலரா காமையோ அரிதே; அஃதான்று
அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
'செறிதொடி யுற்ற செல்லலும் பிறிது' எனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிதே."

"தோழி! என் உடல் மெலிதல் தலைவன் பிரிவால் நேர்ந்தது என்பதை அறியாது, ஊரில் உள்ள கிழங்கள் கூறியதைக்கொண்டு, தாய் வெறியாடத் தொடங்கினாள்; வெறியாடல் நிகழ்ந்துகொண்டிருக்கும் அன்று இரவு, யானையைப் பிடிக்க பாயும்புலி, பதுங்கிப் பதுங்கிச் செல்வதேபோல், நம் ஊர்க்காவலர் அறியாவண்ணம் ஒளிந்து ஒளிந்து நம் தலைவனும் அங்கே வந்துசேர்ந்தார். அவர் வரவினைக்கண்ட நான், வெறியாடுகளத்தின் நீங்கித் தலைவர் இருந்த இடஞ்சென்று மகிழ்ந்து மீண்டேன்; அதனால் என் நோய் நீங்கிற்று; இவ்வாறு தலைவன் வரவால் என் நோய் நீங்கியதை அறியமாட்டாமல், தன்னால் நீங்கிற்று என்று கூறினான் வேலன்; இவ் வேலன் அறியாமை கண்டு சிரித்துச் சிரித்து என் வயிறெல்லாம் புண்ணாயிற்று," என்று தலைவி கூறியதாக மற்றொரு செய்

யுள். இவ்வாறு, பல்வேறு கோணங்களில் நின்று வெறி யாடல் சிறப்பை விரித்துரைத்த நயம்கண்டு மகிழ்க.

"முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆரம் நாற, அருவிடர்த் ததைந்த
சாரல் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை உள்ளத்து நன்னசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனோ யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவு ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே." (அகம் : உஉ)

காமக் கண்ணியார் பாடிய புறப்பாடல் இரண்டு; ஒன்று, மதிலையும் அகழியையும் காத்துநின்ற வீரர்கள் போரிட்டு இறந்ததைப் பாராட்டும் செருவிடை வீழ்தல் என்ற துறை தழுவியது; மற்றொன்று, ஒரு வீரனுடைய குதிரை, போர்க்களத்தே ஆற்றிய ஆண்மையைச் சிறப்பித்துக் கூறும் குதிரை மறம் என்ற துறை தழுவியது.

கழக வெளியீடு — ௯௪௨

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

விலை ரூ. 1-12.

அப்பர் அச்சகம், சென்னை-1.